[illegible]

பட்டணம்.

விலை [illegible]

உ

கடவுள் துணை.

வித்வச்சிரோமணியாகிய

புகழேந்திப்புலவரவர்களியற்றிய

# சித்திர புத்திர நயினார் கதை.

ஐதிகப்படங்களுடன்

இஃது

திருவாலங்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

ஆமரம்பேடு

இரங்கசாமிமுதலியார் அண்டு சன்ஸ்

அவர்களது

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

1924.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

உ

கடவுள் துணை.

# சித்திரபுத்திர நயினார் கதை

காப்பு.

அத்தனும் அயனுமாலு மான நல்ரிஷிகள் தேவர்
நித்தமும்பலாபலன்கள் நெறியுடன் தெளிவதற்குச்
சித்திரபுத்திரனார் செனித்ததோர்கதையைப்பாட
மத்தகஜமுந்தொந்தி வயிறு நங்காப்பதாமே.

வெண்பா.

சீர்கொண்ட பூதலத்திற் சித்திரபுத்திரன்கதையைப்
பார்கொண்ட செந்தமிழாய்ப் பாடவே-யேர்கொண்ட
வார்பூத்தகோலமுலை மாதுமையாளீன்றெடுத்த
கார்பூத்தகுஞ்சரமே காப்பு.

விருத்தம்.

ஆனைமுக மொருகொம்பு மகன்றமார்புஞ் சிறுகண்ணும்
பானைபோலப்பெருவயிறும் பாங்காரபூணநூலழகும்[னே
தானேதோன்றி என துளத்திற் றபவாய்வாழும் விநாயக
நானேயுனதுபாதந்தொழுதே னுவிலுதியாய்கணபதியே.

நூல்.

திருமகிழ்ந்துவாழுமந்தச் சித்திரபுத்திரர்கதையை
விருப்பமுடன்பாட விநாயகனேமுன்னடவாய்
விக்கினவிநாயகனே வேழமுகத்தைங்கரனே
தொந்திக்கணபதியே தூயவனேமுன்னுதவாய்
கர்த்தனருள்பெற்ற கணபதியேகாத்தருள்வாய்
சத்திக்கணபதியே தையலுமைபுத்திரனே
எத்திசையும்போற்றும் இறையோன்றிருமகனே
பத்தியுடன்தொழுவோர்க்குப் பாவங்கள் தீர்த்தவனே
சித்திரபுத்திரர்கதையைச் செப்பவருள்வாயே
சீராகவாழுஞ் சித்திரபுத்திரர்கதைக்கு

நேராகவந்துதவு நீலமயில்வாகனனே
அந்தரியேதாயே அயனாரிடத்திருக்கும்
சுந்தரியேவெள்ளை நிறச் சோதியாய்மூன்னுதாய்
பத்தியுடனெப்பொழுதும் பாங்காகவந்துதவாய்
பத்திமிகவுண்டாகப் பொற்கொடியேவந்துதவாய்
பத்தியுடன்யானும் பாடுகிறேனிக்கதையை
ஆதியரனும் அச்சுதனும்வேதாவும்
நீதில்லாமுப்பத்து முக்கோடிதேவர்களும்
எல்லோருமாக யிருக்குமோர்நாளையிலே
சித்தமகிழ்ந்து செப்புவாரீசுரரும்
நன்றாகி துதெரிய நடுவெழுதுவார்கணக்கர்
ஈசனருள்பெற்ற எமதருமர் தன்னிடத்தில்
நேசமுடன்கணக்கு நிச்சயமாய்த்தானெழுத
புண்ணியஞ்செய்தவரைப் பூதலத்தில்வாழ்பவரை
எண்ணரியபாவ மியற்றியோர்தங்களையும்
ஒன்றுந்தவறாம லுள்ளபடிதானெழுத
வெற்றிபுனை நற்கணக்காய் விரைந்தேதெழுதிவர
அந்நகரிநாட்டுக்காம் அதிகாரியாங்கணக்கர்
முத்திரைநாட்டுக் கெங்குமெழுதற்கணக்கர்
நாட்டுக்கணக்கும் நயனார்பெருங்கணக்கும்
வட்டப்புரத்தில் எழுதுமெழிற்கணக்கர்
நல்லார்குணத்தை நடுவெழுதுநாயகர்
பொல்லார்குணத்தைப் பிரித்தெழுதும்புண்ணியனார்
தன்னை நினைத்தவர்க்குந் தன்னியமஞ்செய்தவர்க்கும்
இன்னிலத்திற்செல்வம் இசைவாகத்தானருள்வார்
எல்லோரும்நீங்க ளியல்பாகத்தான்கேளும்
உத்தமனார்தன்கதையை உவப்பாகத்தான்கேளும்
அத்தன்திருக்கதையை யன்பாகத்தான்கேளும்
மன்னவனார்தன்கதையை மகிழ்ந்திருந்துகேட்டவர்கள்
தென்னவனார்தன்கதையைத் தினமும்வந்துகொண்டாடி
பரமனார்தன்கதையைப் பக்தியுடன்கேட்டவர்கள்
பார்வேந்தன்தன்கதையைப் பண்புடனேகேட்டவர்கள்
சித்திரபுத்திரர்கதையைச் சிந்தையுடன்கேட்டவர்கள்
புத்திரங்கள்சொல்லாம லுண்மையாய்க்கேட்டவர்கள்
புத்திரபாக்கியங்கள் பொருந்தியேதான்வாழ
வெகுமானமென்றுமீசரரும் விஸ்தாரஞ்செய்தகதை



இனிமேல்நடத்துகிறோம் இப்போதுசெய்யும்வகை
சித்திரைக்குச்சித்திரையிற் சீராய்பவுர்ணையில்
விரதமதுதானிருந்து வெண்பட்டுத்தானுடுத்தி
புண்ணியமான பூதானந்தான்கொடுத்து
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகத்தான்கொடுத்து
பூதானம்கோதானம் வஸ்திரதானங்கொடுத்து
பந்தல்விதானம் பாங்காகத்தான்போட்டு
தோரணங்கள்கட்டியே துலங்குமேற்கட்டிகட்டி
வித்தைவிநாயகரை விரைந்துமேதான்போற்றி
செய்யும்வகையதற்கு சிறக்கவேவைத்தபின்பு
பூரணகும்பம் பொன்னின்குடத்தில்வைத்து
வஸ்திராபரணங்கள் வகையுடனேதான்சாத்தி
தெட்சணைகள்வைத்து திருமாலைகள்சாத்தி
சந்தனக்குங்குமஞ் சவ்வாதுடனேசாத்தி
வாழைக்கமுகுடனே வான்கரும்புதானிறுத்தி
பொன்னின்விளக்குவைத்துப் பூமலர்கள்தான்சாத்தி
வாழையிலைபரப்பி வைக்கும்வகைக்கனிகள்
வாழைப்பழமும் வருக்கைப்பலாச்சுளையும்
மாங்கனியுந்தேங்கனியு மற்றுமுள்ளநற்கனியும்
தேமாங்கனியுடனே யெழுங்கதலிநற்பழமும்
விளாங்கனியுஞ்சர்க்கரையும் விரவிமிகப்படைத்து
கடலைசிறுபயறுங் காராமணிப்பயறும்
கடலைபொரியவலும் வேண்டும்பணியாரம்
தேனுந்தினையும் திறமாகத்தான்படைத்து
கரும்பொடிள நீருங் கற்கண்டுநற்கனியும்
பொருவிளங்காயுடனே பிட்டமுதுள்ளருண்டை
கொழுக்கட்டைதேங்காய் கொண்டுவந்துதான்படைத்து
தோசைவடைஇட்டிலியுந் தோன்றுமிகப்படைத்து
அப்பமதிரசமும் ஆனதொருதேன்குழலும்
பாயாசமும்பானகமும் பதிவாகத்தானும்வைத்து
அன்னமிகசமைத்து ஆன்பாலன்முன்னேவைத்து
புத்துருக்குநெய்யும் பொரிக்கறியுள்ளதெல்லாம்
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தான்படைத்து
அத்தனார்தம்மருளால் அமுதுசெய்யப்பண்ணுவித்து
நைவேத்தியஞ்செய்து நியமமுடன்பூசித்து
தோத்திரங்கள்செய்து தொழுதுமிகப்பணிந்து

### விருத்தம்.

கங்கையைத்தரித்தோன்பாலா கரிமுகாவுன்றன்பாதஞ்
சங்கையாய்த்தாணியோர்கள் தயவுடன்போற்றிசெய்ய
மங்களமாகவாழ்ந்து வந்தெனைக்கருளுநாதா
யெங்குமாநிறைந்தாய் நீயு மிறையவாபோற்றிபோற்றி.

### வசனம்.

இப்படிக் கணபதியைத் தோத்திரஞ்செய்து அருச்சனை நைவேதன முதலானதுஞ் செய்து தாடதிபா கொடுத்து அப்பால் மேற்கதையை நடத்தவேண்டியது.

### நடை.

சங்கரனார்மெய்க்கத் தானெழுதுமெய்க்கணக்கர்
சித்திரபுத்திரரைச் சீருடனே தானிருத்தி
பீதாம்பரஞ்சாற்றிப் பெருப்பவட்டஞ்சாத்தி
சீதனங்களான செண்பகமுந்தான்சாத்தி
சுத்தாதியுள்ளதெல்லாந் தோன்றமிகச்சாத்தி
அறிவால்முறைப்படியே அர்ச்சனைகள்செய்தபின்பு
வெற்றிலையோடும் விளங்கும் அடைக்காயும்
உள்ளமகிழ்நைவேத்தியம் உவந்துமிகப்படைத்து
புத்தகத்தினேடிலங்கும் பொன்னிலெழுத்தாணியுடன்
பூதலத்திலுள்ள புதுப்பண்டமுள்ள தெல்லாம்
இஷ்டமுடனேபடைத்து எல்லோருமிக்கதையை
தெண்டனிட்டேனிக்கதையை செப்பவேவேணுமென்
பத்தினியுடன்கேட்கப் பகாலுற்றவிக்கதையை
ஓங்குபுகழ்மாதர்மைந்தர் உண்மையுடன்கேழ்க்கச்
சொல்லுமையாவென்று துன்பமறக்கேழ்க்கலுற்றார்
கல்லுமுருகிக் கருத்துடனேகேழ்க்கலுற்றார்
மன்னும்புகழுங்கள் மங்கிலியந்தான்வழங்க
மலடிகளெல்லா மனமுருகித்தான்கேட்க
அகப்பாவம்விட்டு அன்புடனேகேட்டவர்கள்
புண்ணியங்கள்செய்து புதுமையுடன்கேட்டவர்கள்
நல்லநினைவுவைத்து நன்றாகக்கேட்டவர்கள்
கதைமுழுதுங்கேட்டவர்கள் கயிலைப்பதம்பெறுவார்
வந்தவகைக்குறைவு நீங்குமென்றீசுரனார்
பிச்சையிடாத பெரும்பாவியானவரும்
தர்மவாய்ப்பல் லியர்கள் தடுக்கசெய்தவர்கள்



கள்ளிகளாயுள்ளார் கணவனுரைதப்பினவர்கள்
பிச்சையிட்டுண்ணாத பெரும்பாவியானவர்கள்
ண்டுணிகள்சொல்லுங் கொடும்பாவியானவர்கள்
ற்று நின்றுகேட்டு உறவைமுரித்தவர்கள்
லநினைவுவைத்த பாவிகளானவர்கள்
காற்றவரைத்தள்ளிவைத்த கொடும்பாவியானவர்கள்
ற்றவரைத்தேடி வாழ்ந்திருக்கும்மகாபாவி
ளையழிக்கும் பெரும்பாவியானவர்கள்
டையிட்டுநித்தந் தன்பேச்சுமேலிடவே
ண்டவனைப்பேணாத கொடும்பாவியானவர்கள்
தன்வீட்டைசாத்தி யசல்வீட்டிற்போயிருந்து
பின்னங்கள்பேசும் பெரும்பாவியானவர்கள்
பசித்தாரிருக்கப் பார்த்திருந்தபாவியர்கள்
இத்தியாதிபேர்களெல்லாம் இக்கதையைக்கேளாமல்
கடக்கவே நில்லுமென்று கணக்காயுரைத்தமொழி
பூமிதனில்விளைந்த புதுமண்டபம்வந்ததென்றான்
பெரியவர்முதலானவர்க்குப் பிசகாமல்தானீந்து
வேதியர்க்கீய்ந்து விரதமதைக்கொண்டாடி
கேட்டவர்களெல்லாங் கிளைசுத்தம்வாழ்ந்திருப்பார்
காரணமாய்நடந்த கதையைநடத்துகிறோம்
பதிவிரதையாயிருந்து பாங்குடனேகேளுமென்றார்
பக்தியுடனேகேட்டாற் பாடுகிறேனினிகேளும்
ஈசனருளால் எமதருமர்தன்னருகே
நேசமுடன்கணக்கு நிச்சயமாய்த்தானெழுத
புண்ணியஞ்செய்தவரை பூதலத்தில்வாழ்பவரை
பாவங்கள்செய்வாரைப் பகுந்துகணக்கெழுத
வேணுமென்றுசொல்லி விமலனார்செய்தகதை
கயிலாசமீதிற் காரணமானகதை
இப்படியேதானுமங்கே நடக்குந்தருவாயில்
தெய்வலோகபட்டணத்திற் றிறமாய்நடந்தகதை
நன்றாகச்சொல்லுகிறேன் நாடெல்லாந்தானறிய
இந்திரனிந்திராணியுட னிருந்துமிகவாழ்கையிலே
புத்திரவாசை பிடித்துமிகப்புலம்பி
நடந்தகதைசொல்லுகிறோம் நன்றாகக்கேளுமென்றார்
நல்லார்பகவு மிறையோன்கொடுத்திருக்க
பிள்ளையில்லாவாழ்வு பெருமையடையாதென்று

இந்திராணியம்மை பெண்கொடி
சொன்னவசனத்தைச் சொல்லுகிறேன்கேளுமென்றார்
பட்டிபலுகாது பாவங்கள்சேராது
ஆனாடிமையகன்று ஆகாசம்போய்விடுங்காண்
ஆபரணமியெல்லாம் அழித்திடுங்காண்மன்னவரே
சித்திரக்காரியங்கள் சிதறியேபோய்விடுங்காண்
தருமங்கள்செய்யவென்று தானினைந்தாரிந்திரரும்
கன்னிகாதானங்கள் கருத்தாகச்செய்தார்காண்
மாதானங்கோதானம் வஸ்திரதானங்களும்
விமரிசையாய்த்தருமங்கள் வெகுபடிசெய்தபின்பு
தவசுசெய்யவேணுமென்று தானினைந்தாருத்தமனார்
உத்தமருமுத்தமியும் உலகாண்டோன்தனை நினைந்து
தபசுகள்செய்தகதை சாற்றுகிறோமினிகேளும்
இந்தக்கதையை யெள்ளளவுந்தப்பாமல்
கேட்டவர்களெல்லாம் கிளைசுற்றம்வாழ்ந்திருப்பார்


விருத்தம்.

சித்திரபுத்திரர் கதையைச் சிறப்புடனே கேட்கநோன்பு, பத்தியா யிருந்தோரெல்லாம் பழவினை நீங்கிநல்ல, அத்தர்தன் பதியைச்சேர்ந்து அத்துடன் சேர்ந்துவாழ்வார், பத்தியாய் நூற்றால் சொல்லும் பகர்ந்தனர் நூல் வல்லோரே.

வ-ம். அதெப்படியென்று கேட்பீரானால் அனேகமான திரவியங்கள் பூமிகள் முதலான சகல பாக்கியங்களிருந்தாலும் மைந்தனில்லாத வாழ்வு வாழ்வல்லவென்று இந்திரனும் இந்திராணியும் வெகு மனஸ்தாபமாய்க் கிலேசப்பட்டுத் தங்கள் பொக்கிஷக் களஞ்சியத்திலுண்டான திரவிய முதலானதையெல்லாங் கொண்டு அநேகதருமங்களைச்செய்து பின்பு பார்வதிசமேதராகிய ஈஸ்வரனை நினைத்துத் தவசுசெய்யச் சித்திரபுத்திர நயினார் வந்துபிறந்து அவதாரசித்தாக நடந்த கதையானதால் இந்த கதையை மனம்வைத்து அன்பாகப் பத்தியுடனே கேட்டவர்களுக்கு வரும் பலத்தை இனிமேல் விபரமாகச் சொல்லுகிறோம் கேட்பீர்களாக.

நடை.

உத்தமருமானோர் உயர்ந்தகுடியானோர்
பத்தினிகளானவர் பலவின்னைதாயானோர்



சத்திவெம்பொருந்திக் காட்டிகராய்வாழ்ந்திருப்பார்
நீடூழிகாலம் நேசமதாய்வாழ்ந்திருப்பார்
மங்கிலியம்வாழ்ந்து மகிழ்ச்சிமிகவுண்டாகும்
செல்வமிகவுண்டாகிச் சிராகத்தானிருப்பார்
ஆழ்கடல்வத்திடினும் அவர்புகழ்தான்குன்றாது
மாற்றில்லாச்செம்பொன் மதிக்குமவர்வசத்தில்
புண்ணியவானானாலும் போதமுள்ளோரானாலும்
மன்னனுமமந்திரியுள்ளளவும் வாழ்வுமிகவுண்டாகும்
சித்திரைக்குச்சித்திரையிற் சொற்பவுரணையில்
சித்திரைமாதந் திருநோன்புவைத்திலே
உத்தமரைநோக்கி யொருநோன்புசெய்தவர்கள்
மைந்தர்களானாலும் மடந்தையர்களானாலும்
எந்தகுலத்தில் எவர்களானாலும்
தந்தைதனைக்கொன்ற பெரும்பாவியானாலும்
நித்தமதுவுண்ணும் நீசரேயானாலும்
இந்தக்கதையை இயம்பாய்க்கருத்தில்வைத்து
லோகத்தியற்கையொன்று யோசியாமலேயிருந்து
இணங்கும்படிமனதி லெந்நேரமும்நினைத்தால்
அந்தேகாணென்புக் கவரேவெளிப்படுவார்
இந்திரனைப்போலே இனிதாகவாழ்வுமுண்டாம்
அந்த[illegible]மொல்பாதத்தில் அழகுடனேவாழ்ந்திருப்பார்
சிவனருளுமுண்[illegible]ாகும் திங்கொருநாள்வாராது
நம்முடையசெல்வங்கள் நாள்தோறுமுண்டாகும்
பின்னென்பிராக மூக்கடனேயானாலும்
இன்னென்பிறந்தவர்க ளிகபரமுந்தான்பெறுவார்
முத்திபெருள்கொடுக்கும் மோகங்கள்தாநீங்கும்
வல்வினைகளானதெல்லாம் வழிவிலகித்தான்போகும்
நல்லதொருபுண்ணியங்கள் நாள்தோறுமுண்டாகும்
ஆராகிலுமிதனை யன்புடனேகேளுங்கள்
நயினார்பிறப்பையினி நன்றாகச்சொல்லுகிறேன்
கயிலாசத்தில்நடந்த காரணத்தைச்சொல்லுகிறேன்
சிவனார்கயிலையினிற் சிறப்பாயிருக்கையிலே
அரனார்மனமகிழ்ந்து ஆனபராசத்தியுடன்
கேளாயுமையவளே கிருபையுடன்சொல்லுகிறேன்
ஊழியின்விதிப்படியே யுள்ளபடியேயுலகில்
அவரவர்செய்தபுண்ணிய பாவங்கள்தானறியார்

நாமேயறியவென்றார் ஞாயமில்லைகண்டாயே
நம்மைநினையாமல் நான்தோறும்வைத்தவர்கள்
சிவசிந்தை நயில்லாத சென்மங்களாவார்கள்
மூன்வினையைவிட்டு மோசம்பெறுவதற்கு
வேணவரங்கொடுத்து மேதினியிற்றானவர்கள்
அசுரர் அரக்கர் அநேகமுதலானோர்
சத்திசிவமறந்து தானிடுக்கஞ்செய்வதனால்
அப்படியேவாராமல் அதற்கானசெய்தியொன்று
ஒப்பில்லாப்பெண்ணே யுமையவளே நீகேட்பாய்
செப்பமுடன்கணக்குச் சிராகத்தானெழுதி
திட்டமுடன்செய்து சிட்சைகள்தான்செய்வதற்கு
நாமேகணக்கெழுத நல்லதல்லகண்டாயே
மூத்த பிள்ளைகணபதியை மொழிவது நல்லதல்ல
மூலமாயிவ்விடத்தில் மூத்தமகன் தன்னைவைத்தோம்
கோலமயில்வாகனனுங் கொடுஞ்சூரன்கண்டாயே
சூரரைக்கொல்லவே சேரதனைக்குவைத்தோங்காண்
சாலக்கணக்கெழுதான் தகப்பன்குருசாமி
கோலப்பிரமாவைக் கொண்டெழுதும்வைத்தான்
அவனைத்துதித்தவர்க்கு அநேகவரங்கொடுப்பான்
புவனங்கணக்கெழுதப் புகர்சொல்வானுன்மகனும்
பாலனிருந்து பழிக்கிடமாமேறும்
மக்களிருந்து மனுநீதிதானெழுத
இந்தவகைதனக்கு மெழுதிவருப்படிக்கு
நல்வினைகள் தீவினைகள் நன்றாயெழுதிவர
எந்தன்வினையானாலும் ரியல்பாகவுள்ளபடி
கணக்குப்படியே கருமங்கள் தான்போசிக்க
பிறர்சாட்சியால்கணக்குப் பிரபஞ்சத்தானிருக்கும்
என்றானர்சொல்ல வியல்பானபார்வதியும்
நல்லதுதான்சொல்லபத்தீர் நாயகரேயுங்கருணை
திருவுளத்துக்கேற்றபடி செய்யுமென்றாள்பார்வதியும்
இருந்துமிகப்பேசி யீசாருமேதுசொல்வார்
பூமாதைநோக்கிப் பொற்பலகைகொண்டுவர
என்றபொழுதே யியல்பானபொற்பலகை
நன்றெனவேபார்வதியுந் தானன்றான்புலவைக்கவேனே
பார்வதிகொண்டுவரப் பரமனுமேதுசொல்வார்
சித்தம்பெருந்து சித்திரத்தோற்றிடவே



அந்தப்படியே யம்மையுமைகொண்டுவர
சாதிலிங்கக்காரன் தவளநிறபச்சையுடன்
நீலமணிவெள்ளையுட னெறியாகச்சேர்த்துடனே
பால்நிறமுமாகப் பாவித்தார்பலகையின்மேல்
சாலவேதம்மைப்போ லாகவென்றுதயாநிதியும்
கோலமுடனிருக்கக் குறித்தாரேசித்திரத்தில்
பஞ்சவர்னமாகப் பாகமதுதப்பாமல்
திருக்கரத்தாற்றானுஞ் சிறப்பாயெழுதினரே
தம்மைப்போலிருக்கவென்று தானேயெழுதவுற்றார்
உருவையெழுதி புன்மையுடன்தான்பார்த்து
திரிபுராயேதீயுஞ் சுந்திரத்தைப்பாரெனவே
இந்தபுகல்வாரை நீ யிப்போதழையுமென்றார்
அழையுமென்றபோதே யாறுமதைப்பார்க்க
ஆறுமறியாத அரனார்தம்பொருளால்
சித்திரத்திலேயுதித்த புத்திரனுகவர
வாராய்மகனேயென்று மலர்க்கரங்கள் நீட்டிடவே
கைகாட்டிமுகங்காட்டி கருவுருவாய்த்தானிரண்டு
கருணைவிழிநோக்க மாதாகையிற்பிறந்தனரே
பிறந்தாரேயந்தமனூர் வேணவரம்பெருக
பணிந்தவர்க்கேயருள்கொடுக்கும் பரமனதுசந்நிதியில்
தெண்டனிட்டுவாய்புதைத்து சென்னியின்மேற்கைகுவித்து
நிற்குமந்தவுத்தமனை நீலகண்டர்தான்பார்த்து
எக்கோடிகாலம் இயல்பாகவுள்ளமட்டும்
அக்காலம் நீடூழி யாகவேதானிருப்பீர்
பல்லாயிரங்கோடி பகிரண்டமுள்ளமட்டும்
என்றுக்குமென்னைபோ லெங்குந்நிறைந்திருப்போம்
பூவுக்குள்வாசம்போற் பொருந்தியிருப்போம்நாம்
பரைக்கும்நமக்குமிது பண்புதான்கண்டீரே
ஒன்றாயிருக்குமிட மொருவருந்தாமறியார்
அறிவார்தவமுடைய ரடையாளஞ்சொல்லுகிறோம்
நன்றாயுரைக்கிறோம் நன்மகனேகேளப்பா
மோட்சவழிசத்தியுடன் மொழிந்தோமதுபோலே
மோட்சவழியுபதேச மொழிந்தோமேயின்றுனக்கு
எங்களுடமனதி லிருக்குநினைவுதானும்
தேவாசுரான் ரிஷிகள்முனிமாதர்கள்
எழுப்புநடையாளதனில் வெல்பத்துதானுறு

ருயிரம்யோனிபேத மாகுமுயிர்களெல்லாம்
செய்கின்றதீதல்லாத் திதமாமெழுதுமென்றூர்
கருமமாம் நற்கணக்குங் கட்டாயெழுதுமென்றூர்
ஆரூர்திருக்காத்தா மையாயனந்தான் திட்டி
கயிலாசத்துயிரே கணக்கெல்லாமெழுதுமென்றூர்
மகமேருநற்கணக்கும் வைகுண்டநற்கணக்கும்
பிரமலோகக்கணக்கும் பின்புமற்றுமுள்ளதெல்லாம்
எல்லாக்கணக்கு மெழுதவருள்கொடுத்து
உமையவருந்தானு முன்னையாய்த்தானழைத்து
ஆபரணப்பெட்டகத்தை யழைப்பித்தாரந்நேரம்
பூட்டுத்திறந்து புதுப்பட்டத்தான் கொடுத்துக்
கலிற்சிலம்பணிந்து கனககமணிதன்னையிட்டு
முன்கைமுதாரி முன்கைவளை தான்சாத்தித்
தங்கச்சரப்பளியுந் தரித்துவயிரமும்
காதிலேகுண்டலங்கள் கதிரொளிபோற்றான்சாத்தி
முப்புரிநூலு முழுவயிரப்பதக்கமுடன்
தும்பிப்பதக்கமுடன் சூடாமணிக்கவசம்
வில்லைச்சரப்பளியும் மெய்யபணியாபரணம்
பாதமுடிவரைக்கும் பலபணிகள் தான்பூட்டி
பார்வதியுமீசுரரும் பார்த்தார்கள் கண்குளிர
அரனுடையதிருவுளத்தா லண்டவரையாறுமுத்து
திருநீறுமக்காப்புமிட்டுச் சித்திரபுத்திரன்றனையே
உபதேசங்காதிலே யுரைத்தாரேபுத்திரற்கு
அதிகாரஞ்செய்கணக்கு அய்யனே தந்தோமென்றூர்
முத்திரைமோதிரத்தினமுஞ் சித்திரமாய்க்கையிலிட்டு
நீடூழிகாலங் கணக்கெழுதுமென்றனரே
உத்தமருமங்கே யுடனவனைக்கிதெண்டனிட்டு
அம்மையுமைபார்வதியை யப்போதெண்டனிட்டா
தெண்டனிட்டுநின்றதொரு சித்திரபுத்திரனை
தாவியெடுத்து மகனேயென்றணைத்து
ஆருமரியாதார் அரும்பொருளாய்த்தம்மகனை
இருடீருஞ் சிவனுருட்டாடுகுதிட்
பாரும்விசும்புமிந்தப் பான்மொழிகள் தப்பாமல்
பல்லாயிரங்கோடி பலன்கணக்குத்தானெழுத
சொல்வார்கணக்குச் சுருதிமுதலுண்டாக்கி
கருமதிமுன்வந்து கணக்கிற்பிலைசரியும்



எழுதித்தொகைபடுத்தி யியற்றும்பயன்படியே
பழுதுகள்வாராமற் பார்த்தவுடனவ்வேடு
எடுத்தவர்கள்பேசாமல் தன்னிமலேசாட்சிசொல்லும்
இச்சாட்சிவந்து இயல்பாய்க்கணக்கெழுதும்
உனக்குப்பிரயாசம் ஒன்றுமில்லையென்றுசொல்லி
கணக்கராயிருந்து கருவேலங்கைக்கொள்ளும்
என்றுகருவேலம் ஏற்புவித்தாரந்நேரம்
பண்டுமுன்னுளுள்ள பழையகணக்குள்ளதெல்லாம்
ஆயிரம்பதமமைக்க வொன்றுதபட்டோலை
தப்பாமலேயெழுத தார்வேந்தர்தான்கொடுக்க
சித்திரபுத்திரனூர் சிமானூர்தன்னிடத்தில்
வாங்கினூருத்தமனூர் வையகம்வாழவென்று
ஆன்றோடக்கணக்கு மனுவும்வகைவிபரமாய்
இருந்துகணக்கு வெழுதுகின்றூருத்தமனூர்
சிவனூர்தம்வாசலிற் சிறப்பாயெழுதுகிறூர்
அய்யனுமுமையுங்கூடி யானநற்கணக்கராக
மெய்யராய்ச்சிருட்டித்தார்கள் மேதினியுள்ளமட்டும் [ம்
செய்யனுங்கணக்கைப்பார்த்து செய்திகள்வாருவண்ண
தையலாள்பாகன்வாசற் றருங்கணக்கெழுதலுற்றூர்

எப்படியென்றூல் கயிலாயத்திலே சுவாமியும் பார்வதியும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணூயிரம் ரிஷிகளும் மற்றுமுள்ள தபோதனர்களும் நிறைந்திருக்கும்போது அண்ட புவனங்களெல்லாம் பாவபுண்ணியபலன் தெரியவேண்டி தம்முடைய குமாரர்களிருபேருங் காரணமான கதைகள் சிலது நடக்க வேண்டியதற்கு அதிகாரிகளாகவேண்டியதால் மற்றுமுள்ளபேர்கள் இதற்கு ஆகத்தக்கவர்களாருமில்லையென்று சுவாமி பரமேஸ்வரர்தானே யோசித்து உமையையழைத்து தங்கப்பலகை யெடுத்துவரச்சொல்லி உருவமைக்க அதை உமையாள் கண்டு அதிசயப்பட்டு கருவுருவாய்ப் பேசும்படி கிருபைபாலிக்க வேணுமென்றறிவிக்க அப்படியே கிருபைசெய்து வித்தையமந்திரமுபதேசித்து சித்திரபுத்திரனென்று பேர்வைத்து ஆடையாபரண முதலானதும் பூட்டி மகனைக் கட்டிமுகர்ந்து அண்டபுவனங்களிலுண்டான முன்னுள் கணக்கும் கருவேலமும் விஷ்ணுமூர்த்தி பிர்மா முதலானவர்களிட

றள்ள கருவேலமும் பொக்கிஷமுதலானதும் பாவபுண் ணியபலங்களைக்குங்கொடுக்க உமையாகிய பரமேசுவரியும் வேண்டுந்தக்கினை வரங்களுங்கொடுத்துத் தினச்செய்தி நடக்கிற பாவபுண்ணியமுதலான பலங்களைக்கு நமக்கறி வியுமென்று சுவாமி யுத்தரவு கொடுத்தபடியே சித்திர புத்திரநயினர் கயிலைமலைவாசரான பரமேசுவரர் சந்நிதா னத்திலிருந்து கணக்கெழுதிவருகிறார் இப்படிக் கயிலா சத்தில் நடந்துவருகிறபோது தேவேந்திரன் மகா ஆசை கொண்டு வேணத்தக்கினை கருமங்களைச்செய்து சவ்பரனை நோக்கி இந்திராணியுடன் நவசுபண்ணுகிற விஸ்தா ரத்தை இனிமேற்சொல்லுகிறோம் அன்புவைத்து ஒரே மனதாகக் கேட்பீர்களாக.

எண்ணத்தொலையாத வெற்றிபூசைதன்னை
செய்யவேணுமென்று திடமாகவே நினைத்து
தேவாதிதேவரெல்லாருஞ் சேரவேசூழ்ந்துவர
செம்பொன்மணித்தேரில் சிறப்புடனேதானேறி
பசும்பொன்னுலகாள் பதியைவிட்டுத்தேர்நடத்தி
விண்ணுலகக்கன்னியர்கள் வேணப்பணிசூழ்ந்துவர
இப்படியேயிந்திரனை சேத்தவருஞ்செய்ய
வருகிறவழிதனிலே வந்தாள் அகலிகைதான்
புண்ணியதீர்த்தமாடப் புறப்பட்டாள் அகலிகையும்
தந்திரமாயப்போது தான்கண்டானிந்திரனர்
மெத்தவேமையலாகி மெய்சோர்ந்தழிவழிந்து
தேர்மேலேதான்விழுந்தார் தேவர்களுசென்றெடுத்தார்
பாராமல்நடந்து பகர்கண்டஆசையினால்
காதல்கொண்ட இந்திரனர் காமவிசைநினைந்து
ஆதரவுபேசி யகலிகையைச்சேரவெண்ணி
தேரைமிகதிருத்தித் தேவர்களைத்தள்ளிருத்தி
மாயமாய்சென்று மருந்துமாமலையிலுள்ள
காய்கனிகள்கொண்டுடனே காதிரனாயுந்தேரம்
மாயாபாசத்தால் மகிமைதனைவிடுத்து
ஆசைத்துயரமதால் அகலிகைவீட்டுவழியிலே
சென்றுரேயிந்திரனர் தெய்வவுருமாறி
அன்றிரவுநல்லுறக்க மறித்துநடுச்சாமமதில்
வேளையிதுவெனவே விடியற்காலங்கூவும்
கோழியாய்நின்று கூவினரிந்திரரும்



அப்போதுகௌதம ராஜரிஷிதானும்
எப்போதும்போலே விடிந்ததேயென்றெழுந்து
தெண்டுகமண்டலமுந் திருநீறுக்கோலுடனே
கங்கைத்துறையில்வந்து நின்றார்மகாரிஷியும்
கங்கையுறக்கமதைக் கண்டார்மகாரிஷியும்
மாயர்விதியோ மாயமோதெரியாது
நந்தவனஞ்சென்று நாமறிவோமென்றுவர
அந்தமலரும் அரும்பாயிருந்ததுபார்
இதுவென்னசோதனையோ சவ்பரோதஞ்சமென்று
அதிசயமேநேரே யறியாமல்வந்ததென்று
மனக்கவலையாகிரிஷி மனைவிடத்தேமீண்டுவந்தார்
சென்றறிவோமென்று திரும்பிவருமந்நேரம்
இந்திரனுமவ்விருளில் ரிஷிருபந்தானெடுத்து
வந்துஅகலிகையின் வாய்ந்தமுகம்நோக்கி
மனக்கவலைமையலொடு வந்தவரலாறெல்லாம்
கேளுமென்றுசொல்லிக் கெணிதமாய்சொன்னவுடன்
பாவிகெடுவாய் பத்தினிமார்தன்னிடத்தில்
இவினையால்வந்தாயோ சீசீபுன்மதிமையுடன்
நீயழிந்திடுவாய் நிச்சயமேதப்பாதென்
றுசையில்லாத அகலிகைசொல்லிநிற்க
[illegible] னுமந்நேர மயக்கத் தால்வீழ்ந்திறைஞ்சி
[illegible] சத்துயர்தீர்ப்பாய் அகலிகையேயெனத்தொழுது
அப்போதுமகாரிஷி மகிமேகமாய்வந்தார்
மெய்ப்பாகபோனவரே மீண்டுவந்தாரந்நேரம்
கண்டிதுவென்ன காரணமோவென்றுசொல்லி
அண்டர்பதிக்கோனே ஆரடாவென்றுசொல்ல
பூனையுருவங்கொண்டு போறனையிந்திரனும்
ஆரடாவிந்நேர மறைந்தோடிவந்ததென்ன
பெரும்பிறப்பும் பிழைத்தமற்சொல்லெனவே
இந்திரனைதான்கண்டிரிஷியேதானும்மிகத்தில்
வந்துவேறில்லை வருமெய்ப்பாலனுள்ளதெல்லாம்
சாத்திரங்கேட்க தான்வந்தேனென்றுரைத்தார்
இந்நேரநீயு மிங்குசெய்யவந்ததென்காண
அகலிகையைச்சிதைத் தடைந்தாய்நீயென்றுசொல்லி
சிறித்துத்தான்கண்டுவந்து நெருப்புப்பொறிபறக்க
இன்றைக்கேதுயாதி விதித்தேலோகமுழுதும்

இச்சாபமிந்திரனை இன்றுயெரியாமல்
துற்சாபம்வேறு சொல்லுவாரப்போது
தன்தாரம்விட்டு பிறர்தாரம்வேண்டினதால்
இந்திரன்சரீரமெல்லாம் யோனியாய்ப்போகவெண்ணி
ஆயிரம்யோனி அங்கமெல்லாந்தான்வெடிக்க
என்றுமகாரிஷியு மேற்றொருசாபமிடத்
தப்பாமலன்னேரம் வெடித்ததேநான்குறியும்
கண்டானேயிந்திரனுங் கண்கலக்கமுண்டாகித்
தொழுதானேரிஷியடியைத் தோற்றமுடனந்நேரம்
பெரியோரே நீர்பொறுப்பீர் பிழைசெய்தேனுன்சிறியேன்
அரியவினைக்களானேன் ஆசையாற்றுன்விருப்பி
வஞ்சகனுமானேன் மாபாவிதானானேன்
வஞ்சகமாய்ச்செய்தகுற்ற மகாரிஷியே நீர்பொறுப்பீர்
என்றுசொல்லியிந்திரனும் ரிஷியையடிபணிந்து
இந்திரலோக மிழந்துதான்போகாமல்
இச்சாபந்தீர்ந்து இரட்சிக்கவேணுமென்று
அச்சாபத்தோடே யருகேதானிற்பளவில்
இந்திரனைப்பார்த்து ரிஷியுமவரேதுரைப்பார்
இருடிகள்சாப மிந்திரனே தீராது
ஆணவமாயையினல் அழியவந்தவிந்திரனே
தாணுமாலயனைத் தவணியிலேபூசைசெய்தால்
ஆயிரம்யோனியு மாயிரங்கண்ணாகுமென்று
ஆயிரங்கண்ணாகுமென்று அம்முனியைத்தெண்டனிட்டு
பூசைசெய்தேயிந்திரனும் போனானந்நேரம்
அப்போதுமகாரிஷியும் அகலிகையைப்பார்த்துடனே
கருங்கல்லாய்ப்போகவென்று கடுஞ்சாபமிட்டனரே
அப்போதேயகலிகை அடிதொழுதுதெண்டனிட்டு
வேர்த்துவிருவிருத்து மெய்கலங்கியேநடுங்கி
இச்சாபந்தானுமே யெனக்கோவரவேணுமோ
இதென்னமாயமோ வெம்பெருமான்சேதனையோ
சாபநிவர்த்தி தானருளவேணுமென்று
அகலிகைதான்பணிந்து அடிதொழுதுதெண்டனிட்டு
கேட்டமளவில் கிருபையுடன்மகாரிஷியும்
அரக்கர்குலமறுக்க அன்பாகமாயவனார்
ரவிகுலத்தில்வந்து தசரதன்பாலனாய்ப்பிறப்பார்
தானுமொராகவனாய்ப் பிறந்துவளர்நாளையிலே



விஸ்வாமித்திரர்செய்யும் வேள்விகெடும்படிக்குத்
தாடகைசிறுநீரால் தானணைப்பாள் அம்முனியும்
தாடகையைச்சங்கரித்து முனிவேள்விமுடிப்பதற்கு
தசரதன்தன்னிடத்திற் சார்ந்துவிஸ்வாமித்திரரும்
இராமரையும்லட்சு மணரையுந்தானழைத்து
சங்காரஞ்செய்துதன் வேள்விமுடிந்தபின்பு
மிதுலையைநோக்கி விரைந்துவருகையிலே
கலியாணம்பண்ணவென்று கனமாய்வருகையிலே
ஸ்ரீராமர்தன்பாதம் சிறப்பாகப்பட்டவுடன்
பெண்ணாக நீவருவாய் பேர்ந்துவிடுமுன்சாபம்
அப்போது நாமுன்னை யழைத்துமேகொள்வமென்ன
கருங்கல்லுப்பாறையாய்ப் போனாளே கன்னிகைதான்

விருத்தம்.

இந்திரலோகம்விட்டே யெழிலுறுபுவனஞ்சுற்றித்
தந்திரவானமெல்லாந் தயவுடன்வரும்போதந்த
மந்திரப்பெண்வந்து மலர்கொய்யும்போதுகண்டு
இந்திரன்மயங்கிவாடி யேகினனிருப்பிடத்தில். (க)
இருப்பிடந்தேடிப்பார்த்து இரவுதன்கோழிபோலே
உருக்கொண்டுகூவியந்த ரிஷியையன்புடனேநோக்கி
மருக்கினனவள்பால்வந்து மயங்கியேசெல்லும்போது
செருக்கிலாரிஷியுங்கண்டு சினந்துதன்சாபஞ்செய்தார்.
செய்ததோர்சாபம்காமந் திருடனாய்வந்ததாலே
வெய்யதோர்பெண்மேல்மோக விருப்பமுமில்லையாகத்
துய்யதோர்மேனியெல்லாந் துயருடன்யோனியாகும்
பொய்யல்லவென்றுசொல்லிப் போவெனவிடைகொடுத்தார். (௨)
இந்தநற்சாபத்தாலே யிந்திரன்தலைகவிழ்ந்து
அந்தநல்ரிஷியைத்தானு மடிபணிந்தவனேகேட்கத்
தந்திரவீசனைத் தானுமேபூசைசெய்தால்
சுந்திரமேனியெல்லாந் துலங்குமாயிரங்கண்ணுமே. (௩)

(வசனம்) இதினுடைய விபரம் எப்படியென்றால் தேவேந்திரன் மகாவையாளிலே தபசுசெய்யப்புறப்பட்டு வருகிறவழியிலே மருதமாயாலே கௌதமரிஷிபத்தினியான அகலிகைப்பெண் ரிஷிக்கு மலர்கொய்ய வந்தவிடத்தில் இந்திரன் அந்தப்பெண்ணினுடைய அழகுசவுந்தரியங்களைக்கண்டு தனைமறந்து புத்திரநினைவும்விட்டு மையல்கொண்டு அந்தப்பெண் வாழுகிறவிடத்துக்குப்

போய்க் கோழியாய்க் கூவின அகலி ரிஷியை வெளியில் புறப்
பட்டு ஸ்நானஞ்செய்யப்போகப் பண்ணுவித்துத் தான்
சோரமென்று யோசித்துச் செய்தான் அப்படியே
ரிஷியும் விடிந்துபோச்சுதென்று கெங்கையில் வரும்
போது கெங்கை நித்திரைசெய்கிறதைப்பார்த்துப்போ
ட்டு நந்தவனஞ்சென்று புஷ்பவிரிவு பார்ப்போமென்று
பார்க்கும்போது புஷ்பங்களெல்லாம் அரும்பு மயமா
யிருக்கிறதைக்கண்டு இது ஓர் காரணமாயிருக்குதென்று
தன்னுடைய இல்லிடமாகிய ஆச்சிரமத்துக்குவருவத
ற்குமுன்னமேஇந்திரன் அகலிகையிடத்திற்றன்னுடைய
விரகதாபத்தைச்சொன்னதில் அவள் மனம்நொந்து
சில கொடுமையான வார்த்தைகளைச் சொல்லுகிற நேரத்
தில் ரிஷிவருகிற சாடையை இந்திரன் தெரிந்து பூனை
வேடம்போட்டதை ரிஷி ஞானதிருஷ்டியினால்பார்த்து
ஆரடா நீ? உன்னுடையபேரும் ஊரும் வந்ததுவுஞ்சொ
ல்லென்றுகேட்க அடியேன் தேவேந்திரனென்று பெய
ரைச்சொல்லி இந்தவருஷம் பஞ்சாங்கப் பலன்கேட்க
வந்தேனென்று திருட்டுத்தனமாய்ச் சொன்னதைத்
தெரிந்து இவன் அகலிகையைக் கபடஞ்செய்யவந்தவனாய்க்
காணுதென்று மகாகோபத்துடனே ரிஷியானவர் கண்
களிரண்டும் நெருப்புப்பொறி பறக்கும்படி பார்த்து தன்
தாரமிருக்க அசல் தாரத்துக்கு ஆசைப்பட்டதினால்
உன்சரீரமெல்லாம் ஆயிரம்யோனியாக வெடிக்கக்கடவ
தென்றுசாபமிட்டார். உடனே இந்திரனும் பயந்து நடு
நடுங்கி மகாரிஷியைத்தெண்டனிட்டு எளியேன்செய்த குற்
றம் பொறுக்கவேணுமென்று வேண்டிய நமஸ்காரஞ்
செய்ததின்பேரில் ரிஷிக்குக்கொஞ்சம் தயவுவந்து தானு
மாலயனறிய சுவாமி கயிலையங்கிரிவாசரைப் பூசைசெய்
தால் இந்தச்சாபம் அவராலே தீர்ந்து ஆயிரம் யோனி
யும் ஆயிரம் கண்ணாகுமென்று விடைகொடுக்க, அப்படி
யே தேவேந்திரன் தன்னுடைய பட்டணத்துக்குவந்து
சுவாமிகயிலையங்கிரிவாசரைப் பூசைசெய்துவரமும் முன்
சொன்னபடியே ஆயிரங்கண்ணாகப் பெற்றுக்கொண்டா
ன். அப்பால் நடக்கிற அதிசயங்களை இனிமேல் வெகு
விஸ்தாரமாகச் சொல்லுகிறோமென்றவாறு. அகலிகை
ப்பெண்ணுக்கு நடக்கிற விவரத்தைக் கேட்பீர்களாக.



## விருத்தம்.

கௌதமரிஷியும்பெண்ணைக் கண்டகலிகையேயுன்னைச்
சவுமியமாகக்கண்டு இந்திரனைச்சார்ந்ததாலே
புவிதனிற்கருங்கல்லாகிப் பொற்பெலாங்குறைவாயென்று
தவமுனிவந்துநின்று சாற்றினார்சாபந்தானே. (௧)
எந்தனுக்கிட்டசாப மெத்தநாட்போமென்றேங்க
அந்தநற்சாபந்திர ஆனதோர்வகையுஞ்சொல்வார்
சுந்தரத்தசரதற்குத் தோன்றியராமன்பாதம்
உந்தன்மேற்பட்டபோதே யொழிந்திடுஞ்சாபமென்றான்

(வசனம்) அதேதெப்படியென்றால் அகலிகையான
பெண் மற்றொரு புருஷரால் வாடைபடாத பெண்ணான
தால் இந்திரன் கண்டு மோகத்தினாலே இந்த தேகம்
விட்டு மறுதேகமாக வேண்டியதற்குக் கருங்கல்லாகப்
போகக்கடவதென்று சபித்ததினாலே அகலிகையானவள்
ரிஷியாரைத் தோத்திரஞ்செய்து அடிபணிந்து எனக்
கிட்டசாபம் எப்போது நீங்குமென்றுகேட்க, மகாவிஷ்
ணுவானவர் அரக்கர்குலமறுக்கவேண்டியதற்காகத் தச
ரதர் புத்திரனாகச்செனித்து ஸ்ரீராமமென்னும் நாமத்து
டனிருக்குங்காலத்தில் விஸ்வாமித்திரரானவர் வேள்வி
செய்கிறதைத் தாடகைசிறுநீரால் அழிக்கிறவேதனையை
நீக்கவேண்டித் தசரதரிடத்திற்கேட்டு ஸ்ரீராமனை அழை
த்துக்கொண்டுபோய்த் தாடகையைச் சங்காரஞ்செய்து
மிதுலையிற் சீதையைக் கலியாணஞ்செய்யவரும்போது
அந்த ராமனுடைய திருப்பாதம் உன்பேரில் பட்டவு
டனே பெண்ணுருவமாகி என்னிடம் வருவாய் அப்
போது உன்னைச் சேர்த்துக்கொள்ளுகிறோமென்று
விடைகொடுத்தபடியே சிலநாட்சென்று ஸ்ரீராமர் வந்து
தாடகையைக்கொன்று விஸ்வாமித்திரருக்குச்சந்தோஷ
ஞ்செய்வித்து மிதுலையிற் சீதையைக் கலியாணஞ்செய்ய
வரும்வழியில் ஸ்ரீராமனுடையபாதம் அகலிகைப்பெண்
பேரில் பட்டுத் தன் சொரூபமானதை ஸ்ரீராமர் பார்த்து
இதென்னவிதமென்று விஸ்வாமித்திரரைக் கேட்க,
அகலிகையானவள் நடந்த விருத்தாந்தமெல்லாம் சொ
ல்ல அப்பால் ஸ்ரீராமமூர்த்தி இருடியினிடத்துக்குப்
போம்படி உத்தரவுகொடுக்க, அப்படியே இருடியினிடம்
அகலிகைப்பெண் வந்துசேர்ந்து வாழ்ந்துக்கொண்டிரு

ந்தாள். அப்பால் தேவேந்திரன் நடக்கிற விர்த்தாந்தமும் அதின்மேல் நடக்கிற கதையுஞ் சொல்லுகிறோம் கேட்பீர்களாக.

[illegible] நடை.

இந்திரனார் தன்கதையை யியம்புகிறேன் கேளுமினி
ஆயிரம்யோனியுங் கண்ணாறுமென்றாமாமுனியை
தெண்டனிட்டுக்கொண்டு திரும்பினார் பூசைசெய்ய
தானுமைமாமயனைத் தானேமனதிலெண்ணி
ஆனையமாமைதன்னை பசலைவிட்டுப்போகாதாய்த்
தானுமாமைதன்னைத் தாரணியிலுண்டாக்கித்
தான்செய்தகுற்றமெல்லாந் தானுமேதீருமென்று
வனத்துரிஷிசாபமதை மாலயனே தீருமென்று
மெத்தவேபூசை விரும்பியேசெய்யலுற்றார்
பூசைதனைச்செய்து புதுமைதனைக்கண்டுமிகத்
தானுமுமையாளுந் தயவுடனேவந்துதித்து
ஆயிரம்யோனியுனக் காயிரங்கண்ணாகுமென்றார்
ஆயிரங்கண்ணாகுமென்று அம்முனியைப்பணிந்து
ஆயிரங்கண்ணுடைய அதிபதியுந்தானும்
வரமதிகம்பெற்று வாழுமிந்தநாளிலே
அகலிகையைச்சாபம் பிடித்ததினாலேநாம்
தெய்வலோகபட்டணத்தில் வாழுகின்றதேவருக்கும்
எல்லார்க்குமாகப் பிடித்ததேசாபமது
தான்மலடாய்நின்று தவிக்கிறபதுமையைப்போல்
வானுலகமெல்லாம் மலடாகப்போனதுவே
தான்மலடில்லாமல் தரணியெல்லாந்தான்மலடாய்
பூமிவிளையாமல் பொன்மாரிபெய்யாமல்
காமனெரித்ததுபோல் காடுகளெல்லாமெரிய
காய்க்குமரங்களெல்லாங் காயுதிர்ந்துபோனதுவே
பாற்பசுக்களெல்லாம் பால்வற்றிநின்றதுகாண்
பட்சிபறவையெல்லாம் பால்மலடுதானாக
காடிமிருகமெல்லாங் கிடமலடாய்ப்போனதுவே
புல்லுங்கருகிமிக பூக்களுமேயில்லாமல்
இந்திரலோகமெல்லா மிடமிக்கப்போனதுவே
இந்திரனார்தேவி இதுவெல்லாந்தான்தெரிந்து
இந்திராணியென்று இளங்கோதைதானிருக்க
அனர்த்தம்விளைத்திரோ ஆனதொருமித்திடவே



ரிஷியினதுசாபம் பலித்துதேயிப்போது
பத்தினிசாபம் பலித்ததுவுங்கண்டீரே
அவர்களுடசாபம் அவனியெல்லாஞ்சூழ்ந்ததுவே
மதிகொண்டுவாழ்கையிலே மதிமயங்கிப்போனீரே
தவசுமறந்து தட்டழித்தகாரணத்தால்
மனதிற்றுயரமதாய் மலடாயிருந்தோமே
இடுவார்கள்பிச்சைதன்னைக் கெடுவார்தடுத்தார்போல்
படுவார்கள்பாடெல்லாம் பட்டோமேயிந்திரரே
அம்பலத்தில்நின்றலையும் அனியாயஞ்செய்தவர்போல்
ஊருருடமைக்குப் பேராசைகொண்டவர்போல்
தேவர்களெல்லாஞ் சேரமலடானோம்
இந்தப்படிசொல்லி இந்திராணிதான்புலம்ப
இந்திரனுங்கேட்டு இலச்சையுற்றுத்தான்வாடி
எந்தவிதியாலே எனக்குமேயிந்தவினை
வந்ததோவென்று மனக்கவலைதான்கொண்டு
மானேகுயிலே மரகதமே நீகேளு
தேனேகனியே தெவிட்டாததெள்ளமுதே
அந்தரம்பைமாதை யடிமைகொள்ளும்பெண்ணே நீ
புத்திரனில்லாமல் பூதலத்தில்வாழ்வதற்கு
வாத்தினையுண்டானாலும் வாழ்வல்லகண்டாயே
சேனைபலதாழச் சிறுவனொருவனில்லை
மைந்தனில்லாவீட்டில் மறையோர்பொசிப்பதில்லை
மகனில்லாவீட்டில் மற்றொருவர்போகாமல்
வள்ளத்தனமயிலே வகையையென்று சொல்லுகிறேன்
அரனைநோக்கி யதிகதவஞ்செய்தாக்கால்
அரம்பையுமைபார்வதிபால் அதிகதவஞ்செய்தாக்கால்
எல்லாம்பதமும் இயல்புமிகவுண்டாக்கும்
என்றுமனையாட்கு இப்படியேசொல்லியபின்
தாய்யமதியுடையாள் சுந்தரியுமேதுசொல்வாள்
மைந்தனில்லாத மழைகாணுவான்பயிர்போல்
வாடிமிகத்தளர்ந்து மயங்கிமுகம்வாடி
என்றுரைத்தசுந்தரிக்கு இந்திரனேதுசொல்வார்

விருத்தம்.

மங்கையேசொல்லக்கேளாய் மைந்தனில்லாமையாலே
சங்கையாய்வாழ்ந்திருந்து தரணியில்லவசையுமாச்சு

கங்கைவேணியர் தன்பாதங்கண்டுமேவாத்தைப்பெற்று
இங்குநாம்வருவோமென்றே யேங்கினார்கைலைமீதில்.
சென்றுசிவன்கைலை சேர்ந்தேயிருவருந்தான்
சத்தியைவேண்டித் தவம்பெறவேண்டுமென்று
சங்கரனாரஞ்செழுத்தைத் தங்கள்மனதில்வைத்து
சிவனுடுமையாளைச் சிந்தையிலேதானினைந்து
இந்திரனுந்தேவியுமாய் சகரர்போலேகலுற்றார்
இந்தப்படியே இருபேரும்வொற்றுமையாய்
கயிலைதானோக்கி கடுகவேதானடந்தார்
கடிதாய்வழிகடந்து கயிலைக்குப்போனார்காண்
தென்கயிலைச்சேர்ந்து சிறந்தயிருபேரும்
நந்திதனைக்கண்டு நமஸ்கரித்தாரந்நேரம்
நின்றுகைகூப்பி நெடுமூச்செறிந்துநின்றார்
நெடுமூச்செறிந்துநொந்து நின்றவரைத்தான்பார்த்து
தடுமாற்றநீக்கித் தனதாகவார்த்தைசொல்லி
தேவியும்நீயுந் தேடிவந்தகாரியமென்ன
தேடிவந்தகாரியத்தைச் செப்புமெனவுரைத்தார்
இவ்வார்த்தைகேட்டு அமரர்கோனேதுரைப்பான்
எவ்வார்த்தையென்று இயம்புவேனையடியேன்
சீராயுரைசெய்தாற் சிரிப்பார்களெல்லோரும்
மகனாசையாலே வருந்திநடந்துவந்தோம்
புத்திரனுமில்லாமல் பொன்னுலகையாண்டிருந்தோம்
பொன்னுலகையாளப் புத்திரனேதானுமில்லை
சந்ததிக்காகத் தவம்பெறவேவந்தோங்காண்
எந்தன்தமைகாத்து இரட்சிக்கவேணுமென்றார்
அந்தமொழிகேட்டு அருள்நந்தியேதுரைப்பார்
வந்ததுநன்றுநன்று மகனுமுண்டாகும்
சிவனுடுமையாளைச் சிந்தையிலேதானினைந்து
தவமாய்மிகவும்நல்ல தரையில்மிகவுநிலைத்து
ஊசிமேல்நின்று உற்றதவஞ்செய்வீரானால்
சிவனுடுமையாளுஞ் சிந்தைமகிழ்ந்து
சந்ததிபாக்கியமுந் தந்தேயருள்புரிவார்
இந்தப்படிக்குநந்தி யெடுத்துரைக்கவப்போது
இந்திரர்சொன்ன மொழிப்படியேநாங்கள்செய்வோம்
நன்றெனவேயிந்திரனும் நாயகியுமப்போது
ஆற்றில்முழுகி யஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து



ஊசிநிறுத்தியதில் ஒருகாலைதானூன்றி
நின்றார்தவசு திருமலைத்தானினைந்து
இந்திராணிதானும் இருந்தார்நெடுந்தவசு
இருபேருமொன்றாய் இருந்தார்நெடுந்தபசு
ஈசனையினையருள் என்றேமனதில்வைத்து
உள்ளங்காலுச்சி யொன்றுந்தெரியாமல்
தன்னாதபுற்றும் தானேவளர்ந்ததுகாண்
வேருகளோடி வியன்மரங்களுண்டாகி
பாருக்குள்வேரோடிப் படர்ந்தவசுசெய்தார்
அந்ததவத்தருமை யாரறியவில்லை
ஆனபொழுதிந்திரனும் அவன்மனைவிதன்னுடனே
எந்தப்படிதவங்கள் செய்வோமெனநினைத்து
சுந்தரியாள்தன்னுடனே சொல்லிவிசாரமுற்று
பாதாளந்தோன்றவெட்டி பாம்பாயனல்வளர்த்து
வேதாளஅக்கினிபோல் மேலேபடர்ந்தெரிய
ஈசனேயெல்லையரு ளென்றேதவசிருந்தார்
தண்ணீர்அருந்தாமல் சருகும்பொசியாமல்
இந்தப்படிதவசு இரண்டாயிரம்வருஷம்
அந்தத்தவத்தருமை யாருருத்தானறிந்து
பார்வதிக்குமப்போ பரமனருள்செய்தாரே
பெண்ணேயவருகே போவோமெனவுரைத்து
கண்டார்சிவனுங் கனிவாயுமையாளும்
முப்பத்துமுக்கோடி தேவர்கள்போற்றிநிற்க
நாற்பத்துநாற்கோடி ரிஷிகளும்நயந்துதொழ
தவத்தருமைபார்த்துச் சந்தோஷமுண்டாக
உமையாளும்அங்கே யுத்தரங்கள்சொல்லுகிறாள்
பொன்னுலகையாண்டுமிகப் போகம்படைத்தருளி
மன்னுமுடிதேவரெல்லாம் வந்துதொழுதேத்த
இந்தப்படிபலத்தை யேதுக்குதான்கொடுத்தீர்
புத்திரனில்லாச்செல்வம் போதேகொடுத்தீரே
புத்திரன்வளர்ந்து போதமான்வுண்டாக்கி
கண்ணீரொழுகிறானுங் கண்ணிறைந்தானுமென்று
சிவனிடத்தில் செப்பினாள்பார்வதியும்
இப்படிசொன்னால் உமையவளேயென்றுரைத்தார்
கண்மணியிந்திரனுங் கடுந்தவஞ்செய்ததுண்டு
மனையாளுடனிப்படி செய்வோம்

தேனையவன் செய்த தீவினைகள் மெத்தவுண்டு
ஒன்றும் அறியாமல் உபாயமாய்ச்சொன்னதென்ன
ஆனாலுனக்காக அருள்செய்வோங்கண்டாயே
என்றுசிவனார் இரங்கியுரைத்தனர்காண்
உமையாளுமங்கே யேதுரைப்பாளுண்ணடுங்கி
ஈசுரரேயும்மடியார் ஏதுபிழைசெய்தாலும்
நேயமுடனதனை நீர்பொறுக்கவேண்டாமோ
என்றுமையாள்சொல்ல இறையோன்மனமகிழ்ந்து
மன்றல்செறிவெள்ளி மலைதனிலேவீற்றிருந்து
நந்திதனையழைத்து நல்லதொருயிந்திரனைக்
கூட்டிவரச்சொல்லிக் கொடுத்தான்காணுத்தரவு
வென்றிபுனைநந்தி விரைந்தோடியேயழைக்க
இந்திரனுந்தேவியுமாய் இன்பத்துடனெழுந்து
நந்திசர்தன்பின்னே நன்றாய்நடந்தனரே
கந்தமலர்க்குழலுங் கடுகவேதானடந்தனரே
கூட்டியேதானும்வந்து கோமானைத்தேவியுடன்
தேடுபுகழ்நந்தி திருவாசலில்நிறுத்தி
எண்ணத்தொலையாத இடியேறுதாமுழங்க
வண்ணக்கடல்முரசு வகைவகையாய்த்தான்முழங்க
சிந்தைமகிழத் திருநந்திதான்கொலுவில்
வந்துபுகுந்து வலக்கைப்பிரம்பதிறல்
இதங்கள்அறியாமல் எதிர்த்துநின்றதேவர்தம்மை
ஒதுக்கிவிலக்கி யொருபால்நிறுத்தினரே
நேரேவிலக்கி நிறுத்தினார்விஞ்ஞையரை
யுற்றபிரம்பால் ஒதுக்கிஒருபுறமாய்
சென்னிவணங்கித் திரண்டுதொழுந்தேவர்களை
யுன்னியடித்தங் கொருபால்நிறுத்தியபின்
காலவெமதூதரையுங் கடக்கநிறுத்தினரே
வருணன்முதல்மற்றவரை வாகாய்நிறுத்தியபின்
ஈசனுக்குத்தோழனா யெற்றகுபேரனையும்
உருத்திரரையும்பக்கத் துண்மையாய்த்தானிறுத்தி
ஆனைமுகத்தானுடனே ஆறுமுகத்தனையும்
சேனைநடுமத்தியிலே சிறக்கஇருத்தியவர்
பக்கத்தில்வீர பத்திரனைத்தானிறுத்தி
மேனகையேமுதல் விண்ணுலகரம்பையுடன்



ஆனவூர்வசியும் அந்தமுள்ளதிலோத்தமையும்
நாடகங்களாடுமந்த நாதன்சிவசபையில்
தேடுபுகழ்நந்தி சேர்ந்தபலநாதர்களை
மிஞ்சுநவக்கிரக வேடிக்கையுள்ளவரை
அஞ்சாமற்சொல்லி அடைவாய்நிறுத்தினர்காண்
காளிகளையெல்லாம் கலக்கநிறுத்தியபின்
சத்தமகாரிஷிகளையுஞ் சங்கையுடனே நிறுத்தி
மற்றுமுள்ளபேர்களையும் வகையாகத்தாநிறுத்தி
விருப்பமுடன்நந்தி விண்ணவர்கோன்கிட்டவந்து
வந்தரனார்பாதம் வணங்குவாயென்றுசொல்ல
அந்தப்படியே யரனார்திருமுன்பு
சென்றுபுகுந்திந்திரனுந் தேவியிந்திராணியுமாய்
மன்றில்விழுந்து மலரடியைப்போற்றிசெய்ய
சிந்தைமகிழ்ந்து சிவனெழுந்திரென்றார்
திருவாய்மொழிகேட்டு தேவியுடனிந்திரனும்
எழுந்துநின்றுகைகட்டி யெதிராகவேநிற்க
வந்தகருமத்தை வகையாகச்சொல்லுமென்ன
இந்திரனுமப்போது இயல்பாகச்சொல்லுகிறான்
புத்திரனில்லாமற் பொன்னுலகையாண்டிருந்தேன்
புத்திரனில்லாதார் பொசிப்புப்புழுவல்லோ
எத்தனைதான்வாழ்வு இலங்கப்பதம்பெற்றாலும்
புத்திரனையில்லாதே புலைநரகில்போவேனே
சந்ததிதான்தாருமெனத் தார்வேந்தன்கேட்டதிற்பின்
இந்திரனேசந்ததிதான் தந்தோமெனவுரைத்தார்
சந்ததிதந்து சங்கரனார்சொற்படிக்கு
இந்திரனுந்தேவியுமா யின்பமுற்றுமீண்டனரே
மீண்டுமேநாங்கள் விரைந்துவரும்வழியில்
ஊர்பதியைநோக்கி யுலாவிவந்தாரப்போது
காமதேனுநற்பசுவைக் கயிலையிலேவரவழைத்து
பசுவின்முகம்பார்த்து பரமனருள்புரிவான்
சந்ததியில்லாமற் றவசுசெய்தஇந்திரற்காய்
உன்னையவர்களுடன் அனுப்புகிறோமென்றுசொல்வாய்
அன்புடனேநீபோய் அங்கிருந்துதான்வளர்ந்து
பாலகனையீன்று பாங்குடனேதான்கொடுத்து
வந்துவிடுநீயு மாதேயிளம்பசுவே
என்றுசிவனார் இவ்வார்த்தைசொல்லியபின்

நிமலன்றனைப்பார்த்து நெடுமூச்சுந்தானெறிந்து
தோத்திரங்கள்செய்து சொல்லுகின்றதப்பசுவும்
பூலோகம்போயிருக்கப் போதுக்குமோவென்னுடல்தான்
பூலோகம்போயிருந்தா புத்திரனையின்றாலென்ப
னெக்குமேமோட்சகெதி யெப்போவெனக்கேட்க
அப்போதேசிவபெருமான் அன்புமிகப்பெருகி
வாராய்பசுவே வருந்திமெலியாதே
புத்திரனையின்றவுடன் பூந்தேர் அனுப்புகிறோம்
உன்னைநாமும் உடனழைத்துக்கொள்ளுகிறோம்
என்றுசிவனார் எளிதாயுரைத்தபின்பு
போய்வருவேனென்று பொருந்திவிடைகேட்டதற்பின்
அன்னேரமேசிவனார் அன்புவிடைதான்கொடுத்தார்
பசுவுமேயப்போது பரமனருட்படியே
இடியுங்கடலும்போ லெங்குமேதான்முழங்க
அவரடியின்பின்னே மலறித்தொடர்ந்ததுவே

விருத்தம்.

அந்தநற்கயிலைவாசன் அருட்படி காமதேனு
இந்திரன்பின்னேநல்ல விளங்கன்றாய்ப் பெட்டங்கொண்டு
பந்துபோற்குதித்துமெள்ளப் பாரினில்வந்துமேவனே
வந்ததோர்பசுவையிந்திரன் வரிசையாய்த்துதிகொள்வா

வசனம்.

அவ்விதப்படியென்றால் சுவாமி கயிலையங்கிரிவாச
ரான பரமேஸ்வரர் காமதேனுவாகிய பசுவைவரவழைத்
தப் புத்திரதவஞ்செய்த இந்திரனிந்திராணிக்கு நீபோ
யிருந்து ஒருபுத்திரனையின்று கொடுத்துவாவென்று
விடைகொடுக்க அப்போ பசுவானது எனக்குமோட்ச
கெதியெப்போவென்றுகேட்க பரமேஸ்வரரும் அப்போது
புத்திரனைப்பெற்றுக்கொடுத்தவுடனே பூந்தேர் அனுப்பி
யுன்னை இவ்விடம் வரவழைத்துக்கொள்ளுகிறோமென்
று வாக்குசொல்லி விடைகொடுக்க அப்படியே விடை
வாங்கிக்கொண்டு இளங்கன்றாக வேடங்கொண்டு அண்
டபுவனங்களெல்லாம் இடிபோல முழங்கத்தக்கதாக
பந்துகுதித்ததுபோல இந்திரன் இந்திராணிபோனவழி
த்தடம்நோக்கி அவர்களிருவரையுங் கண்டவுடனே
அவர்களிருவரும் பசுவாகியகன்றைக்கண்டு இதுகாரண



மாயிருக்குதென்று யோசனைசெய்வது சுவாமிகயிலையங்
கிரிவாசராகிய பரமேசுவரரும்உமையாளும்அனுப்பிவை
த்ததாய்க் காணப்படுகிறதென்று இருவரும் ஆனந்தங்
கொண்டாடிப் பசுவைக் கட்டிமுகந்து தாங்கள்கூடவே
கூடிவருகிறார்கள்-எ-று.

அப்பால் நடக்கிற அதிசயங்களை இனிமேல் வெகு
விஸ்தாரமாகச் சொல்லுகிறோம்.

நடை.

வந்ததொருகன்றை வாரியெடுத்தணைத்து
ஆவியெடுத்து அங்கமெல்லாந்தான்குளிர்ந்து
இன்றுநமக்கிசைந்த கருணுஞ்செல்வமென்று
கன்றையெடுத்துக் கடுகவழிநடந்தார்
பூபாலரெல்லாம் பூமாரிபெய்தனர்காண்
மற்றுமுள்ளாரெல்லா மனமகிழ்ந்துகொண்டாட
பிரமாமுதலானோர் பிரியமுடன்பார்த்துநிற்க
நடந்தாரிருவருமே நல்லுலகந்தனைநோக்கி
ஒருவர்க்கொருவர் உவந்துவந்துதான்பேசி
சந்ததியாய்வந்தகன்றை தான்கொண்டுசென்றார்கள்
பட்டணத்திலுள்ள பரிஜனங்களெல்லோரும்
இந்திரனிந்திராணி யிவர்கள்வரவுகண்டு
சந்ததிபாக்கியமுந் தான்பெற்றுவாரார்கள்
என்றுசொல்லியப்போ இயல்பாய்ப்பறையடித்தார்
தேசமெல்லாந்தானறிய சிறப்பாய்ப்பறையடித்தார்
பறையோசைகேட்டவர்கள் பாக்கியம்பெற்றோமெனவே
பட்டணஞ்சென்றமாதர் பதியுமிந்திராணியுமாய்
சிங்காதனத்தில் சிறக்கவேதானிருக்க
அம்பொற்பதியான அழகானகற்பகக்கீழ்
செம்பொற்பதியில் சிறப்புடனேதானிருக்க
நல்லதொருசுந்தரியும் நன்றாய்மனமகிழ்ந்து
சங்கரனார்தங்களுக்குத் தயவாகக்கொடுத்தகன்றை
மங்காதகன்றை வளர்த்தெடுக்கவேணுமென்று
தாதியரையழைத்து தயவாயுரைத்தனர்காண்
மானனையீர் நீங்கள் மகிழ்ந்துமேகொண்டாடி
கானகத்திலோட்டாமல் கனமாய்வளர்க்கவென்று
சாற்றுமந்தவார்த்தைதனைத் தான்கேட்டுத்தாதியர்கள்
போற்றியெடுத்தணைத்து பொன்போல்வளர்க்கலுற்றார்
சீருடனேபோற்றித் திரமாய்வளர்க்கலுற்றார்

ஒருநாளுக்கொருநாள் ஓங்கிவளர் சந்திரன்போல்
அருமையாய்க்கன்றுதனை அன்பாய்வளர்த்தனர்காண்
பேரிடவேணுமென்று பேர்முகூர்த்தந்தான்பார்த்து
பஞ்சாங்கக்காரரையும் பாங்காயழையுமென்றார்
சாஸ்திரவாதியெல்லாந் தாமேயழையுமென்றார்
தபோதனரையெல்லாந் தானேயழையுமென்றார்
கட்டியக்காரர்சென்று கடிந்துமிகவோடி
பாப்பாரையெல்லாம் பாங்காயழைத்துவந்தார்
தபோதனர்கேட்டவுடன் சந்தோஷமாகவந்தார்
சாஸ்திரவாதியெல்லாந் தானேதான்வந்தார்காண்
நாளுமுகூர்த்தமும் நல்லதினம்பார்த்திருந்தார்
ஆர்பேரிடுவமென்று ஆலோசனைசெய்தார்
அப்போதுவியாச பகவான் அருளினோடு
இந்திரன்தாயார் இளங்கொடியாள்தன்பெயரை
இடுமென்றுசொன்னபடி எல்லோருஞ்சொன்னார்காண்
அந்தப்படிபெயரை அமைக்கவேவேணுமென்று
வைகாசிமாதம் வளர்ந்த இருபத்தொன்றில்
சுக்கிரவாரமதில் சூழ்ந்ததிருவாசகத்தில்
அமுர்தகணயோகம் அன்பாயிருக்குதென்றார்
அந்தப்படியே அவர்கள்மொழிதப்பாமல்
பட்டணமெல்லாம் பதிவாயலங்கரித்து
சோடித்தெல்லோர்க்குங் கொடுத்தாரே தட்சணைகள்
தட்சணைகொடுத்தவுடன் திருப்பெயரைத்தானழைத்தார்
பாவெத்திரியென்று வரவழைத்தாரப்பசுவை
அழைத்தவுடனே யனேகோருத்தானமிட்டார்
மாதானங்கோதானம் வஸ்திரதானமுதல்
வாத்யங்களெல்லாம் வரிசையாய்த்தான்முழங்க
பதினெட்டுவாத்தியமும் பாங்காய்முழங்கிடவே
நாடகசாலைப்பெண்கள் நாட்டியங்கள்தானாட
வோமங்கள்பூஜைகள் ஒன்றுந்தவறாதபடி
அன்னதானங்கள்முதல் அன்பாய்க்கொடுத்தனர்காண்
பட்டுப்பட்டாவளியும் பாங்காய்க்கொடுத்தனரே
இப்படியே இருபதுநாள்வரைக்கும்
மைதவழுங்கண்ணுக்கு வகையாய்ப்பணிபூண
பொன்னாலேதாம்பும் புரிகயிறும்போட்டார்காண்
நாலுகாலிற்குளம்பும் நல்லதொருதங்கமதாய்



மேனியெல்லாந்தங்கமதாய் விரைந்துமேதானழுத்தி
நவரத்தினவகைகளெல்லாம் நன்றாகத்தானழுத்தி
ஆபரணாதியெல்லாம் ஆணிமுத்துவயிரமதாய்
கொப்புக்குநல்ல கோமேதகமழுத்தி
நாலுகாலிற்சிலம்பும் நல்லதொருவயிரத்தால்
வாரியேபூட்டி வளர்த்தார்கள் நற்பசுவை
பாலமுதமூட்டி பதிவாய்வளர்க்கையிலே
பூபந்தற்குள்ளே போற்றிவளர்க்கையிலே
இந்தவரிசையா யிதமாய்வளர்க்கையிலே
கண்ணாகப்போற்றிக் கருணையுடனேவளர்த்தார்
நாளிரண்டுநாளையிலே நற்பசுவுந்தான்வளர்ந்து
திங்கட்பிறைபோலாக சீர்பெற்றுதான்வளர்த்து [கார்
பிள்ளையென்றுசொல்லிப் பெருமையுடன்தான்வளர்த்
இந்திராணிசெய்யும்வகை யேதென்றுதான்கேட்கில்
நித்தப்படிநடக்கும் நேமநிஷ்டை சொல்லுகிறேன்
பொய்கைதனிற்சென்று போதவே நீராடி
சிவபூசைதவபூசை செபமுடன்செய்தபின்பு
தங்கச்செம்புதன்னிற் றானேஜலங்கோரி
புட்பாதிகளெல்லாம் போதவேகொண்டுவந்து
பசுவினிடபாதமதைப் பாங்காகச்சுத்திவந்து
பத்திரபுட்பமதைப் பாங்குடனேதான்சாத்தி
சிவனைநினைத்துத் தோத்திரங்கள்செய்துவந்தாள்
இந்தப்படியா யிருக்குமந்தநாளையிலே
பசுவின்முகத்தைப் பார்த்துமனஞ்சலித்து
கெடுநாளுந்தானுசைசே நீயுமெனைப்போலே
நிற்கும்வகையேதென்று நிமலனையேதான்தொழுதாள்
[ண்டோ

விருத்தம்.

அய்யய்யோசிவனே நான்செய் யறத்தினுங்கொடுமையு
வையகந்தன்னிலே தான்மலடியென்றென்னைவைத்துத்
தூயநற்பசுவுங்கூடச் சுரப்பிலாமலாய்நிற்கச் [ள்.
செய்யுமாறேதோவென்று சிந்தையுந்நொந்துசொல்வா

வசனம். அகோதெப்படியென்றால் தேவேந்திரனு
ம் இந்திராணியும் அதிகத்தவஞ்செய்து வரம்பெற்றுத்
தங்கள் பதியைநோக்கி வரும்போது சுவாமி உத்த
ரவுகொடுத்தனுப்பிய காமதேனுவாகிய பசுவானது
தங்களிடஞ்சேர்ந்ததைக்கண்டு சுவாமியும் உமையாளும்

அனுப்பினுரென்று மகாசந்தோஷத்துடன் அவர்களும் போற்றிவளர்த்த தெய்வநாட்சென்றும் நம்மைப்போலே நாம்வளர்த்த பசுவானதும் மலடாய் நிற்கிறகாரணம் என்னமோவென்று வையகத்திற் பேறெடுத்ததுமல்லாமல் தவஞ்செய்து கிடைத்தபசுவும் இப்படி நிற்குதென்று இந்திரனிடத்தில் இந்திராணி தெரியச்செய்து அவர்களிருவரும் புலம்பித் தவிக்கிறார்கள் என்றவாறு அப்பால் நடக்கும் அதிசயத்தை விவரமாய்ச் சொல்லுகிறோம்.

(நடை) நாம்தாமலடிருந்தோம் நாம்வளர்த்தநற்பசுவும்
தவத்தருமையால்வந்த காமதேனுதன்மலடாம்
மலடாகினின்ற மயக்கமதை நான்பார்க்க
விதியோவிதுவும் விளம்பீரோவென்றுசொல்லி
இந்திரனுங்கேட்டு யேங்கிமுகம்வாடி
நாகமடந்தையரே நானென்றுசொல்லுகிறேன்
இதுவரையும்பாலன் எமக்குவரக்காணேமே
இன்னமும்நான்போய் எங்கள்பரமேஸ்வரன்பால்
தவஞ்செய்யநான்போவேன் தப்பாதிளங்கொடியே
சங்கரனைநோக்கித் தவசுமிகச்செய்து
வன்மையுள்ளகானகத்தில் மகாதவமாய்நானிருந்து
பூங்காவனந்தேடிப் போகிறேனென்றுசொல்லி
கமண்டலமும்புலித்தோலும் கையிற்பிரம்புடனே
கப்பறையும்புத்தகமும் கையில்மழுவாளுடனே
பத்தினியக்கிளிமொழியைப் பாங்காகத்தான்வளர்த்தி
இந்திராணிதன்னிடத்தில் இயல்பாயனுப்பினன்காண்
வந்துமேகானகத்தில் வாய்த்ததவஞ்செய்ய
சிவனாரைநோக்கித் தெண்டனிட்டுத்தவசிருந்தான்
இந்திரனுங்கானகத்தி லிசைவாய்தவசிருந்தான்
வாசிவைநோக்கி வாகாய்த்தவஞ்செய்தான்
அஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து அரனைமிகநினைந்து
ஆராலும்முடியாத அதிகதவஞ்செய்யலுற்றான்
சற்றுமசையாமல் தவஞ்செய்தானப்போது
முப்பத்துமுக்கோடி தேவர்களுமுத்தோரும்
திருமன்குபேர திருதிசைபாலகரும்
சந்திரருஞ்சூரியரும் சத்தமகாமுனியும்
தேவர்களெல்லாரும் சேரவேதான்கூடி.



தேவரையுந்தெண்டனிட்டு முறைமையாய்ச்சொல்லுகிறார்
சித்தமிரங்குமையா தேவேந்திரனும்
புத்திரவாஞ்சையில் பூமிமறந்துவிட்டார்
மைந்தனைவேண்டி மகாதபசுசெய்கிறார்
அப்போதரனார் அகமகிழ்ந்துசொல்லுகிறார்
நந்தீசர்தன்னை நயமாகத்தானழைத்து
வள்ளுவனையிங்கே வரவழையுமென்றுரைத்தார்
வள்ளுவனையப்போ வரவழைத்தாரந்நேரம்
செய்யசிவனாரும் திருவாய்மலர்ந்தருளி
சித்திரபுத்திரனை தேடியழையுமென்றார்
சித்திரபுத்திரனைச் சிறப்பாகக்கண்டான்காண்
அத்தனாரும்மை யழைத்துவரச்சொன்னார்காண்
சித்திரபுத்திரருஞ் சிந்தையகமகிழ்ந்து
பாதமதில்வீழ்ந்து பணிந்துகண்டார்புத்திரரும்
நேசம்விளையாடிவந்த சித்திரபுத்திரனே
கணக்கர்பெரியவனே காரியத்தில்வல்லவனே
தேவேந்திரனுமங்கே திகைக்கிறான்பிள்ளையன்றி
மைந்தனைவேண்டி வருந்துகிறானென்றுசொல்ல
சித்திரபுத்திரருஞ் செய்தியொன்றுசொல்லுகிறார்
அரியதவம்பண்ணினாலும் ஆவதுண்டோயிந்திரற்கு
மைந்தன்பிறக்க வழக்கில்லைநாயகரே
என்றருளிச்செய்ய இருந்தவர்களெல்லோரும்
சத்தியருள்கொண்டு தவஞ்செய்தயிந்திரற்கு
புத்திரனைதான்கொடுப்பாய் பூதநாதாவென்ன
சிவனாருமங்கே திருவாய்மலர்ந்தருளி
பூமிவிளையாடிவந்த புண்ணியரே நீருமொரு
தீமையை நீக்குமென்று திருவாய்மலர்ந்தருளி
பாலகராய்ப்போய்ப்பிறக்க பரமன்விடைகொடுக்க
புத்திரராகப்போய்ப்பிறக்க சிவனார்விடைகொடுக்க
தேவேந்திரன்வயிற்றிற் சென்மிக்கைதன்மையல்ல
இந்திரற்குப்பிள்ளை யெழுதவில்லைகணக்கிலென
அந்தமொழிகேட்டு அரனாருந்தான்மகிழ்ந்து
எந்தவகையானாலும் இந்திரற்குஅன்புடனே
செந்தாமரைப்பூ தினம்பூர்க்கும்பொய்கையிலே
இந்திராணிதான்வளர்த்த இளம்பசுவுமப்போது
தண்ணீர்குடிக்கத் தான்வருமேயந்நேரம்

தாமரைப்பூவாகத் தண்ணீருடன் கலந்து
ஆவின்வயிற்றில் அவதரிக்க அற்புதங்காண்
வளர்த்தபசுவயிற்றில் வருவாயெனவுரைத்தார்
ஆதிலேடியேன் அருள்பெற்றேனென்று சொல்லி
கூடப்பெற்றேனென்று சொல்லிக் கும்பிட்டெழுந்திருந்து
தேவர்முனிவரையுந் சிறப்பாகவேயனுப்பி
வாய்புதைத்துநின்று மகவையிகநோக்கி
செப்புகின்றார்சுரரும் சித்திரபுத்திரர்க்கு

விருத்தம்.

அரனுடனேவாழந்தேவ ரானதோருயிர்கட்கெல்லாம்
பரமனுடன்பாவபுண்ய பத்திரமெழுதவேண்டிக்
காமிசையுதித்தசித்ர புத்திரசிகாமணிக்காயென்
றருளையபாயவனீசன் வரவழைத்தருள்செய்வானே.
சித்திரபுத்திரரைச் சிவனுமேவரவழைத்து
பத்திரதாவிதன்னிற் பாங்குடன்பூவாய்ச்சென்று
வச்சிரன்வளர்த்தஆவின் வயிற்றினில்சென்றுபுக்குப்
புத்திரனாய்ப்பிறக்கப் போவெனவிடைகொடுத்தான்.
எழுதினகணக்கைநீயும் இறைவன்மால்சத்திலாக்கிப்
பழுதில்லாப்புவிதன்னிற் பகுத்துரைதெரியப்பால்
வழுவில்லாதொருதாமும் வரமுனக்கருளிச்செய்தோம்
எழுமேழ்புவியாரக் கணக்கையுமுரைக்கின்றான்.

வசனம்.

அப்பொழுதென்றால் முன்கயிலாச பருவதத்திலே யாம் வைத்திட்டதிலேயும் பிரமலோகத்திலுமுண்டான தேவர்கள் ரிஷிகள் தபோதனர்கள் முதலானவர்கள்செய்கின்ற பாவபுண்ணிய கணக்குக்களைப்பார்த்து சிருட்டி செய்த சித்திரபுத்திரரை ஈசுவரர் வரவழைத்துத் தேவேந்திரன்மனைவிகாமதேனுவாய் அந்தராமாய்தவசுசெய்கிறதைப்பாருமென்றுசொல்ல அப்போசித்திரபுத்திரர் அவருக்குச்சந்தோஷமில்லையே அவர்தவசுசெய்தாலுமில்லையென்றுசொல்ல அப்போது சிவன் எந்தவிதமாகிலும்நீபோ போய்ப்பிறந்து புத்திரவாஞ்சையைத் தீர்க்கவேணுமென்றுசொல்ல இந்திரன்வயிற்றில் பிறக்கக்காரணமில்லையென்றுசித்திரபுத்திரர்சொல்ல இந்திராணிக்குநாம் அநுப்பிய காமதேனுவாகிய பசுவின்வயிற்றிற் செனித்தால் குற்றமில்லை அதற்குச் சம்புமகாப்பொய்கையாகியதடாகத்தில் தாமரைபுஷ்பமாய் அவதரித்தால் அப்பொழுது அந்தபசுவானது தண்ணீர்குடிக்கவரும் தண்ணீருடனே போய்செனித்துபிறப்பாய் உடனே மகவானைதிரும்பூமியிலுண்டாகியமுன்பாவபுண்ணிய கணக்குகளும் சொகுமென்று கணக்கெடுத்தெழுதிக்கொடுத்துஎழுத்தாணியுங் கொடுத்து அவ்விடத்திலுண்டான கணக்குங் கருவேலைமும் மகாவிஷ்ணுவசம் ஒப்பிவிக்கச்சொல்லியுத்தரவளித்தபடி ஒப்புவித்துப்பின்பு சித்திரபுத்திரர் அவ்விடத்திலுள்ள பெரியோர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு சம்புமாப்பொய்கையில்வந்து அவதரித்தகதை இனிச் சொல்லுகிறோம். எ-று.

(நடை) ஈஸ்வரருடையைஸ்வரிய மின்பத்துடன்மகிழ்ந்து
எந்தெந்தபுத்தகத்தை யெடுப்பேனென்கோவே
ஆயிரம்பேராலும் அசைக்கவொண்ணாபுத்தகமே
ஞானநெறி நீதிமறை நன்னூலின் நீடுபுகழ்
பூண்டவர்கள்புத்தகத்தை போயெடுத்துவாருமென
போயெடுத்துவந்து பொற்பலகைதன்னில்வைத்தார்
பொன்னெழுத்தாணியுடன் புத்தகமுங்கைகொடுத்தார்
முற்கணக்கும்பிற்கணக்கும் முன்னேட்டேடுபடியும்
எக்கணக்கும்பார்த்து எழுதுமென்றார்புத்திரனை
யெழுதியந்தநாள்வரையில் எடுத்துக்கொடுத்தனர்காண்
ஏழுலோகக்கணக்கு மெழுதிமிகக்கொடுத்து
பாவிக்கணக்கும் பஞ்சபாதகர்கள்கணக்கும்
நாகலோகத்திலுள்ள நன்மையுள்ளதன்கணக்கும்
பூமிதனில்மாயவனார் புண்ணியபாவக்கணக்கும்
எல்லாக்கணக்கும் மெழுதிமிகக்கொடுத்து
ஆதிபரமசிவன் அண்டரண்டந்தான்வருந்த
மூத்தக்கணபதியும் முருகுவலமிருக்க
இளையகுமாரன் இடதுபக்கத்தானிருக்க
தேவாதிகளெல்லாந் சேரவேதானிருக்க
இருடிமுனிவோர்கள் எல்லோருந்தானிருக்க
சாதிபதினெட்டுந் தப்பாமல்தான்வருந்த
எமதர்மராசன் இயல்காலதூதருடன்
பல்லாயிரங்கோடி பிரண்டந்தான்வருந்தா
புண்ணியபாவம் புதுமையாய்த்தான்வருந்த
இந்தவரைக்கணக்கைக் இராப்பகலாகத்தானெழுதும்

வச்சிரகாயமாய் வளர்ந்துகணக்கெழுதும்
பத்திரமாயதிகாரம் பலநாளும்உடந்தனுக்கே
தப்பாமல்உடந்தனுக்குத் தந்தோமென்றுரைப்பார்
சந்திரசூரியர்கள் தங்களொளிபோலெனவே
குண்டலமுங்காதிலிட்டுக் கூந்தல்முடிசூட்டி
ஆபரணமெல்லாம் அழகழகாய்த் தான்பூட்டி
சிவனிடத்தில் தீர்க்கவிடைவாங்கி
அம்மையுமையாளிடத்தில் அன்பாய்விடைவாங்கி
எண்ணாயிரம்பூதம் எடுக்கவொண்ணாப்பட்டோலைக்
கூட்டிச்சமைத்துக் கொடுத்தார்கள் அந்நேரம்
கட்டிச்சுருட்டிக் கக்கத்திற்றானிடுக்கி
தாங்குவாயென்று தானேவாங்கொடுத்தார்
தாமரைப்பூவாகத் தாபித்தார்வுந்தமரை
சித்திரைக்குச்சித்திரையிற் சிறந்தபவுர்ணையில்
அந்தத்தலைக்கிழமை யாதித்தவாரமதில்
புத்தகமுமெழுத்தாணியுங் கூடப்பிறக்குமென்றார்
சிவனாருள்படிக்குச் சிறந்தவிடைவாங்கி
அயிராவதங்களென்னும் ஆனைகளைத்தான்பூட்டும்
ஆகாசதேரும் அப்போதுதான்கொடுத்தார்
ஆகாசத்தேரில் அப்போதானேறி
வாராரேயுத்தமனார் வாவிதனைநோக்கி
செண்பகங்களாடுமந்தச் சிறந்ததொருபொய்கையிலே
ஆணிப்பவளம் அடுக்கடுக்காய்த்தான்விளையும்
வயிரவயிடூரியமும் வச்சிரகோமேதகமும்
புஷ்பராகங்களுமே புகழுமந்தப்பொய்கைதனில்
முத்துகள்வந்து மூழ்குமந்தவாவிதனில்
சங்குகள்சூலங்கொண்டு தவழுமந்தப்பொய்கையிலே
கெருடனுமங்கே கிளைகூடிக்கொண்டாடும்
மயிலினங்களெல்லாம் மகிழ்ந்துவிளையாடும்
அன்னங்கள்தாராக்கள் அமர்ந்தோடும்பொய்கையிலே
வானரங்கள்பாடி மகிழ்ந்துவிளையாடும்
மாடப்புறாக்களெல்லாம் வரிசையாய்த்தானிருக்கும்
புனுகுடன்பிள்ளை பொருந்திமிகவாழும்
சவ்வாதுடன்பிள்ளை தானுமிகவாழும்
கஸ்தூரிப்பிள்ளை கவியுமந்தப்பொய்கைதனில்
கவரிமான்வந்து கலந்துவிளையாடும்




காண்டாமிருகம் குதித்தாடும்வாவிதனில்
புட்பாதிகளெல்லாம் பொலியுமந்த நீராவில்
கனிவகைகளெல்லாங் காய்க்குமந்தபொய்கையிலே
செந்நெல்விளைந்து சிறந்திருக்கும் நீராவி
மல்லிகைமுல்லை வாய்ந்தசிறுபிச்சிகளும்
இருவாட்சிபிச்சி இருந்துமிகவீசும்
மருவும்மருக்கொழுந்து மணம்வீசும்பொய்கைதனில்
ஏலங்கிராம்பும் இலங்குமந்த நீராவி
சாதிக்காய்பத்திரியும் தான்விளங்கும்பொய்கையிலே
மரங்களிற்றேனருவி வந்துமிகப்பாயும்
வண்டுகள்தும்பிமுதல் மதுவுண்ணும்பொய்கைதனில்
மந்திகள்பாய்ந்து மதுவுண்ணும்பொய்கைதனில்
செந்தாமரைபூத்துச் சிறப்பிக்கும்வாவிதன்னில்
அல்லிமலரும் அப்படியேதான்பூக்கும்
சந்திரர்கள்சூரியர்கள் தானுதிக்கும்பொய்கைதனில்
ஆதிப்பிரமாவும் அமர்ந்தாடும் நீராவி
நாராயணர்முதலாய் நல்லரிஷிகளுமே
முனிவர்முதலாக நல்லரிஷிகளுமே
முனிவர்முதலானோர் மூழ்குமந்தபொய்கையிலே
கன்னியர்களெல்லாங் கலந்துவிளையாடுவார்
பழயவினைகளெல்லாம் பறந்தோடுங்கண்டீரே
தீவினைகளெல்லாந் திடுக்கிட்டுத்தானோடும்
பிணிகள்முதலாகப் பிறக்கிட்டுத்தானோடும்
கிழவர்முழுகினால் பாலகராகிப்பிறப்பார்
இந்தவிதமாயிருக்குமந்தப்பொய்கையிலே
சித்திரபுத்திரருஞ் சீராகவந்துதித்தார்
தாமரைப்பூவாகத் தான்வந்தவதரித்தார்
இனிமேல்நடக்கும் இக்கதையைக்கேளுமென்றார்
ஏலக்கருங்குழலாள் இந்திராணிதனக்கு
நித்திராதேவி நிறையவேதான்பிடித்து
பஞ்சணைமெத்தையினில் சயனித்தாள்பைங்கொடியும்
அப்போதுசொற்பனங்கள் அழகாகக்கண்டனளே
கண்டுமகிழ்ந்து கடுகிட்டெழுந்திருந்து
தாதியரைதானழைத்து தானுமேயெடுத்துரைப்பான்
இந்திரரைப்போலே யெந்தன்மடிமீதில்
சந்திரர்கள்சூரியர்கள் தங்களொளிபோலச்

செம்பொன்னெழுந்தாணியுடன் சேர்ந்தாப்ளேபோல்
பச்சுடம்புநல்ல பால்சுரக்கக்கண்டேனே
காயாதவாழை காய்க்கவுங்கண்டேனே
இன்பம்பெருகி யிருதோளும்பூரித்தேன்
கோட்டைபனைமரமும் கொழுத்துவிடக்கண்டேனே
பதினாலுலோகமுதல் பண்பாய்க்கணக்கெழுத
கண்டகளுங் கைமேற்பலிக்கவென்று
சிந்தித்துநின்று சிவன்பாதமேதொழுது
வேழமுகத்து விநாயகனைத்தெண்டனிட்டு
மயிலேறும்பெருமானை மனமகிழ்ந்துகொண்டாடி
மூவரையுமங்கே முறையுமேதெண்டனிட்டாள்
சூரியபகவானைத் தோத்திரங்கள்செய்யவுற்றார்
கண்டகளுப்படியே காசினியிற்கொண்டாடி
குண்டலங்கள்மின்னக் குமாரன்வந்துதோன்றுதல்
பொற்கனமாரி பொழிந்திடுங்களெல்லோரும்
என்றனர்பாதம் ஏந்திப்பதித்துநின்று
இந்திராணிதான்வளர்த்த இப்பசுவையந்நேரம்
அம்புதரித்துவிட்டார் சூரியனுமப்பொழுது
கட்டவிழ்த்துக்கொண்டு கங்கைப்புறப்படுத்த
இந்திராணியம்மை யிளங்கோதையோடிவந்து
முந்திமுகந்து முகத்தைமிகத்தடவி
நான்மலடியென்று நாவடல்லாந்தானறியும்
என்னோடேகூட நீயுமலடாகாமல்
இனத்தோடேகூடி யின்பமுறமேய்ந்திடுவாய்
வனங்கள்தனிலே வளர்மிருகமெத்தவுண்டு
இனத்தாரைவிட்டு இணைப்பிரிந்துபோகாமல்
எல்லைகடவாமல் இளம்பயிரைத்தின்னாமல்
ஈணுகசாலி யிளஞ்சாலிதின்னாமல்
சூலிபோடேயாமணக்கை கொழுந்தோடருந்தாளே
சோளக்கதிரைக்கண்டால் சுற்றியேமேயாமல்
எள்ளங்கடுகுநாய்கடுகு ஏறிட்டுப்பாராமல்
கள்ளிகளைத்தின்னாமல் காய்ந்தபுல்லமேயாமல்
இத்தனையும்நீக்கி யிதமாகத்தான்மேய்ந்து
பாலைகருக்குருத்து மையிருளாநாழலினை
எல்லைக்குவந்துவிடு என்மகளேயென்றுசொல்லி
இத்தப்படியே யிசைந்தபுத்திதான்சொல்லி



மேய்ந்துவாவென்று விட்டாளேயப்பசுவை
மேய்ந்துவருவதற்கு மெய்க்குளிர்ந்தேயப்பசு
சிலம்புகலகலெனச் செஞ்சலங்கையோசையிட
பூரணத்தோடே யசைந்தேவிளையாடி
அடிமேலடிவைத்து அன்னம்போல்தானடந்து
காட்டோடேசென்று கடுகவேதான்மேய்ந்து
பொற்புல்லுந்தின்று புனப்பல்லுந்தானருந்தி
தண்ணீர்தாகத்தை தான்பொறுக்கமாட்டாமல்
கண்ணாயிரமுடைய காவனஞ்சோலையிலே
இந்தப்படியே யிருக்கிறநேரமதில்
சிவனாருமங்கே சித்தமகிழ்ந்தந்நேரம்
அலைகடலிலேயுதிக்கும் ஆதித்தபகவானை
விரையவேதானழைத்து விடைதந்தாரென்னவென்றால்
தேசமதையாளுந் தேவேந்திரன்தேவி
பிள்ளையாய்த்தான்வளர்த்த பெரியதொருபசுவும்
சம்புத்தலத்திற் றனிக்குஞ்சோலையிலே
இக்குதிசைகள் தெரியாமல்நிற்குதுகாண்
வழித்தடங்கட்டி வரும்போதுவாவியிலே
தண்ணீர்குடிக்குந் தருவாயில்நீதானும்
செந்தாமரைப்பூவைச் சிறப்பாகமுன்னிடுவாய்
என்றனர்சொல்ல ஏற்றபகவானும்
திகைத்தபசுவுக்கு தெரியவழிகாட்டிடவே
வழியின்படியே வந்ததுவேநற்பசுவும்
சம்புமகாப்பொய்கைதன்னருகேவந்துநின்று
பொய்கைதனைக்கண்டு பூரித்துஆகமெல்லாம்
சுற்றிவலம்வந்து தூயதிருநற்பசுவும்
தங்கப்படித்துறையைத் தான்கண்டேயங்குள்ள
புதுமைகளெல்லாம்பார்த்து பூரித்திருதோளும்
ஆவலுடன்தண்ணீர் அருந்துமந்தவேளையிலே
தப்பாமல்சூரியனும் தாமரைப்பூப்பறித்து
போடவேதான்நின்று பொறிகலங்கிச்சூலாகி
வால்வீசிக்கரையேறி மயங்கியேசூலாகி
மூட்டுகளுந்தானசைந்து முகமுமிகக்குழைந்து
வாயில்நுரைதிரண்டு மயிர்க்கூச்சுதான்தெறித்து
முட்டிமுனங்கி முன்வாயிறுதான்தள்ளி
நாலுதிக்கும்பார்த்து தப்பிவழிநடந்து

காதுமடைத்துக் கண்ணுமிருளாகிச்
சிவனாரையங்கே தோத்திரங்கள்செய்து மெள்ள
எல்லைதனில்வரவும் ஏங்கிமிகத்தளர்ந்து
செட்டியார்கள்வீதியிலே சென்றுமேகால்மடித்துப்
படுத்ததேயப்போ பலபேருமோடிவந்து
நாடாருமிந்திரற்கும் நாகமடந்தையற்கும்
தேடாத்திரவியமே சிறந்தமகாதேவியம்மா
மயிலே நீபோமிடத்தில் மலைநாகந்தீண்டியதோ
மாயமிருகம் வளைந்துமிரட்டினதோ
நச்சுப்புல்லுந்தின்றதுவே நாகங்கடித்ததுண்டோ
என்றுபுலம்பி எல்லோருமோடிவந்து
விஷத்துக்குபார்த்து மேல்தடவி நீறுமிட்டு
செட்டிச்சிகளெல்லோரும் சிறக்கவேயோடிவந்து
சந்தனகுங்குமந் தானுமிகக்கொண்டுவந்து
ஆவின்மேலெல்லோரும் அடைவாகத்தான்பூச
அப்போவொருதாதி யானதொருவார்த்தைசொல்வாள்
பசுவின்வடிவல்லப் பாலன்வடிவென்றுசொல்லிக்
கழுநீறும்புல்லுங் கலந்துகுடிக்கவைத்து
சந்தனமும்பன்னீருந் தானுமிகப்பூசி
ஆலவட்டங்கொண்டு அருகிருந்துதான்வீச
சுற்றிதிரைகட்டி சூழவேகாத்திருக்க
நாகந்தெளிந்து தான்விழித்துபார்த்தவுடன்
பசுவின்வயிற்றில் இருக்குமந்தப்பாலகனுஞ்
சிறப்பாய்பிறந்திருக்க வேணுமென்றார்செட்டிச்சிகள்
என்றபொழுதே யெழுந்ததேநற்பசுவும்
செம்பொன்மணிமண்டபத்திற் சேரவேவேணுமென்று
ஆசாரமேறி அசையாமணியடித்துத்
தங்கமணித்தூணோடே சாய்ந்ததுகாண் அந்நேரம்
இந்திரனார்தேவி யிளங்கோதைதான்கேட்க
அசையாமணியை யசைக்கவந்தகாரியமேன்
இந்திரரும்போனார் தவத்துக்கேயென்றுசொல்லி
எந்தவிதமோ தெரியவுமாட்டுதில்லை
பாருங்களென்றுசில தாதியரைவிட்டார்காண்
போனார்கள்தாதியர்கள் பொற்கொடியாள்சொற்கேட்டு
வந்துமேபார்த்து மறுபடிதான்சொல்லலுற்றார்
நாக... ந்தையாரே நல்லதொருதேவியரே



6

வளர்த்தபசுவந்து மயங்கிக்கிடக்குதென
எண்ணத்தொலையாத எற்பசுக்களுண்டு
எந்தபசுவென்றுகண்டீர் எந்திழையீர்சொல்லுமென
கண்கள்பவளமுமாய் கண்டவர்க்குநல்லுறவாய்
நெற்றியிலேவெள்ளியுமாய் நிறமெலாம்பொன்னிறமாய்
என்றமொழிகேட்டு ஏங்கியேயோடிவந்து
சிங்காசனத்தைவிட்டுத் திரும்பியேயோடிவந்து
காருவினண்டையிலே கதறியேயோடிவந்து
தேனேமரகதமே நியக்கம்வந்தகாரியமேன்
மானேமரகதமே மயங்கிடுவதென்னவென்று
துயரத்துடனே சொல்லுவாளிந்திராணி

விருத்தம்

அந்நினைடந்ததுண்டோ வாறுரைதவிர்த்ததுண்டோ நிந்தையாய்ப்பெரியோர்முந்நூல் நெடுமறைதவறினே மோ, கந்தன்மாலயன்வேறென்று கருத்தினில்நினைத்த துண்டோ, உந்தன்முன்னோர்கள்செய்த இகழ்வினைமுடிந்தவாறோ.

நடை.

மானேயுனக்கு வஞ்சனைகள்செய்ததுண்டோ
கொள்ளிக்கண்ணியான கொடும்பாவிபார்த்தானோ
மலையிதிலேறி மலைப்புல்லுத்தின்கையிலே
விஷங்கள்கடித்ததுண்டோ விள்ளுவாயெந்தனிடம்
உந்தன்திருமேனி யுள்ளடைந்துவாடுவதேன்
இந்தவிதிவருமோ அறியேனையென்றுசொல்லி
குங்குமச்சந்தனமும் கூட்டிக்குழம்புசெய்து
செங்கையால்வாரித் தெளித்தாளேயுத்தமியாள்
அப்போதுகூடத் தீரவில்லையம்மயக்கம்
காடிக்கழுநீருங் கஞ்சியுந்தான்கலந்து
விட்டபொழுதே குடித்ததுவேநற்பசுவும்
பாரக்களைதீர்ந்து பார்த்துமேயந்நேரம்
கண்கள்பொரிபறக்குங் காலசந்துவால்சுற்றும்
மானத்தைப்பார்த்து மனதையருவருக்கும்
ஆனந்தமாகி யதிரநடனமிடும்
சிவசிவாவென்றுசொல்லி திகைத்துநெடுமூச்செறியும்
அரகராவென்று அலறுவதைத்தான்கண்டு

தேவியுமங்கே திகைத்துமொழிசொல்வாள்காண்
பசுவுக்குவந்தநோய் பார்த்தறிந்துசொல்வோரைக்
கூட்டிவாவென்றாள் கோதையுமிவ்வாறும்
ஆயர்இடையர்தம்மை யழைத்தோடிவந்தார்கள்
வந்தவர்களப்பசுவை மதியோடிதான்பார்த்து
சொல்லுவாரந்த தோகைமயிலாட்கு
ஆரமூலப்பசுவு மடக்கிமிகச்சூலாச்சே
இன்றுநாளையினு மீற்றுமயக்கமிது
என்றுதான்சொல்லி யேகினரப்போது
பசுவின்மயக்கத்தைப் பார்க்கமுடியாமல்
கோவிற்கால்தன்னில் கொண்டுவாவென் றுரைத்தாள்
தாதியர்கள்கூடித் தானெடுத்தாரப்போது
கொண்டுவந்துவிட்டார் கோவிலின்கால்முன்பாக
சூழநிறைந்து தாயமிடம்பண்ணுவித்து
வாய்த்தபரிகாரிகளை வரவழையுமென் றுரைத்தாள்
பரிகாரிகள்வந்து பணிந்துமேதெண்டனிட்டார்
கோவைப்பிழைக்கவைத்தால் கோடிதனங்கொடுப்பேன்
என்றமொழிகேட்டு யேற்றபரிகாரிகளும்
காட்டுமருந்துங் கடிமருந்துமொருகோடி
சிவனைநினைந்து தோத்திரங்கள் செய்திருன்
அபயமென்றாள் அல்லலொழிப்பாயென்றாள்
செங்கைசிவப்பத் திருவயிற்றிலேயறைந்தாள்
அய்யோகோவென்று அடித்துவிழுந்தாள்
அப்போசிவனும் அங்குள்ளதேவர்களும்
கயிலாசமீதிருந்து கண்டார்களந்நேரம்
வானுலகந்தன்னை வழிதிறந்துபார்க்கலுற்றார்
வைகுண்டலோகம் வழிதிறந்துபார்த்தார்கள்
அநியாயமோவென்று அலறியழுதகுரல்
மகாதேவர்தானும் மனதாரக்கேட்டதன்பின்
சிவபெருமானங்கே திருவாய்மலர்ந்தருளி
சிவபெருமானீஸ்வரியைத் திரும்பிமுகநோக்கி
போய்நீயுமையே புகழ்ந்தகுறி சொல்லென்றார்
பத்தினியாய்ச்சென்று பார்த்துரைப்பாயென்றருள
அந்தவுமையவளும் அரனுரைப்படியே
கொக்கிறகுசூடிக் குறமாதுதன்னைப்போல்
பொற்கூடைபொற்பிரம்பு பொற்குடுக்கைதானெடுத்து



பாடிநடந்துவந்தாள் பார்வதியாள்நற்குறத்தி
பாடியிருந்து பரமனிருதாள்பணிந்து
இருந்தவளைப்பார்த்து இறைசிவனார்சொல்லுகிறார்
குன்றுமலைச்சி கொடிச்சிகொடியிடைச்சி
வள்ளிக்குறமாமி மலையரசன்மகளே
என்றனதுகைபார்த்து ஏற்றகுறிசொல்லுமென்றார்
குறிகளுமப்போது குறமாதுசொல்லுகிறாள்
மண்ணுஞ்சுமந்ததுண்டு மரத்தாலடியுமுண்டு
சிறுத்தொண்டர்பிள்ளைகறி உண்ணப்போனதுண்டு
மண்டோதரியுடனே வாளரக்கன்மாளிகையில்
கூடியேவந்து குழந்தையாய்ப்போனதுண்டு
ஆரூரில்சோழன் அருமைமகனையன்று
தேரூர்ந்துகொன்றெழுப்பச் செய்ததுந்தானுண்டு
பிள்ளையொருமைந்தன் பெருவயிறந்தானுமவன்
அன்னைபிதாவுக்கு முன்னேயவன்பிறந்தான்
இப்படியுநல்லகுறி இசைவாகத்தோனுதென்றாள்
அப்போசிவனு மருளுவார்உத்தமிக்கு
கொச்சைக்குறத்தி குறிப்பார்க்குஞ்சிற்றிடைச்சி
கழுவிலிருந்துகை காட்டினதங்கையரோ
உழுதுதிரிந்தபன்றி யுங்களண்ணன்தானல்லவோ
ஆய்ச்சியர்கள்வீட்டில் அடியுண்டுகட்டுண்டு
வெண்ணெய்திருடியுண்ட வெறியன்றங்கையல்லோ
புன்னைமரத்திற் போயொளித்தார்தங்கையல்லோ
என்றேயிருபேரும் ஏற்றபடிகொண்டாடி
சந்தோஷமாகித் தாமேவிடைகொடுத்தார்
திருவாபரணமெல்லாம் பூட்டிச்சிவனாரும்
போய்வாறேனென்று புனிதர்விடைபெற்று
மாதாவுமன்னேரம் வானுலகுவிட்டிறங்கி
தேவேந்திரலோகஞ் சென்றாள்குறமாது
மைவாழ்குறத்தி வானவர்தன்கோவில்வந்தாள்
இந்திராணியம்மை யெங்கிருக்கிறாளென்றாள்
இந்திராணிகண் டெழுந்துமேயோடிவந்து
வாராய்குறமாதெனவே வந்தேனெனவுரைத்தாள்
பாராய்குறத்தியம்மா பசுவைபிழைப்பித்தால்
வேண்டியதெல்லாந்தருவேன் விதம்விதமாய்கொடுப்பே
சொன்னவுடனே சொல்லுவாள்குறமாது [னென்னச்

தேவியுமங்கே திகைத்துமொழிசொல்வாள்காண்
பசுவுக்குவைத்தநோய் பார்த்தறிந் துசொல்வோரைக்
கூட்டிவாவென்ருன் கோனுமவனுந்தான்
ஆயர்இடையர்தம்மை யழைத்தோடிவந்தார்கள்
வந்தவர்களப்பசுவை மதியோடுதான்பார்த்து
சொல்லுவாரந்த தோஷமயிலேட்டு
ஆரழலைப்பசுவு மடக்கிமிகச்சூலாச்சே
இன்றுநாளையீனு மீற்றுமயக்கமிது
என்றுதான்சொல்லி யேகினாரப்போது
பசுவின்மயக்கத்தைப் பார்க்கமுடியாமல்
கோவிற்கால்தன்னில் கொண்டுபோவென் றுரைத்தாள்
தாதியர்கள்கூடித் தானெடுத்தாரப்போது
கொண்டுவைத்துவிட்டார் கோவிலின்கால்முன்பாக
சூழநிறைந்து தாயிடம்பண் ணுவித்து
வாய்த்தபரிகாரிகளை வரவழையுமென் றுரைத்தாள்
பரிகாரிகள்வந்து பணிந்துமேதெண்டனிட்டார்.
கோவைப்பிழைக்கவைத்தால் கோடிதனங்கொடுப்பேன்
என்றமொழிகேட்டு யேற்றபரிகாரிகளும்
காட்டுமருந்தும் கைமருந்துமொருகோடி
சிவனைநினைந்து தோத்திரங்கள்செய்திடவும்
அபாயமென்ருள் அல்லமொழிமாதென்ருள்
செங்கையைப்பத் திருவயிற்றிலேயறைந்தாள்
அப்போகோவென்று அடித்தலறிழந்தாள்
அப்போசிவனும் அங்குள்ளதேவர்களும்
கயிலாசமீதிருந்து கண்டார்களந்நேரம்
வானுலகந்தன்னை வழிதிறந்துபார்க்கலுற்ருர்
வைகுண்டலோகம் வழிதிறந்துபார்த்தார்கள்
அநியாயமோவென்று அலறியழுதகுரல்
மகாதேவர்தானும் மனதாரக்கேட்டதன்பின்
சிவபெருமானங்கே திருவாய்மலர்ந்தருளி
சிவபெருமானீஸ்வரியைத் திருமுகமேநோக்கி
போய்நீயுமையே புகழ்ந்தருளிச்சொல்லென்ருர்
பத்தினியாய்ச்சென்று பார்த்துவைப்பாயென்றருள
அத்தவுடையவளும் அரனுரைப்படியே
கெச்சிறந்தக் குறமாதுதன்னைப்போல்
பொற்கூடைமொற்பிரம்பு பொற்குறிக்கைதானெடுத்து



பாடிநடந்துவந்தாள் பார்வதியாள்நற்குறத்தி
பாடியிருந்து பரமனிருதாள்பணிந்து
இருந்தவளைப்பார்த்து இறைசிவனர்சொல்லுகிருர்
குன்றுமலைச்சி கொடிச்சிகொடியிடைச்சி
வள்ளிக்குறமாமி மலையரசன்மகளே
என்றனதுகைபார்த்து நற்குறிசொல்லுமென்ருர்
குறிகளுமப்போது குறமாதுசொல்லுகிருள்
மண்ணுஞ்சுமந்ததுண்டு மரத்தாலடியுமுண்டு
சிறுத்தொண்டர்பிள்ளைகறி உண்ணப்போனதுண்டு
மண்டோதரியுடனே வாளரக்கன்மாளிகையில்
கூடியேவந்து குழந்தையாய்ப்போனதுண்டு
ஆரூரில்சோழன் அருமைமகனையன்று
தேருர்ந்துகொன்றெழுப்பச் செய்ததுந்தானுண்டு
பின்னொருமைந்தன் பெருவயிற்றானுமவன்
அன்னைபிதாவுக்கு முன்னேயவன்பிறந்தான்
இப்படியுநல்லகுறி இசைவாகத்தோணுதென்ருள்
அப்போசிவனு மருளுவார்உத்தமிக்கு
கொச்சைக்குறத்தி குறிப்பார்க்குஞ்சிற்றிடைச்சி
கழுவிலிருந்துகை காட்டினதங்கையரே
உழுதுதிரிந்தபன்றி யுங்களண்ணன் தானல்லவோ
ஆச்சியர்கள்வீட்டில் அடியுண்டுகட்டுண்டு
வெண்ணெய்திருடியுண்ட வெறியன்றங்கையல்லவோ
புன்னைமரத்திற் போயொளித்தார்தங்கையல்லோ
என்றேயிருபேரும் ஏற்றபடிகொண்டாடி
சந்தோஷமாகித் தாமேவிடைகொடுத்தார்
திருவாபரணமெல்லாம் பூட்டிச்சிவனரும்
போய்வாரேனென்று புனிதர்விடைபெற்று
மாதாவுமன்னேரம் வானுலகுவிட்டிறங்கி
தேவேந்திரலோகஞ் சென்ருள்குறமாது
மைவாழ்குறத்தி வானவர்தன்கோவில்வந்தாள்
இந்திராணியம்மை யெங்கிருக்கிருளென்ருள்
இந்திராணிகண் டெழுந்துமேயோடிவந்து
வாராய்குறமாதெனவே வந்தேனெனவுரைத்தாள்
பாராய்குறத்தியம்மா பசுவைபிழைப்பித்தால்
வேண்டியதெல்லாந்தருவேன் விதமவிதமாய்க்கொடுப்பே
சொன்னவுடனே சொல்லுவாள்குறமாது [னென்னச்

குறமாதுதானும் குறிசொல்ல இந்திராணி
ஆசனங்கள்போட்டு அடிபணிந்து கேட்கலுற்ருர்
குறமாதுதானும் குஞ்சிரிப்புக்கொண்டருளி
விநாயகபூசைசெய்ய வேணுமென்றுதான்சொல்லி
வேண்டியதெல்லாம் வேணபடித்தான் குவித்து
விநாயகனைத்தானினைந்தாள் வெள்ளிமலைகுறத்தி
கணபதியுமங்குவர கனமாய்படைத்ததனை
உருட்டித்திரட்டியொரு உண்டையாய்பிடித்து
கவளங்கொடுக்க கணபதியும்வாங்கியுண்டார்
கெங்கியடித்துச் சிரித்தாள்குறமாது
கேளாயோவென்குறியும் கேவலமென்றெண்ணுதே
எந்தன்குறிதானும் எள்ளளவுந்தப்பாது
செங்கைவடிவேலனென் சிறுமைந்தன்கண்டாயே
மூத்தமகனுமத்த மூர்த்திவிநாயகன்காண்
கந்தமருமகள் வள்ளிதானுமவள்மாமி
ஆரூர்சடையீசர் அவருடையபத்தினியாள்
பரமேஸ்வரருடைய பார்வதியும்நான்தாண்டி
உன்னுடையசிந்தையிலே நினைத்தபடி சொல்லுகிறேன்
வானுலகமான மகன்வருவானுன்றனக்கு
அன்புடனேகேளாய் ஆனகுறிதானும்
இம்மையிலும்மறுமையிலு மென்குறிகள்தப்பாது
ரத்தினமுடிசூடி நல்லமைந்தனும்வருவான்
பெற்றிடுவீர் இப்போது பெருமான் திருவருளால்
கண்ணிறைந்தபாலகனுர் கணக்கெழுதத்தோன்றுகிருர்
நீலகண்டர்தம்மருளால் நினைத்தபடிகிடைக்கும்
வளர்ந்தபசுவயிற்றில் மைந்தர்வந்துதோன்றுகிருர்
கோவின்வயிற்றில் குமாரன்வந்துதோன்றுகிருர்
சித்திரைக்குச்சித்திரையிற் சிறந்தபவுர்ணையில்
அத்தன்தலைகிழமை யாநித்தவாரமதிற்
[illegible] பொருந்தியபொற்குண்டலமும்
ஆயிரங்கிங்கிலியர் அசைக்கவொண்ணுப்புத்தகமும்
எழுத்தாணிகைப்பிடித்துப் பிறப்பாரடியென்மகளே
உத்தமமாய்வெந்நீரும் ஒளிருந்திருவழகாய்ச்
சித்திரபுத்திரர்வந்து செனிக்கிருர்மாயையிலே
பூலோகம்ஆளப் பிறக்கிருர்பொற்கொடியே
எதுர்புகடையானைதலை யெல்லாமெழுதவல்லார்



புத்தகமுந்தன்னிற் புகழ்ந்தெழுதும்புண்ணியனுர்
அருளுஞ்சிவனுக்கும் ஆனமகாவிஷ்ணுவுக்கும்
வருக்கும்பிரமாவுக்கும் வாழ்விக்கும்லட்சுமிக்கும்
கணக்கராய்த்தானிருந்து காரியமெல்லாம்பார்ப்பார்
இப்படியாக இருப்பான்காண்வந்திழையே
ஆரணர்கருவேலம் அவர்கையிலிருக்குதுகாண்
இந்திராணிமாதே யிக்குறிபொய்யாதெனவே
இன்பத்தோடுங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
குப்பல்குப்பலாகப்பொன் குவித்தாளே வந்திழையாள்
அந்நேரந்தான்குறத்தி யவள்முகம்பார்த்துரைப்பாள்
உன்னுடையஅன்பு இருந்தாலும்போதுமினி
பொன்னும்பணமும் புலையன்படைக்கிலையோ
நிறைதாழிமுத்தை நேரேகொடுமென்றுர்
மங்கையரேபோய்வாரேன் மகாதுயாமுந்தீர்ந்து
மகனுடனே நீயும் மகிழ்ந்துமேவாழ்ந்திருப்பாய்

விருத்தம்.

உமையவள்குறிகள்சொல்லி யுரைப்படிமுடியுமென்று
சமையுநல்லிந்திராணிக்குத் தானுமேமனதைத்தேற்றி
அமையவேவரத்தையீந்து யடைவுடனரன்பால்சென்று
உமையவள்நடந்ததெல்லா முரைத்தவநீடத்துற்ருளே.

நடை.

அப்பால்நடக்கு மதிசயத்தைக்கேளுமென்றுர்
நாகமடந்தையரும் நல்லகுறியொன்றுசொல்லி
பசுவின்வயிற்றில் பாலன்பிறப்பதுதான்
நிச்சயமாகயெண்ணி நினைவுகளைவிட்டுவிட்டு
கொலுச்செய்யுமண்டபத்திற் கோடையும்வீற்றிருந்து
வானம்புவலோக மண்பூமியுள்ளதெல்லாம்
சிறப்பிக்கவேணுமென்று சீரான [illegible]
பறையுமென்றபோதே யழைத்தங்கேவிட்டார்கள்
பசுவயிற்றிலிப்போது பாலன்பிறக்குதென்று
ஏழுலோகத்திலுள்ளோ ரெல்லோருந்தா [illegible]
[illegible]றைசாற்றுமென்று பைங்கொடியாள் சொன்னவுடன்
[illegible]ள்ளுவனுமப்போது வாகாய்பறையறைந்தான்
தெருவீதிகளெல்லாஞ் சிறக்கவேபந்தலிட்டார்
[illegible]த்துவரைந்து [illegible]

வயிரக்கால் நட்டு வளைவையாய்த் தானிறுத்தி
தங்கத்தாலேயடுசெய்து சதிர்பந்தல் போட்டார்கள்
பவளத்தால்காலும் பண்பாகத்தானிறுத்தி
விதவிதமாய்ப்பந்தல் வேடிக்கையாய்ச்செய்து
இந்திரன் நற்சபைக்கு எதிரானதென்புறத்தில்
அன்பதுகாதப்பாப்பி அகலமுன்னபந்தலென்று
தங்கத்தால்கால்கள் சதிராகத்தானிறுத்தி
வெள்ளியினுற்கால்கள் விதவிதமாய்த்தானிறுத்தி
நவரத்தினத்தாலே நன்றாகத்தானழுத்தி
சித்திரவிஸ்தாரமாய்ச் செய்யவேவேணுமென்றான்
பத்திபத்தியாகப் பண்பாகச்செய்தார்காண்
தேவாதிதேவரெல்லாஞ் சிறக்கவேவந்திருக்க
தபோதனர்களெல்லாருந் தானுமேவந்திருக்க
முனிவர்களெல்லாரும் முக்கியமாய்த்தானிருந்து
அந்தணர்களெல்லாரும் அப்படி தானிருக்க
சங்கீதமேளமுதற் றப்பாமல்வந்திருக்க
பட்டணத்திலுள்ள பரிசனங்கள் தானிருக்க
வகைவகையாப்பந்தி வகுக்கவேவேணுமென்றான்
பத்திபத்தியாகப் பண்பாகச்செய்யுமென்றான்
அத்தப்படியே யடைவாகச்செய்யவுற்றான்
பிள்ளைபிறந்தப் பெருநடத்தவந்ததென்று
எழுலோகமறிய இடிபோல்முரசடித்து
வாருமென்றபோதே என்றுவனும்பறைசாற்றத்
தேவர்முனிவர் சிறக்கவேவந்தார்கள்
ரிஷிகள்முதலாக எல்லோரும்வந்தார்கள்
அந்தணர்களெல்லாம் அப்படியேவந்தார்கள்
பட்டணத்திலுள்ள பரிசனங்கள்வந்தார்கள்
கூன்குருடுசெவிடுமெ தெம்பமாய்வந்தார்கள்
அவரவருக்கெல்லாம் பிரியமாய்ப்போது
தானங்கள்வாங்கத் தான்வந்திருந்தார்கள்
வந்தபேர்க்கெல்லாம் வடிவாசனங்கொடுத்து
திருமஞ்சனங்கள் சிறப்பாகக்கொண்டுவந்தார்
மாணிக்கச்சங்கு வலபுறத்தே நின்றூத
வேதப்பிராமணர்கள் வேதங்கள்தானோத
மங்கையர்கள்வந்து வாழ்த்திக்குரவையிட



கன்னியர்களெல்லாங் காவலாய்ச்சூழ்ந்துநிற்க
அங்கயற்கண்ணம்மை யருகிருந்துகைகொடுக்க
பார்வதியம்மை பண்பாகவந்தார்காண்
பொன்னின்கலமேந்திப் புறப்பட்டாள்பூமாது
மன்னர்பெருமாள்வருகிறஅதிசயத்தை

### நயினார் சிறப்பு.

ஆயிரங்கிங்கிலியர் அசைக்கவொண்ணாபுத்தகமும்
பொன்னினெழுத்தாணியுமே பொற்பாகக்கைப்பிடித்து
காதிலிடுங்குண்டலமும் கனக்கவேதான்பூட்டி
அரனார்திருவருளால் ஆவின்வயிறுவிட்டு
பொன்னின்கலத்திற் பிறந்தார்புகழ்வீரர்
மின்னொளிபோலே வெளிப்பட்டாருத்தமனார்
பூமிவழிசிறக்கப் போர்வேந்தர்வந்துதித்தார்
பாவபுண்ணியங்கள் பதிந்தெழுதவந்துதித்தார்
ஏடும்பிடித்து இடதுகையில்வெண்ணீறும்
காதிலேயிட்ட கவசமணிக்குண்டலனார்
காரித்திரன்மைந்தர் கணக்கரிவரென்பாரும்
எந்தவுலகி லிருந்தவர்காணென்பாரும்
பிரமாவோவென்று பெருத்தமொழியுரைத்தார்
இப்படியுஞ்சிலபேர் எற்றமொழியுரைத்தார்
திருவாழ்க்கைச்சொல்லத் தேவரால்கூடாது
எல்லாகணக்கு மெழுதவென்றுதான்பிறந்தார்
நமசிவாயவென்கிற நன்னமச்சித்தமுடன்
நமனுக்கதிகாரி நானென்றசத்தமதாய்
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகவந்துதித்தார்
தெய்வலோகப்பெண்கள் சிறக்கக்குரவையிட்டார்
பெண்களெல்லாங்கூடிப் பெருங்குரவையிட்டார்கள்
கன்னியர்களெல்லாங் கனக்குறையிட்டார்கள்
பதினெட்டுவாத்தியமும் பாரெங்குந்தான்முழங்க
பூமாரியெங்கும் பொழிந்தார்கள்தேவரெல்லாம்
தேவர்அமிர்தந் திருச்சங்கில்தானேந்தி
சேனையுமங்கே சிவனுமையாள்தான்கொடுத்தாள்
இந்திராணிதானும் இளங்கோதையந்நேரம்
திருவால்விளங்கித் தீர்த்தமுந்தானூடி
பட்டையுடுத்திப் பகவானைதெண்டனிட்டு
பிள்ளையைவாரி முகத்தோடேமுத்தமிட்டாள்

அப்போது அச்சட்டப்பா பார்க்கவன்மேனியெல்லாம்
பாலுமுலையிரண்டுஞ் சுரந்ததுகாண் பைங்கொடிக்கு
தான்பெற்றதுபோலே தான்சைபிற்போனான்காண்
அப்போதொருநாளி யறிவாயெழுந்திருந்து
செய்யங்கடைசாக்கு கனமாகவுள்ளதெல்லாம்
கட்டிவேதாறுங் கொடுத்தாரே கோதையர்க்கு
அப்போதன்னையாரும் அங்கேதானேடிவந்து
மைந்தனைக்கையாலெடுத்து மடியிலிவைத்திருந்து
வர்காப்புதருவி வாயிற்செவிமூக்கெடுத்து
சேறனையெடுத்துச் சுரிகுழலாள்கையமர்த்தி
தொப்புள்அறுத்து குலவைமிகமுழக்கி
சாந்துவைட்டி பின்னையாடை தான்போட்டு
பஞ்சாடைக்குள்ளே பலகலைதானமர்த்தி
வெண்டுமுபசாரம் விதம்விதமாய்ச்செய்துநின்பு
தேவேந்திரன்வையலை காணேமெனவிசைத்து
இந்திராணிதான்புலம்பி ஏங்கவுற்றானந்நேரம்
பாலகனைப்பார்ப்பதற்கென் பத்தாவைகாணவென்று
அப்போசிவனுருமங்குள்ளதேவர்களும்
வந்தவுடனே மகனைத்தான்வாங்கி
தாங்கியெடுத்துக் கழுவிமுத்தந்தானுமிட்டு
கண்டான்மகன்முகத்தைதங் கண்ணாயிரத்தாலே
அந்தகொபிதிரனும் அழகானதாயபே
சந்நிதானிடத்தில் கொண்டுபோமென்றுசொன்னார்
ஆசையுடன்வந்து அரியமகனுக்கு
தெய்வாரிபமனைத் திரும்பியழைத்தார்கள்
பிறந்தகதைதனைப்பாம் செகமற்கேட்டவுடன்
இந்தப்படியாய் இருக்குமந்தவேளையிலே
நவக்கிரகமெல்லாம் நலமானதாளொன்றில்
பெரிடவேணுமென்று பெயர்கொருவிந்திரனும்
சித்திரையில்வந்தநிறு சித்திரபுத்திரனென்றார்
அப்படியேபேரை அழைத்தார்களந்நேரம்
சிறிட்டபாற்பசுக்கள் சிறப்பாய்க்கொடுத்தனர்காண்
தானதருமங்கள் தான்கொடுத்தாரந்நேரம்
மகனையன்றுபெற்றெடுத்த வாய்ந்தவொருபசுவும்
மகனுக்குப்பாலமுர்தம் வாஞ்சையாய்த்தான்கொடுத்து
நிற்குமவேளையில் நினைவுமறந்தொருநாள்



பாலகன்னெஞ்சிற் பசுக்குளம்புபட்டவுடன்
இந்திராணிகண்டு ஏங்கிமிகப்பயந்து
மகனையெடுத்து மார்போடேதானணைத்து
இந்திராணிதானும் இளம்பசுவையந்நேரம்
கரத்தாலடித்தவுடன் கண்சிவந்துதான்பசுவும்
திடமுடையாற்பசுவுந் தெய்வமேசாட்சியென்றார்
சரணஞ்சரணமையா தற்காத்துக்கொள்ளென்று
சிவனை நினைந்து தோத்திரங்கள்செய்ததுவே
அப்போசிவனும் அங்குமுள்ளதேவர்களும்
பசுவையடித்த பாவத்தைத்தான்தெரிந்து
இந்திரவிமானத்தை யெடுத்துக்கொண்டோடிப்போய்
இந்தட்சணம்பசுவை இங்கேயழையுமென்றார்
தேர்கொண்டுவந்தார்கள் தேன்மொழியாள்வாசலிலே
வந்தவுடனப்பசுவு மகாதேவரைப்போற்றி
தேரின்மேலேறிச் சிவனுரிடஞ்சேர்ந்து
இந்திரர்க்குப்பிள்ளை கொடுத்துவாவென்றுரைத்தீர்
பாலனையின்று கொடுத்தேன்பரிவுடனே
கொடுத்தவுடனென்னைக் கோதையாள்தானடித்தாள்
வந்துவிட்டேனென்று வருந்தியுரைத்ததுவே
சிந்தைமகிழ்ந்து சிவனுருமேதுசொல்வார்
உன்மகனையிங்கே யுனக்கழைத்துநான்தருவேன்
வஞ்சமில்லாமல் மனமகிழ்ந்துநில்லென்றார்
அப்படியேநற்பசுவும் ஆனந்தங்கொண்டதுவே
இப்பால்நடக்கின்ற இவ்வசனஞ்சொல்லுகிறேன்
தேசாருமிந்திரருந் தேவியுந்தானேதுசொல்வார்
பாலன்பசித்துப் பதறியழுதவுடன்
பாலமுதம்வாங்கப் பசுவானைத்தேடுமென்றார்
பசுவைமகத்தேடிப் பார்த்தார்களெல்லோரும்
காடெல்லாந்தேடிக் காணேமெனவுரைத்தார்
இந்திராணியான இளங்கோதைதானழுதாள்
இந்திராணியப்போது இயம்பிமுகம்வாடி
மாயைவந்து மாயையாய்ப்போச்சுதென்று
மற்றுமொருபாற்பசுவின் பாலமுதைமைந்தனுக்கு
குற்றம்வாராதபடி கொடுத்துவளர்த்தனரே
பாலகர்க்குந்தொட்டிலைப் பாங்காகச்சமைப்பார்காண்
வயிரம்வைடூரியத்தால் வகைவகையாய்ச்செய்தார்காண்

சித்திரபுத்திரனைச் சிறந்ததொட்டிலிலே
வைத்துத்தாலாட்ட மன்னவருஞ்சொன்னவுடன்
ஆவின்பாலூட்டி யரியதொட்டில்மேலிட்டுத்
தொட்டிலேத்தானசைத்து சூழநின்றதாதியர்கள்
இந்தநல்லதொட்டிலிலே என்மகனே நித்திரைபோ
தேவேந்திரன்மனைவியே செம்பொன்னே தாலுறங்காய்
இந்திரனார்செல்வங்கள் ஈடேறவந்தானே
வாலுலகமான வந்துபிறந்தானே
மைந்தராய்வந்து மகவாசைதீர்த்தானே
எங்கள் துயர்தீர இன்றுவந்தபாலகனே
தோகைகணக்குஞ் சிறந்தபெருங்கணக்கும்
மண்ணிற்கணக்கும் மகாதேவர் தன்கணக்கும்
விண்ணிற்கணக்கும் விரைந்தெழுதவந்தவனே
சந்திரர்சூரியர் சார்ந்ததிருமகனே
ஆதிபரன்கட்டளையில் அவதரித்தபாலகனே
துட்டர்கணக்குந் துரோகியர்கள்தன்கணக்கும்
சிட்டர்கணக்குந் தெரிந்தெழுதவந்தவனே
தேவேந்திரன் தனத்தாற் சிறியவுயிர்செய்யும்
நன்மைகளுந் தின்மைகளு நன்றாயறிந்தவனே
சிராய்சிவலோகஞ் சேருகின்றபுண்ணியரே
ஆராய்ந்துசொல்ல அறிவுடனேவந்தானே
ஆவின்வயிற்றில் அவதரித்தபாலகனே
எங்களருமபொருளோ யிந்திரனார்கண்மணியோ
எங்கள்குலம்வாழ எழுந்தருளும்நாயகமோ
இந்தப்படியாக வேற்றிநின்றுதாலாட்டி
அந்தமகனை யரிதாய்வளர்க்குங்கால்
தாதிமார்தன்பாலைத் தாலுண்ணச்சொன்னார்கள்
உங்கள்முலைப்பாலை யுண்கவேநான்பிறந்தேன்
என்றறிந்துசொன்ன விளமைகுழந்தைதக்கு
மந்திர நூல்வேத மகவுறிவையுண்டாக்க
வாத்தியார்தம்மை வரவழைத்தாரந்நேரம்

விருத்தம்.

இந்திரன்புதல்வருக்கு இன்பமாயறிவைத்த
தந்திரவாத்திமார்கள் தான் அறிவோமென்றே
மந்திரப்புதல்வனுக்கும் வகைசொல்லுமென்றுகேட்க
மந்திரமுரைசொல்லாமல் மைந்தனுமுரைசெய்தாரே.



வசனம்.

அகோதெப்படியென்றால் இந்திரன் இந்திராணி இவர்கள் தாளொருமேனியும் பொழுதொருவண்ண மாக வளர்த்த சித்திரபுத்திரனானவனுக்கு வேதங் களப்பியாசம் பண்ணுவிக்கவேணுமென்று வாத்தி யாரை யழைப்பித்துப் பட்டணமெல்லாம் அலங்காரஞ் செய்து மகாதானம் கோதானம் வஸ்திரதானங்கள்செய் து வோமம் எக்கியங்களெல்லாஞ்செய்து சித்திரபுத்திர ற்கு வாத்தியார் ஹரிஓம் என்றுசொல்ல அதற்குப் பயன் சொல்லுமென்று வாத்தியாரிடத்திற்கேட்க அவர் பயன் சொல்லயேதுவில்லாமல் சித்திரபுத்திரர்தானே பயன் சொல்லிப் பின்னடக்கிற காரியங்களைச்சொல்லுகிறோம்.

நடை.

விநாயகர்பூசை விதம்விதமாய்த்தான்முடித்து
ஆதிமுதலான அரிவையுங்கைக்கொடுத்து
அரியோமரியோமென் றுதரவாய்ச்சொன்னார்கள்
ஆயிரம்பார்ப்பார்கள் அரியோநமவெனவே
அரியென்றசொல்லுக்கு அருத்தங்களுரையுமென
அப்போதுவாத்தியார் அதன்பொருள்சொல்லாதிருக்க
நான்சொன்னபடிகேளு நல்லதொருவுத்தமரே
அரிக்கும்பொருள்சொன்னால் அண்ணாவே நீரெனக்குக்
குருக்களுமாவீர் குற்றமில்லைகண்டீரே
எனக்குமோர்அண்ணா யீசனல்லால்வேறுமுண்டோ
மேலானவுங்களுக்கு வேதமதுசொல்லுவேன்யான்
இட்டியான்வாசிக்க கேளுங்களென்றுசொல்லி
நன்னெறிநூல்விழித்து நற்படமீதேறி
சைவநூல்வேதந் தழைக்கவேவாசித்தார்
வோரெட்டுக்குள்ளே யுலகமெல்லாம்வாழவென்று
தேவர்கள்வாழவென்று இருவேடுவாசித்தார்
மூவர்கள்வாழவென்று முதலேடுவாசித்தார்
அயனரன்மால்செங்கை யானதொருசிவனும்
நமனுரும்வேந்தன் நடுக்கணக்கிலுள்ளவர்காண்
சங்கரநாராயணர் தான்கொடுத்தபட்டோலை
அட்டவணைபட்டோலை யப்படியேவாசிக்க
வாத்தியார்தன்கணக்கு வந்துவெளிப்பட்டதுகாண்
தனதுமனையன்றி தலைநாளில்நிருமொரு

அகுதியனையை யடிமையொத்திக்கண்டீரே
உம்முடையசெய்கையும் உமக்கறியப்போதாமல்
என்னுடையபேட்டி லெழுதினேனென்றுசொன்னார்
என்றுசொல்லிவாத்தியா ரிருகையாற்போற்றிசெய்து
ஈஸ்வரனார்கற்பனையோ வென்றுசொல்லித்தானிருக்க
இவ்வார்த்தைகள்கேட்டு இந்திரனிந்திராணியுடன்
மைந்தனையங்கே மனமகிழ்ந்தழுத்தயிட்டார்
இப்படியேதானும் இருக்குஞ்சிலநாளதல்
மைந்தர்பெருமாள் மனமகிழ்ந்தேதுசொல்வார்
பூலோகசோதனைக்கு போய்வாரேனென்றுரைத்தார்
நகரங்கள்சோதனைக்கு நாம்போறோமிந்திரரே
அங்கேசிவன்வாச லருகிருக்கநாம்போறோம்
என்றுகணக்கை யிதமுடனே தான்சுருட்டி
நன்றியுடனே புறப்பட்டார்நற்கணக்கர்
இட்டபடியே யீஸ்வரனார்தான்கொடுத்தார்
கட்டளையிட்டபடி கணக்கெழுதப்போறோமென்றார்
அந்தக்கயிலையரனார்கருவேலம்
நித்தமெழுதிவர நிமலரருள்கொடுத்தார்
பத்திரமாயென்வசத்தி றந்ததொருபட்டோலை
சிருடனேயென்வசத்திற் சிறப்பாகவிருக்குதுகாண்
பரமனார்தான்கொடுத்த பண்டாரபொக்கிஷமும்
கொத்தவரிசைகளை கொற்றவரேகண்டீரோ
பொன்னுலகமட்டுமல்லோ புண்ணியனே நீராண்டீர்
நிறைந்தபுகழ்மாதாவே நீருமிகத்தவமிருக்க
உங்களுக்குப்பிள்ளையா யுகந்தளித்தார்கண்டீரோ
அண்டரண்டகோளமட்டும் ஆணுவளவுந்தப்பாமல்
எழுத்தாணிபட்டோலை யென்கையிற்றான்கொடுத்தார்
மூத்திரைமோதிரமும் மூன்விரலிலேயணிந்தார்
கண்டீரோ நீருங் கனையாழிமோதிரத்தை
இவ்வளவுவாழ்வுமுங்க ளிருவருடவாழ்வும்
புதிதானகாரியத்தைப் போய்ப்பார்க்கவேணுமென்று
போய்வருவேனையா பொருந்தவிடைதாருமென
வாடவயசுவருமளவில் நீரிருந்தால்
பாலனாய்வந்த பலங்கிடைக்குமென்றுசொல்ல
அந்தப்பாலகனும் அரனருளாற்றான்கிடைக்கும்
அப்படியேதானும் அவ்விடத்திலிருந்துவிடேன்



எப்படியுமென்தாயே யிங்குமங்குமாயிருப்பேன்
போகவிடையருளும் புண்ணியரேயென்றுரைத்து
மாதாவைதந்தையை வணங்கியிருபாதமதில்
புட்பமதுபோட்டுப் பணிந்தாரேபுண்ணியனார்
அருமைத்திருமகனை யன்னைபிதாதான்வாழ்த்தி
இந்திரவான்தேரி லேறியேயுத்தமனார்

விருத்தம்.

சென்றனனீசன்பாற் சீர்பாதந்தெண்டனிட்டு
நின்றனன்மகிழ்ச்சிகூர்ந்து நிகரில்லாவுமையாள்தானும்
வந்தனன்மகனேயென்று வாரியேமுகந்துகொண்டாள்
மைந்தனுமங்குவந்த வரன்முறையியம்பலுற்றார்

அதேதெப்படியென்றால் சித்திரபுத்திர நயினாரானவர் இந்திரன்இந்திராணி இவர்களை வணக்கத்துடனே யனுப்பிக்கொண்டு தேரின்மேலேறி சுவாமி கயிலையங்கிரிவாசரான பரமேசுரனையும் பார்வதியம்மாளையுங் கண்டு நமஸ்காரஞ்செய்து சிந்தைகளிகூர்ந்து நிற்கப் பார்வதியம்மாளும் மகனைக்கட்டி வாரிமுகந்துகொண்டவுடனே சித்திரபுத்திர நயினார் சுவாமியிடத்திலும் அம்மாளிடத்திலும் அவ்விடத்தில் நடந்த விருத்தாந்தமெல்லாஞ் சொல்லுகிறார். எ-று.

நடை.

அப்பால்நடக்கும் அதிசயங்களுள்ளதெல்லாம்
செப்பமுடனுஞ் சொல்லுகிறேன்சிராக
மாதாபிதாவை மறந்திருந்தேனித்தனைநாள்
ஈஸ்வரன்சொன்னவிவை யெள்ளளவுந்தப்பாமல்
தாமரைப்பூவாய் தடாகத்திற்சென்றிருந்து
ஆவின்வயிற்றில் அவதரித்தேனாதரவாய்
இந்திரனிந்திராணி யிவர்கள்மனங்குளிர
புத்திரனாகவென்னை போற்றியேதான்வளர்த்தார்
பிறந்தவுடன்தருமம் பெருக்கவேசெய்திடுவான்
என்னையுமங்கே யீன்றதொருநற்பசுவை
என்னைமிதித்ததென்று இந்திராணிதானடித்தாள்
உடனேதானப்பசுவும் உன்கயிலைவந்ததுவே
மற்றுமொருபசுபால் கொடுத்தென்னைவளர்த்தார்கள்
நன்றாய்வளர்த்தார்கள் நாயகியும்நாயகனும்

இந்தப்படியா யிதுவரையும்நானிருந்தேன்
இவ்விடத்துச்சித்தையினால் ஏக்கமிகவுண்டாகி
போகிறேனென்றுசொன்னேன் போர்வேந்தனப்போது
பாலவயசு பருவமுனக்கில்லையென்றார்
இவ்விடத்திற்றானு மிருக்கவேவேணுமென்றார்
இங்கிருக்க நீதி யென்னவுமில்லையென்றார்
அரன்கயிலைசென்று அவ்விடத்தில்நானிருப்பேன்
அங்குமிங்குமாக இருப்பேனெனவுரைத்து
அவர்கள்விடைவாங்கி யடிபணிந்திங்குவந்தேன்
என்று-சித்திரபுத்திரனர் இரக்கமாய்சொன்னவுடன்
பசுவைமிகவழைத்து பாலன்வந்தான்கண்டாயே
என்றரனர்சொல்ல ஏற்றதொருநற்பசுவும்
சென்றுமகனர் திருமுகத்தைதான்மோந்து
எழுந்துமிருகொம்பால் இரங்கித்தடவினதே
இப்படியேதானும் இருக்கின்றவேளையிலே
இந்திரனிந்திராணி இவர்களிருபேரும்
மகனர்தான்போன வழிதடத்தைதானெருக்கி
வந்தார்கயிலை மலைதனிலேவானவர்கோன்
அப்பால்நடக்கு மதிசயத்தைக்கேளுமினி
சிவனரிடத்திலே தேவேந்திரன்புலம்பிப்
புத்திரனுஞ்சத்துருவாய் போனனெனவுரைத்தார்
உரைத்தமொழிகேட்டு உமைபாகரேதுரைத்தார்
சத்துருவென்று சலியாமல்சொன்னயே
தாயாருகே தன்பிள்ளைவந்துதென்றால்
பேயாவுனக்கினிதான் பேசகணக்குமுண்டோ
பித்தரைப்போலே பிதற்றுகிறாய்நீதானும்
நாட்டுக்கணக்கும் நயனர்பெருங்கணக்கும்
நன்மையும்துன்மையும் நடுவெழுதவேணுமென்று
எமதருமர்தன்னிடத்தி லிருந்துகணக்கெழுத
வேணுமென்றுசொல்லி விரும்பியேநாமழைந்தோம்
எங்கிருந்தாலென்ன ஏற்றதொருயிந்திரரே
போம்பிள்ளாயென் றுரைக்கப் போனரேயிந்திரரும்
ஈவ்வானர்தாமும் யேற்றதொருபுத்திரரை
இப்போது நீயும் இயமனுடவாசலுக்குச்
சித்தாந்தம்பாவுஞ் செய்யுமுறைப்படியே
அத்தாந்திரக்கணக்கும் அடைவாயெழுதுமென்றார்



இப்படியேதானும் யியமனைத்தானழைத்து
கலியன்உத்திரத்தாற் களறிகள்தான்மிகுந்து
அவைக்குராலுண்டாகு மானதாலிப்போது
எல்லாக்கணக்கு மியல்பாகத்தானெழுத
சித்திரபுத்திரரைச் சிறப்பாயருளினன்காண்
என்றுநமக்குச் சிவனரிசைத்தபின்பு
நன்றுநன்றுஎன்று நமஸ்கரித்துஅன்னேரம்
இருபேருமொன்றாகி யேற்றவிடைதான்வணங்கி
நின்றபொழுதேபிர்மா நிமலரருளாலே
இருபேரும்வாழவென்று ஏற்றிவிடைகொடுத்து
கட்டழகருடனே கனத்தரண்டஞ்சூலமுடன்
குத்திடுங்கோல்கொடுத்துங் கோலகடாவளித்து
இவ்வளவுந்தான்கொடுத்து ஏற்றபிரமாவும்
வாராய்சிவனுக்கு வழியடிமைசெய்தவர்போல்
சிவனை நினைத்துத் திருத்தொண்டுசெய்வார்மேல்
தவத்தைநினைத்துத் தான்பூசைசெய்வார்மேல்
தருமங்கள்செய்வார்மேல் சற்றுமேசொல்லாமல்
புத்திகளுஞ்சொல்லி போகவிடைகொடுக்க
கருங்கடாமேலேறிதான் கள்ளனைதானும்வைத்து
வலக்கடாவேறி வாரார்யெமதருமர்
நல்லமுரசுசின்னம் நன்றாய்முழங்கிவர
இருபேருமொன்றாகி யிந்திரலோகம்புகுந்தார்
இருபேருந்தாங்கள் இசையவேதான்பேசி
பாரிலுள்ளோர்தன்கணக்கைப் பார்த்தார்களப்போது
சிவகுருவேயென்று திருநீறணியாதார்
நாராயணாவென்று நாமமணியாதார்
பெற்றதாய்தந்தையைப் பேணுதபாவியர்கள்
மண்ணிலிருந்து வழக்கோரஞ்செய்தவர்கள்
அம்பலத்தில்நின்று அனியாயஞ்சொன்னவர்கள்
ஊராருடமைக்குப் பேராசைகொண்டவர்கள்
கல்லாக்கசடர் கணக்குப்படியாதோர்
சிவனைவணங்காதார் திருக்கோயில்சூழாதார்
அயனைவணங்காதார் ஆலயத்தைமேவாதார்
பிச்சைக்குவந்தவரை பின்னைவாவென்பார்கள்
கன்றுவருந்தக் கறந்தபாலுண்டவர்கள்
சுற்றங்கொடுக்கச் சுறந்துபாலுண்டவர்கள்

பொட்டநாழியரக்கால் போட்டளந்தபாவியர்கள்
பிள்ளையழிந்துப் பேதமுறச்சொன்னவர்கள்
உள்ளபொருளை இல்லையென்றேயுரைத்தவர்கள்
தூரவழிக்குத் துணைவாரோயென்றுசொல்லி
ஆருமில்லாகாட்டில் அடித்துபறித்தவர்கள்
குளிசிலையன்றி குளித்திடும்பொல்லாதார்
கொண்டமனையாள் வருந்த கூத்தியார்கள் தன்னைவைத்
மாதாபிதாவருந்த வயிறுவளர்த்திடுவார் [தே
இட்டுண்டுவாழாதார் ஏற்றவர்க்குமில்லையென்பார்
நீட்டும்பிழைகையில் நின்றுமெல்லகேட்டவர்கள்
சாவற்போர்செய்யுஞ் சண்டாளபாதகர்கள்
கொண்டகணவனுக்கு குறிப்பறிந்துசெய்யாதார்
இப்படியாகக்கொற்ற வீழிதுயில்செய்வோரையெல்லாம்
செப்பமுடன்நல்ல செந்தழலிற்றுன்போட்டு
பாசத்தைவீசி பதரவேதான்பிடித்து
நாசிதனில்நஞ்சையிட்டு நாக்கில்துறட்டிவிட்டு
உச்சிதலைதனிலே யோங்கிமூளையறித்து
அச்சப்படக்கண்ணில் ஆணிதனை நிறுத்தி
கையிரண்டும்பின்கட்டாய்க் கட்டியிருகால்பின்னி
மார்பைத்துளைத்து மறுகதிருபாம்புடனே
கூறியதாராசங் கொடுஞ்சியிலேற்றி
ஆண்குறியில்பெண்குறியில் அடைவாய்த்துரட்டியிட்டு
பாறையினிற்போட்டு பதறயிழுத்திழுத்து
வேறுவேறேயுடலை வெட்டியேபோட்டிருந்து
காரமுள்ளவுப்பதை கரைத்ததிலேதானழுக்கி
முள்ளுவனங்களில் முகங்கீழாய்ப்போட்டிழுத்து
பள்ளமேடென்று பாராமற்றுணிமுத்து
இவர்-தங்களையெல்லாம் ஏழாநரகத்தில்
தள்ளவென்றுபட்டோலை தானெழுதிக்கொண்டார்காண்
நல்லோர்பெரியோரை நடுங்கவேசொன்னவரை
கொண்டகணவனுக்கு கொலைமருந்துசெய்தவரை
வீதிவீதியாக விவரமாய்த்தானெழுதி
அவ்வீதிவிட்டு மறுவீதிவந்தார்கள்
பெற்றதாய்சொத்தை களவுசெய்யும்பேதையரை
அரைத்த அம்மிசாத்தாத அரும்பாவியானவரை
குத்துமாஉலக்கை யொதுங்கவையாக்கொற்றவரை



வாசற்படிநடக்கும் வழிசுத்திசெய்யாரை
எந்தப்பதார்த்தமும் ஏற்றிசுத்திசெய்யாரை
கண்டபோதொன்றுசொல்லிகாணமலொன்றுசொல்லி
குண்டுணிகள்சொல்லுங் கொடும்பாவியானவரை
பகலுறக்கஞ்செய்யும் பாவிகள் தங்களையும்
நரகத்திலேயெழுந்த நடுவோலைதானெழுதி
கள்ளுகளோடு கடுகவந்துசிக்கினதே
குண்டுணிகள்சொல்லி குறளிகள்தான்பேசி
சண்டையிட்டுமுன்னே சாலங்கள்சொல்வாரை
கணவனைக்காணமல் கள்ளியவள்வீடுவிட்டுத்
தீர்த்தமுமாடித் திருநாளும்பார்த்தவரை
பத்தாயிருக்கப் பசியாற்றிக்கொண்டவளை
அவர்களைப்போல ஆளுகணக்குத்தப்பாமல்
செய்யவென்றுநல்கணக்குச் சேர்வைதானெழுதி
செட்டிகள்வீதியிலே சிறப்பாகவந்தார்காண்
அவர்களெல்லாமங்கே யடிபணிந்துவாய்புதைத்து
வில்லாச்சரக்கை விலைச்சரக்காய்விற்றிடுவோம்
செல்லாப்பணத்தை செலுத்துவோங்கண்டமரே
எல்லாப்பிழையும் பொறுத்தருளுமென்றுசொல்லி
அவர்களுக்குச்சொல்லி யமைத்தபடிதானெழுதி
வெள்ளாளரெல்லாம் வேண்டினதெல்லாம்படைத்தும்
நெல்லுகளை நாங்கள் வுலர்த்தாமல்விற்றிடுவோம்
கள்ளமரக்கால்நாழி கலந்துமிகவிற்றிடுவோம்
என்றுசொல்லிநாங்கள் குற்றம்பெறுமெனவே
இவர்களுக்குத்தக்க ஏற்றபடிதானெழுதி
பட்டமார்வீதியிலே வந்தார்பரிவுடனே
பட்டமார்வந்து பணிந்துமிகத்தொழுது
குளிக்காமல்சேவிப்போம் கோவிலையும்பூசிப்போம்
பால்தயிரும்நெய்யும் பசித்தெடுத்துசாப்பிடுவோம்
ஏருதமானதனை யேற்றிடுவோமென்றுசொல்ல
இவர்களுக்குமங்கே ஏற்றபடிதானெழுத
அந்தந்தச்சாதிதெரு அடைவாகத்தான்பார்த்து
அவரவர்கள்செய்யும்வகை யதிர்க்கவேதானெழுதி
பாவபுண்ணியங்கள் பகுந்துமேதானெழுதி
புண்ணியஞ்செய்வோர்க்கு புதுமைகள்செய்யுமென்றூர்
புண்ணியஞ்செய்வோரைப் புதுமையாயெடுத்தெழுதி

பசியாமலன்னம் பாங்குடனே கொடுத்தவரை
இடுக்கத்துடனே ஏமாறிவந்தவர்க்கு
உடுத்தப்புடவை யுகந்தளித்தோர் தங்களையும்
பிச்சையுமிட்டுப் பெரியவிடங்கொடுத்து
மகேசுரபூசைக்கு மடங்கட்டிவைத்தவரை
சாலைமாமுஞ் சத்திரமும்வைத்தவரை
சிவபூசைதவபூசை குருபூசைசெய்வோரை
நான்குதிசைவிளங்க நந்தவனம்விடுத்தவரை
ஆலயங்கள்கட்டி யன்னமிகக்கொடுப்போரை
இடிந்தபழங்கோயி லெடுத்துப்புதுப்பித்தவரை
தாகத்துக்காக நல்லதண்ணீர்கொடுத்தவரை
பொரிந்தவயிர்தனக்கும் போகநீர்விட்டவரை
இராக்காலப்பட்டினியை யிதமாகத்தீர்த்தவரை
பஞ்சம்வருங்காலம் பகுந்தன்னமிட்டவரை
பெரியோர்கள்தங்களையும் பேணிநடந்தவரை
விருந்துகள்வந்தால் வேறுவைத்துவுண்ணாமல்
வைத்துவகையில் வஞ்சகஞ்செய்யாரை
தெய்விளக்குமாவிளக்கு நேயமாய்ச்செய்தவரை
மாதானங்கோதானம் வஸ்திரதானமுதலாய்
தானங்களெல்லாம் தயவாகச்செய்தவரை
வழக்கோரஞ்செய்யாமல் மன்னருடன்சேர்ந்தவரை
சிவனைவணங்கிச் சிவபூசைசெய்தவரை
செருப்புக்குடைமுதலாய்ச் சிறந்தபிராமணர்க்கு
கோடைகாலத்தில் கொடுத்தன்னமிட்டவரை
பிள்ளைபால்வார்த்தோரை பிணிக்குமருந்தளித்தோரை
அதிதிபரதேசியருக் கன்னமிட்டுவுண்டவரை
பவுரணையில்நல்விரதம் பத்தியாயிருந்தோரை
பத்தாவின்மேலாசை பண்பாகவைத்தவரை
குருவையுமறவாரைக் கொலைகளவுசெய்யாரை
கணவரிடசொல்லைக் கட்டாய்நடத்தினதை
ஆறுகுளங்கள்தனி லணைகட்டிவைத்தவரை
வழியைப்பறியாமல் வாகாகக்காத்தோரை
கன்றுக்குப்பால்குடிக்குமட்டுங் கருத்தாகவிட்டவரை
தருமங்கள்செய்வோரைத் தப்பாமலெழுதிவைத்தேன்
ஒளிவுமறைத்தவர்க்கு ஊன்றுகோல்தான்கொடுப்பார்
காய்ந்தநிலக்கெண்ணை கட்டாகத்தானளிப்போர்



ஆவைவணங்கி யநுதினமுந்தான்தொழுவார்
விநாயகர்பூசை விருப்பமாய்செய்தவர்கள்
பள்ளிக்கூடங்கட்டிப் பாங்காகவாத்தியார்க்குச்
சம்பளமும்உம்பளமும் தான்கொடுத்தோர் தங்களையும்
கந்தனையென்னாளுங் கருதித்தொழுதிடுவோர்
மாதாபிதாவை மகிழ்ந்துதித்துத்தொழுவோர்
வேதங்களாகமங்கள் விதிப்படியேதானடப்போர்
குருதன்றிசெய்தநன்றி குறையாமற்றானடப்போர்
விஷயங்கள்தனைமீனா விருப்பமாய்செய்தவரும்
வண்ணான்நாவிதன்கூலி மகிழ்ந்தேதான்கொடுப்பார்
தருமங்கள்செய்வோரை தப்பாமற்றானெழுதி
இப்படிக்கொத்த இயல்புடையபுண்ணியரைச்
செப்பமுடனறிந்து செய்தபிழைபொறுத்து
தப்பாமலீஸ்பரனார் தன்னடியிற்றான்சேர்ந்து
வைகுண்டலோகத்துக்கும் வகையுடனேதான்சேர்ந்து
அந்தவுலகத்தி லமரர்களைப்போலிருந்து
புண்ணியஞ்செய்தவர்கள் போதவேதானிருக்க
கயிலைக்குவடபுறத்திற் கவனமுண்டாக்கி
பூங்காவனத்திற் புட்பங்களுண்டாக்கி
காய்கனிகளுள்ளதெல்லாங் கணக்கவேயுண்டாக்கி
எப்போதுஞ்சிவனை இன்பமாய்ப்பூசைசெய்ய
பணிவிடைகள்செய்யவே பாங்காகவுண்டுபண்ணி
அவ்விடத்திலேயிருக்க அன்பாகச்செய்வித்து
வைகுண்டலோகத்துக்கும் வாழ்ந்திருக்கத்தானெழுதி
பாவையர்க்குத்துன்பப் பலனையெழுதுகிறார்
அட்டைக்குழியும் அழுகுபுழுக்குழியும்
கிருமிவகைக்குழிகள் வேறாகச்செய்தார்காண்
மிருகங்கள்வாழ்குழிகள் வேறாகச்செய்தார்காண்
அதில்கிடங்குவெட்டி யதிலேயனல்வளர்த்தி
மூன்றுவனங்களையு மோசமாய்ச்செய்தார்காண்
நாற்பாலம்மயிற்பாலம் நூதனமாய்ச்செய்தார்காண்
காடுங்கரடுங் கல்லுமலைகளுண்டாக்கி
சற்றுநிழலில்லாமல் தவிக்கவேசெய்தார்காண்
நரகக்குழியும் நடுநடுங்கச்செய்துவைத்தார்
மெத்தவேயுண்டாக்கி விமரிசையாய்ஆயுதமும்
ஆயிரங்கிங்கிலியர் அசைக்கவொண்ணாச்செக்குகளும்

இரும்புத்தானுக்காய்ச்சி வேற்றபடினியுத்தி
செப்புத்தானுக்காய்ச்சி சேரவேதானியுத்தி
இரும்புமுக்காலிகளை எத்தெரங்காய்ச்சிவைத்தார்
செவிகளுக்குநாராசஞ் சேரவேயுண்டாக்கி
உச்சிமுதலை யுள்ளங்கால்தன்வரைக்கும்
வகைவகையாயாணி வரிசையாய்த்தானடித்து
தொறணைய வகைகள் தோற்றமிகவுண்டாக்கி
இத்தனைகப்படியே யெவ்வளவுந்தப்பாமல்
பாவபுண்ணியங்களுக்குப் பரித்தவகைசெய்தபின்பு
இந்திரனிந்திராணி யிவர்கள்பாற்போகலுற்றார்
அப்பால்நடக்கு மதிசயங்களுள்ளதெல்லாம்
செப்பமுடனே நானுஞ் சொல்லுகிறேன்கேளுமென்று
மாதாவின்றன்னருகே வந்தார்பெருங்கணக்கர்
மைதருமாசனு மியல்பாகஅருகிருந்தார்
தந்தையவரைவணங்கித் தாயார்தம்பாதமதில்
நமஸ்கரிக்கத்தன்மகனை நன்றாகவேவாழ்வாய்
என்றுசொல்லிபுத்தமரை இருகையாற்றெடுத்து
கன்னல்மொழியாள் கனிவாய்முத்தமிட்டாள்
முத்தமிட்டபோது முன்னின்றநாயகர்கள்
எண்ணெய்ப்பலகைதன்னி லெடுத்தேதான்போட்டு
பொற்கிண்ணிதன்னிற் போதிரித்தெண்ணெயிட்டு
எண்ணெய்க்காப்புச்செய்ய எழுந்தருளுமென்று
எண்ணெய்க்காப்பிட்டபின்பு மற்றவிதான்சோதி
தீர்த்தமாடித் திருநீறுந்தானணிந்து
சிவனைத்தொழுது சிவபூசைதான்முடித்து
வேதப்பிராமணர்க்கு வேண்டுமதானங்கொடுத்து
அதிதிபரதேசியர்க்கு அன்னமிகக்கொடுத்து
மகேசுரபூசையை வண்மையுடன்செய்தபின்பு
ஆபரணமுள்ளதெல்லாம் அழகாகத்தான்பூண்டு
புட்பாதிகளெல்லாம் பொதிந்தேதான்முடித்து
போசனச்சாலைக்குப் போயிருக்கத்தமனார்
நாடாளுமிந்திரரும் நாகமடந்தையரும்
தலைவாழையிலையறுத்து தக்கத்தடமூத்தி
பூமிதனில்வைத்து பொன்னின்மூக்காலிவைத்து
மாணிக்கவட்டிலை வைத்தார்கள்முன்பாக
அக்குத்திரமாய்த்துக் கறிவகையுள்ளதெல்லாம்



சுற்றிக்கறிகளெல்லாம் சேரவேதான்படைத்து
அம்மைப்பூபோலமுது சொரிந்துநறுநெய்வார்த்து
தம்பியரையுண்ணவென்று தடவினார்முதுகுதனை
அப்போதமுத்தமனார் அவர்கள்முகம்நோக்கி
உன்வீட்டிலேயமுது உண்பதேமாமாகில்
உன்வயிற்றில்வந்து பிறப்பேன்காண்மாதாவே
யென்றபொழுதில் இயல்பானமாதாவும்
நின்றுபரதவித்து நெடுமூச்சுத்தானெறிந்து
அகமகிழச்சந்ததிதான் அறியாதபாவியென்று
காதல்மிகவில்லாத கன்னியிருந்தென்னவென்று
போதமயங்கியே போய்ச்சேர்ந்தாள்பஞ்சணையில்
மாதாமயங்கியபின் மைந்தரெழுந்திருந்து
உண்ணவேவாருமென உவந்துநிற்க அப்போது
தண்ணீர்குடித்தவுடன் தாகந்தெளிந்தாற்போல்
கைதொழுதுபாலனைக் கட்டியெடுத்தணைத்து
மைவிழியாள்தானும் மடியிலெடுத்துவைத்து
வருக்கைப்பலாச்சுளையு மற்றுமுள்ளநற்கனியும்
சர்க்கரைநற்சீனி தாரணியிலுள்ளதெல்லாம்
திரட்டிபால்தன்னையுஞ் சிறக்கவேதான்படைக்கப்
பாங்குடனேயுத்தமனார் பரிந்தமுதுசெய்யலுற்றார்
கைகழுவிச்சுத்திபண்ணிக் கனகமணியாசனத்தில்
அடைக்காயும்வெற்றிலையும் ஆனபரிமளங்கள்
சிறப்பாகத்தான்கொடுத்து சிந்தைமகிழ்ந்தங்குரைப்பார்
இயமலோகக்கணக்கு எழுதவேபோவாய்நீ
அற்பமாங்குற்றங்கள் அக்கணக்கிலெழுதாமல்
சொற்பமாங்குற்றமதைத் தொகைபடுத்தாமற்கணக்கை
எழுதிமுடித்திடுவாய் என்மகனேயென்றுசொல்ல
வகுற்றஞ்சொன்னீர் என்னுடையமாதாவே
தலைவாழையிலையறுத்துத் தானெனக்குப்போட்டதுவுங்
குற்றமென்றுபட்டோலை கொண்டேனோமாதாவே
யென்றுசொல்லியேசி யிருக்கின்றஅந்நேரம்
அந்தமொழிகேட்டு அந்நேரம்பலகாரம்
மைந்தர்பெருமான் மாளிகையிலிட்டிருந்து
போகவிடைதாருமென்று பொருந்தவேதாமுரைத்தார்
வந்துதொழுத மகனைத்தான்பார்த்து
வாரியெடுத்து மார்போடேதானணைத்து


இந்திரருடனே யிந்திராணிமனமகிழ்ந்து
தருமராசனிடத்திற் றுமொருவார்த்தைசொல்வார்
புத்திரர்பின்வருவார் போமுன்பெனவுரைத்தார்
அந்தப்படிதருமராசனும்போகலுற்றான்
போனார்யமதருமர் பூவுலகிற்சேனையுடன்
அப்பால்நடக்கிற அதிசயத்தைக்கேளுங்கள்
மிருகண்டன்நற்கதையை மெய்யாகச்சொல்லுகிறேன்
வருந்திமிருகண்டன் மகனுமேவேணுமென்று
பாதாளந்தோன்றவெட்டிப் பதிவாய்மிகவளர்த்தி
வோமகுண்டமத்தியிலே யோந்தகம்பம்நாட்டியந்தக்
கம்பத்திலேறி காலிரலைத்தானூன்றி
வேதங்கள் அக்கினியு மேலேபடர்ந்தெரிய
ஈசனேபிள்ளையரு ளென்றேதவமிருந்தார்
தண்ணீரருந்தாமற் சருகுப்பொசியாமல்
இருந்தான்தவசு ஈராண்டோடெட்டுடனே
வருந்தித்தவசிருந்தான் மன்னுமிருகண்டன்
அந்தத்தவத்தருமை யாறுருந்தாமறிந்து
தவசிவடிவாகத் தானெழுந்தார்சங்கமரும்
அப்போதுஉமையவளு மப்படியேதானும்வந்தாள்
இருபேருந்தவசியா யேகினார்தவத்தருகே
மிருகண்டன்செய்தவத்தை மெய்யாகக்கண்டார்கள்
அப்போமிருகண்டன் அரனுரைத்தான்தொழுது

விருத்தம்.

அய்யனேபோற்றிபோற்றி யறம்வளர்த்தவனேபோற்றி
செய்யனேபோற்றிபோற்றி திருக்கயிலாசாபோற்றி
யையவேதவசியாகப் பார்தனிலுதித்தாய்போற்றி [ற்றி
யுய்யவேயடியேற்கன்பர் பொருமைந்தனருள்வாய்போ

நடை.

என்றமொழிகேட்டு இருவருமனமகிழ்ந்து
சிந்தையுடனே திருவாக்குத்தானுரைப்பார்
வாராய்மிருகண்டா மதலையைநாந்தருவோம்
சீராகவேவயசு தீர்க்காயுசாயிருந்தால்
கல்வியறிவில்லாமற் கசடனாய்த்தானிருப்பான்
அல்லதுகல்வியறிவு வுடையவனாயிருந்தால்
பதினாறுவயதினிற் பரிந்தேயிறந்திடுவான்
ஆனதினாலிந்த வகைதனிலேயாண்பிள்ளை



எந்தவகையா யிருக்கவேவேணுமென்றார்
அப்போமிருகண்டன் ஆராயுங்கல்வியனைத்
தவத்தினில்மிக்கோனைத் தந்தருள்வாய்பிள்ளையென்று
தெண்டனிட்டப்போது திருமதலைதானருளி
அம்மையுமையவளும் ஆனபரமேஸ்வரரும்
இடபமதிலேறி யேகினார்கயிலைதனில்
மிருகண்டனாரு மிக்கத்தவமுடித்து
நலம்பெறவேதானிருந்து நன்றாகவாழ்கையிலே
வந்துபிறந்தான் மகவாகிமார்க்கண்டன்
சாஸ்திரபுராணமெல்லாம் சதுராகத்தான்படித்து
வேதங்களோதி விளங்கினார்மார்க்கண்டன்
அப்பால்நடக்கு மதிசயத்தைக்கேளுமினி -
வில்வந்துளசி விருப்பமுடன்தானெடுத்து
மந்தாரைப்பிச்சி மருவற்றபூக்களுடன்
செண்பகமுமல்லிகையுஞ் சேர்ந்த அலரியுடன்
புஷ்பவகைகளெல்லாம் போதவேதானெடுத்து
கண்டியணிந்தைந்தெழுத்தைக் கருத்திலேதானமைத்து
சிவனைத்தொழுது சிவபூசைசெய்யலுற்றான்
அல்லும்பகலும் அரைநாழிகைபிரியாமல்
அந்தமுடன்சிவனை யன்பாகப்பூசைசெய்தான்
தோத்திரங்கள்தானும் துலங்கவேசொல்லலுற்றான்

விருத்தம்.

அண்டர்கட்கரியாபோற்றி யடியவர்க்கெளியாய்போற்றி
வண்டமிழ்ப்பாண்டிநாடு வாழமண்சுமந்தாய்போற்றி
கண்டவர்க்கினியமேனி காட்டியென்சென்னிமீதில்
முண்டகத்திருத்தாளனே மூத்தனேபோற்றி.
வேதநாயகனேபோற்றி விண்ணவர்தலைவாபோற்றி
மாதொருபாகாபோற்றி மறுசமயங்கள்மாயப்
பேதகஞ்செய்வாய்போற்றி பிஞ்ஞகாபோற்றியான்
பாதகமனைத்துந்தீர்க்கும் பராபராபோற்றி.


நடை.

இப்படிதோத்திரங்கள் இயம்பிமிகப்பணிந்து
பழுதுகள்வாராமல் பரமனையேதொழுவார்
இந்தப்படியே யிருக்குந்தருவாயில்
ஆண்டுபதினாறு பாலகனாமவர்க்கு
அப்போதுயமதருமர் அருகில்நின்றதுஅவரை

மார்க்கண்டமாமுனிக்கு வயதுபதினாறுச்சு
மார்க்கண்டன் றன்னை வரவழையுமென் றுரைக்க
அந்தமொழிகேட்டு ஆனைபெருந் தூதுவர்கள்
சென்றவனைத்தேடிச் சீக்கிரத்தில் வந்தார்கள்
அப்போதுமார்க்கண்டன் ஆனைபெருங்கோயில்நிற்க
நின்றமார்க்கண்டனையும் நீர்வாருமென் றுரைத்தார்
அப்போது தூதரைத்தான் அன்பாகத்தான்பார்த்து
நீங்களும்யாரென்று யெடுத்துரைத்தாரந்நேரம்
இயமதருமராசன் இயல்தூதர் நாங்களெல்லாம்
எங்களரசனும்மை யினிமையாய்த்தானழைத்தார்
உங்கள்வயசு மொருபதினாறுச்சுதென்று
வந்தோமுமையழைக்க வாருமென் றுதானுரைக்க
மார்க்கண்டனும் மனம்நடுங்காதேயுரைப்பார்
மலர்கொன்றைசூடுகின்ற சங்கரனைத்தானினைந்து
வந்ததொருதூதுவரே வார்த்தையொன்றுகேளுங்கள்
அந்தமுடனுமை யழைத்துவரச்சொன்னவனும்
முந்தியிருந்தவனோ முறைசெய்யவந்தவனோ
எந்தயியமனெனையழைக்கச்சொன்னவன்காண்
என்றபொழுதில் யெமதூதரேங்கினின்றே
இவரையுந்தாம்பிடிக்க இயாதென்றோடிவந்து
எமதருமராசன்பா லிசைக்கிறார் தூதுவர்கள்
மார்க்கண்டன்றன்னை வரவழைக்கச்சொன்னீரே
அவன்சொன்னவார்த்தை யடியேனுரைக்கிறோம்
முந்தியிருந்தவனோ முறைசெய்யவந்தவனோ
உங்களியமன் ஒளிக்கோடிப்போவான்காண்
வந்தப்படியே வழிபாதகமென்றான்
உடனேபயந்து ஓடிவந்தோமென்றனர்
அந்தமொழிகேட்டு அப்போது யமதருமன்
கோபித்துக்கண்சிவந்து கூற்றுவனுமந்நேரம்

விருத்தம்

அரியமையனைத் தெரியாக அரனைநோக்கித் தவம்பண் ணிப், பிரியமுடனே மார்க்கண்டன் பெற்றபிள்ளை யுயிர் [illegible] கொடுத்தான் குலத்துடன் சோரா, [illegible] வெற்றிநெல்கத் பாரம், விரியுங்கடல் சூழுலகமெல்லாம் [illegible] தே[illegible].



தெரியுங்கடற்போற் கோபமூண்டு சேனையெல்லாம்
புடைசூழக், கரியமலைபோல் செம்மலைபோல் கடுகநடந்
தான் வழியின்மேற், பெரியகடாவின் மீதேறிப் பிறை
போல்வளர்ந்த வயிறுகளும், எரியும் விளக்கின் சுடர்
போல் இரண்டுவிழியும் பொறிசிதற.

வசனம்.

அகோதெப்படியென்றால் மார்க்கண்டனுக்கு வயசுபதி
னாறுனவுடனே தூதர்களையனுப்பிக் கூட்டிவரச்சொல்ல
மார்க்கண்டனவன் சுவாமி கைலையங்கிரிவாசர் கிருபை
யைத் தியானித்துக்கொண்டுவந்து தூதரை நிராகரித்து
எமதர்மராஜனையுஞ் சட்டைபண்ணமற்சொன்ன செய்தி
யைத் தூதரானவர் எமதருமராசாவினிடத்திற்போயறி
விக்க எமதருமராசன் மிகுந்தகோபங்கொண்டு கண்க
ளிரண்டும் நெருப்புப்பொறிபறக்கத்தக்கதாக அண்டங்
கள் மலைகளெல்லாம் நடுநடுங்கத்தக்க தேவர்களெல்லாம்
வெருண்டோடத்தக்கதாக வயிரமுடிதரித்து புசங்க
ளிரண்டிலும் ஆயிரம்பேர்கள் தூக்கப்படாநின்ற உடை
யாளுஞ் சுரிகையுங்கட்டி ஆயுதவரிசைகளிற் சில ஆயுத
மும் இடுப்புகளில் வரைந்துகட்டிப் பாசக்கயிறுந்தண்
டாயுதமெடுத்துகருங்கடாவின்பேரிலேறிக்கொண்டுவெற்
றிச்சங்கூதிவீரமுரசறைந்து இருபுரமுஞ்சேனைதளங்கள்
சூழ்ந்துவர ஆயிரங்காலாள் ஆயுதபாணிகளுடனேவர
வும்ஒவ்வொருகொம்பு இரண்டுநாழிகைப்பரப்புநீளம்வளர்
ந்தயிருக்கப்படாநின்றகருங்கடாவானதுஇரண்டாயிரம்
வரவும் மீசைகள் படபடவென்று துடிக்கத்தக்கதாகவும்
அண்டபுவனங்களெல்லாம் அதிரத்தக்கதாக வலது
துடைதட்டி மார்க்கண்டனைத் தேடப்புறப்பட்டான்.

நடை.

வாரார்எமதர்மர் மார்க்கண்டனைத்தேடி
இயமதர்மன் அங்குவரும் இரைச்சல்மிகக்கேட்டு
மார்க்கண்டன்தானு மனதுமிகநடுங்கி
என்செய்வோமென்று ஈஸ்வரரைத்தானினைத்து
தஞ்சமென்றுசொல்லிச் சரணம்பணியலுற்றான்

விருத்தம்.

[illegible] காலனைமுன் கண்ணீர்பெருக்கத் தும்பி, அண்டர்பெருமான் [illegible] நங்க, ஞண்டானலும் பொறுத்தருள் [illegible] னுயிரைக், கொண்டேயின்றுபோகாமற் கோவேகாத்துக் கொள்வாயே.

என்றேயிரங்கி மார்க்கண்டன் இறைவன்பாதமலர் போற்றி, நின்றேதொழுது கும்பிட்டு நெடுமூச்செறிந்து நின்றவனும், தன்றேயுனதுபத்தியினி நமனுமுனைப்பற் றிடல்யானுஞ், சென்றேதொலைப்போம் மார்க்கண்டா தெரிவாயென்றேசொல்லு.

அஞ்சாதுனை நாங்காத்திடுவோ மானைமுகன் தன்றனைச், அஞ்சாதே நீ யவனுடனே சொல்லாதொன்றும் பேசாதே,மஞ்சார்பொழில்சூழுலகறிய மதியாதுன்மேல் வருவானே, தஞ்சார் கூர்வாள்மழுவாலே நமனைக் கொல்வோமெனச்சொல்லே.

கோலஞ்செய்து மலர்தூவிக் குறித்துன் பாதம் வணங்கிடுவேன், ஆலமுண்டகண்டனே அடியேன் னெஞ்சங் கலங்காமல், குலபாசத்தனுடனே சுற்றி நின்று என்னுயிரைக், காலன்கொண்டுபோகாமல் காத் துக்கொள்ளாய் கொள்வாயே.

அத்தனே போற்றிபோற்றி அடியவர்க்கெளியாய் போற்றி, பித்தனே போற்றி போற்றி பிறைதரித்தாடி போற்றி, நித்தனே போற்றிபோற்றி நிருமலா போற்றி போற்றி, யுற்றதோர் கூற்றன்றத்தா லுதைத்திடல் கொல்லுவாயே.

ஆதிப்பொருளாயிலகடங்க [illegible] ருக்கும், நீதிப்பாறுய் நிற்றனையு நினையுமடியார்க் கெளியோனுய், சோதிமயமாய்ச் [illegible] தோன்றுஞ்சிவனே மாமறலி, யோதிப்பாச மெறியவந் தான் முழுதும் நானுன்னடைக்கலமே.

வசனம்.

இப்படி மார்க்கண்டன் தோத்திரம்பண்ணுவதைக் கேட்டு எமதருமராசன் சொல்லுகிறுன்.



விருத்தம்.

வாடாகெடுவாய் மார்க்கண்டா மறந்தாலும் விடு வேனே, ஓடாகரத்தாரென்றுசெய்வா ருன்னைப்பிடித்துக் கொடுபோழுது, சூடாமணிசேர்வழியிரண்டுஞ் சொருகச் சூலத்தாற் கூடாஉயிரைப் பிடித்தேநான் கொண்டே போவேன் கண்டாயே.

வசனம்.

என்னடா மார்க்கண்டா என்னுடைய மனுஷன் வந்து உன்னையழைத்தால் அதற்குவாராமலிருந்தது மேலானவார்த்தை சொன்னுயல்லவா உன்னைவிடத்தக்க இல்லை கர்த்தாவானவர் உன்னைக்கொண்டோடும்போது தடுக்கமாட்டாரென்று வெகுசாய்த் தருமராசன் மார்க் கண்டனைப் பயப்படுத்துகிறுன் எ-து.

ஈசன்றன்னு லென்செயலா மிந்தப்பதத்தை யினிய வரால், வாசஞ்செய்து மலரிட்டு வணங்கினலு மாற்றரி து, மோசம்போகாதுன்றனக்கு முடிந்தநாளும் வந்தது காண், பாசங்கொண்டே யுன்னுயிரைப் பற்றிமிகவும் பறிப்பேனே.

ஈரெட்டொழிய வயசுனக்கு ஏற்றமுண்டோ என்னு டனே, மார்பைத்தட்டி எதிராடி வலிமைசொன்னுய் மார்க்கண்டா, பாரிப்போதே நானுன்னைப் பரமேஸ்வர னும் பார்த்திருக்க, கூரிட்டொளிர்வேல் தன்னலே கொண்டேபோவேன் கண்டாயே.

வசனம்.

அகோதெப்படியென்றுல் எமதர்ம மகாராஜனை வன் மார்க்கண்டனைப்பார்த்து அடா மார்க்கண்டா நீ எத்தனை தவத்தோடுங்கூடிப் பூசைசெய்தாலும் உனக்குப் பதினறு வயசுக்குமேல் இருப்பில்லையே கர்த்தர்தான் என்னசெய்வார் அவர் பார்த்திருக்கக் கொண்டுபோகிறே னென்று கருங்கடாவின்பேரில் ஏறியிருந்த எமதரும ராசன்கிழிறங்கி இன்றைய தினம் உன்னுயிரைக்கொண்டு போகிறேனென்று எமதருமராசன் கோபத்துடன்சொல் லப்போகிறுன். எ-து.

விருத்தம்.

யடியேன்தொழு நம்பரனே யபயம் பரமேஸ்வரரே யபயம், அடிசேரிடையாள் கணவா வபயந் தாயதெல்லைப் பதியாயபயம், கடிசேர்சூலக் கர்த்தாவபயம் கருணாலயனே யபயமபயம், கொடிதாகிய கூற்றுவனைக்கொன்று கொடுப்பா யெல்லாவாழுமென்க.

(வசனம்) இப்படி அபயமிட்டுவருந்தின மார்க்கண்டனைப்பார்த்து சுவாமியருளுகிறார்.

விருத்தம்.

வந்துபயந்தே யபயமிட்ட மார்க்கண்டா நீயஞ்சாதே, மைந்துகரத்தன் றன்னுணை யந்தநமனை யணுகவொட்டோஞ், சிந்தைமகிழ்ந்தே யிருவென்று திருவெண்ணீறு காப்பணிந்து, மைந்தன்றன்னைத் தன்பிறகேவாவென்றழைத்து வைத்தனரே.

(வசனம்) இப்படி கைலாசபதியானவர் மார்க்கண்டனைத் தன்கிட்ட வைத்ததைப்பார்த்து எமதருமராசன் சொல்லுகிறான்.

விருத்தம்.

கூசக்கடாவோ வல்லவென்று கொடிய கோபத்துடனியமன் ஈசர்க்கெதிரே தழலெழவே யெரியுஞ் செக்கர்க்குஞ்சியுடன், பாசக்கயற்று லவன்றன்னைப் பற்றிப் பிடிப்போமென்றெண்ணிப், பேசிக்கொண்டு தான்வந்து பெரிய மலைப்போல் நின்றனனே.

நடை.

நின்றானியமன் நேசமுள்ளபாசமதை
வீசியெறிந்தான்காண் விமலமார்க்கண்டன்மேல்
அப்போதுமார்க்கண்டன் அரனையேகட்டலுற்றான்
வீசினபாசமது விரைந்துசிவன்மார்க்கண்டனையும்
சிக்கெனவேதானிறுக்கி சேர்த்துமேதானிழுத்தான்.

விருத்தம்.

வட்டச்சடையார் திருமுதுகை வலுவாய் மார்க்கண்டன்றன்னை, கட்டிக்கொண்டான் தாமிருக்கக் கண்ணீர்நின்று மிகத்ததும்பச், சிட்டர்க்குரிய பிராணருஞ் சிறுவன்றனுமகப்படவே, துட்டர்க்காலன் பாசத்தைச் சுழற்றியிழுக்கலுற்றானே.



வசனம்.

அகோதெப்படியெனில் எமதருமராசனுக்குக்கோபமுண்டாகி மார்க்கண்டன்பேரிற் பாசத்தைவீசிட மார்க்கண்டனானவன் சுவாமியைத்தாவி சேர்த்துக்கட்டிக்கொள்ள அப்பாசம் சுவாமியையும்மார்க்கண்டனையுஞ் சேர்த்தது. அதைக்கண்டு மார்க்கண்டனானவன் றன்னைப் பாசமிழுக்கிறதுந்தவிர நம்முடைய நிமித்தியம் சுவாமியையும் பாசக்கயிறு கட்டிழுக்கும்படியாச்சுதே யென்று கண்ணீரானது தாரைதாரையாக வோடுகிறது. சுவாமிக்குத்தெரிந்து கோபமுண்டாகி எமதர்மராசனை யாக்கினைசெய்யப்போகிறார்.

விருத்தம்.

வாழுமுலகிலருள்பெற்ற மார்க்கண்டனைத்தான் கார்த்திடவே, யேழையாக வெழுந்திருந்து இடதுகாலை மிகநீட்டி, வீழவுதைத்தார் நிலம்பார்க்க விண்ணுமண்ணுந் தானதிர, ஆழியுடைந்தாற்போலியமன் அலறிவீழ்ந்தானவனியிலே.

நடை.

அப்பால்நடக்கும் அதிசயத்தைசொல்லுகிறேன்
பாதத்தாலேயுதைக்கப் பாதாளத்தேவிழுந்து
இறந்தானேயேமன் ஏற்றதொரூஈஸ்வரரும்
மார்க்கண்டா நீயு மயங்காதேயென்றுரைத்து
என்றும்பதினாறு மிருக்கவரங்கொடுத்து
ஒன்றுக்குமஞ்சாதே யுன்னைநாங்காத்திடுவோம்
என்றுசிவனா ரிவ்வசனஞ்சொல்லிடவே [ருந்தான்
மார்க்கண்டன்மனதுக்கும் மனமகிழ்ச்சியுடன்வாழ்ந்தி
அன்றுமுதலுலகிலுள்ள ஆருயிர்கள் இறவாமல்
இருந்ததினாலென்னசெய்வாள் ஏற்றதொருபூமாது.
கன்றிமுகம்வாடி கண்ணீட்டுநீர்சொரிந்து
சாவார்களில்லாமற் றரைப்பாரமாச்சுதினிப்
பூமிபெருங்காத்திருக்கப் புனிதாருளவேணுமென்று
பைந்தொடியாள்பூமாது பாரஞ்சுமத்தலுற்று
இந்திரனார்தம்மிடத்திற் போவோமெனநினைந்து
சித்திரபுத்திரனைச் சென்றுகண்டுசொல்வோமென்று
பூமாதுமங்கே புனிதமாயோடிவந்தாள்
வந்தனின்று இந்திரனார் வாய்ந்ததிருமாளிகையில்

முறையிட்டுச்சொல்லுகிறாள் முடிந்தான்காண்மறலியுமே
என்னாற்சுமக்கக் கூடுதில்லையென்றுரைத்தாள்
அப்போதுசித்திரபுத்திரர் ஆதரவாய்வந்துநின்று
நாராயணரிடத்தில் நண்ணியேசொல்லுமெனை
நின்றுசலித்து நெடுமூச்சுதானெறிந்து
ஆறுமுகமாது அலறியேசென்றுகண்டாள்

விருத்தம்.

பாலன்செய்தநற் பாக்கியத்தாற் பரமேஸ்வரனார் பாதத்தாற், காலன்பட்டு விழுந்திருந்தான் அதனாலுயிர்கள் காசினியிற், சாலமிருந்துசாவன்றித் தரணியிற்பாரமாச்சுதென்று, ஞாலமடந்தைவருத்தமுற்று நாராயணனை போற்றினளே.

நடை.

அப்போதுமாயவரும் ஆனதொருபூமாது
உன்னுடையபார மொழிந்தருள்வேன்தான்தானும்
போமென்றுசொல்லி யனுப்பினார்பூமாதை
அப்போதுதன்கணத்தை யழைத்தேயருள்புரிவார்
சம்புமேகாலத்திற்கு முனிருக்கும்உத்தமரை
இங்கேயழைத்தோடி வாருமென்றாரங்கே
கணங்களோடியே கணக்கரிடம்வந்துகண்டு
நாராயணரும்மை நன்றாயழைக்கலுற்றார்
என்றமொழிகேட்டவுடன் ஏற்றதொருபுத்திரரும்
சிந்தைமகிழ்ந்து சீக்கிரமாய்த்தானெழுந்து
நாடாளுமிந்திரற்கும் நாகமடந்தையர்க்கும்
கூடவேதெண்டனிட்டு கும்பிட்டெழுந்திருந்து
இனிதானனுப்புமென்று இணையடியைக்கைதொழுதே
நல்லதென்றுஇந்திரரும் நாயகியுமகிழ்ந்து
போய்வாருமென்று புகழ்ந்துவிடைகொடுத்தார்
சேனைகள் சூழ்ந்துவரச் செம்பொன்னின்தேரேறி
சித்திரபுத்திரனார் சிவன்கயிலைபோய்ச்சேர்ந்தார்
முப்பத்துமுக்கோடி தேவர்களும்வந்துகண்டார்
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும்வந்துகண்டார்
[illegible] ானவரும்வானவரும்
வந்துமுனிதேவரெல்லாம் வ[illegible]றைப்போது
சித்திரபுத்திரருஞ் சிவனாரை வணங்கி
அருச்சனைகள்செய்து அரன்பாதம்போய்ப்பணிந்தார்
வந்துபணிந்த மகனாரைத்தானெடுத்து



தன்மையுந்தன்மையும் நடுவெழுதவந்திரோ
என்றாஞர்களிகூற ஏற்றசித்திரபுத்திரரும்
பத்தியுடன்பட்டோலை வாசித்தார்பாங்காக
அப்போதுவிஷ்ணுவும் அகமகிழ்ந்தேயடிவணங்கி
சிவன்கயிலைசென்று செப்புகிறார்நல்வசனம்
எமதருமராசன் பிறந்ததினாற்பூமாது
சாவன்றிமிகுந்தவுயிர் தனைசுமக்கமாட்டாமல்
அல்லல்படுந்துயர மாற்றவேவேணுமென்று
சிவனாரிடத்திற் செப்பினாரப்போது
எல்லோருங்கூடி யிசைந்தார்சிவனிடத்தில்
சிவனாருமங்கே சித்தமகிழ்ந்திடவே
பிர்மாவுமன்னேரம் பெருமையாய்த்தானுரைப்பார்
வயதுபதினாறுச் சிருட்டித்தநாமவர்க்குக்
கணக்குப்படிசென்றான் காலத்தையறிந்துநமன்
தவத்தைமிகப்பாராமற் றானேதான்மாண்டான்காண்
புத்திக்குறைச்சலினாற் போய்மாண்டானந்தநமன்
பிள்ளைகள்செய்தகுற்றம் பொறுத்தருளவேணுமையா
ஆரிடத்திற்சொல்வோம் ஆமனே நீரல்லாமல்
வேறொருவருண்டோ விண்ணப்பங்கேட்கவென்றார்
இப்படியேவானவர்கள் எல்லோரும்முறையிடவே
சொல்லுகிறோம்கேளுங்கள் சுருக்கமாயொன்றுசொல்லி
அன்னதானஞ்செய்வோர் அருங்கோவில்கட்டினவர்
கன்னிகாதானஞ்செய்வோர் கன்றுக்குப்பால்விட்டோர்
சிவன்பாதம்சென்றவர்கள் சிவபூசைசெய்திடுவோர்
அன்னைபிதாவை யனுதினமுந்தான்தொழுவோர்
கோவிலுக்குநித்தம்போய்க் கும்பிட்டுவருவோர்கள்
பார்வதிபூசை பத்தியாய்ச்செய்வோர்கள்
வைகுண்டநாதருக்கு வழியடிமைசெய்தவர்கள்
நன்மைசெய்தவர்மேல் நாடாதேயென்றுசொல்லி
இவ்வளவுபேரும் இன்பமுடனென்னிடத்தில்
கொண்டுவரவேணுமென்று கூறியேபின்புசொல்வார்
எமனையெழுப்பி யின்பமுடன்மகிழ்ந்து
கூப்பிடுங்களென்றுசொல்லி கோமான்விடைகொடுக்க
அருளளிப்பாயென்றுசொல்லி அந்தகனைதானெழுப்ப
தண்டாயுதத்தோடே யெழுந்தானியமனுந்தான்
வாய்புதைத்துதெண்டனிட்டு வணங்குகிறான்தானியமன்

அப்போதரனார் அகமகிழ்ந்துபார்த்தவனை
நன்மைகள்செய்தவர்மேல் நாடாதேயென்றுசொல்லி
ஆயுதங்களெல்லாம் அன்பாகத்தான்கொடுத்து
தன்மக்கணக்கெழுதித் தான்வந்தவுத்தமரை
நன்மைதுன்மையுள்ளபடி நமனருகேநானிருந்து
வாக்குடனேசொல்லுமென்று மகிழ்ந்துமேதானுரைத்
இருபேருமொன்றாய் எல்லோரையுமனுப்பி [தார்
எமலோகபட்டணத்தைச் சேருகிறாரிருபேரும்
பட்டைகள்மிகநெருங்கப் பாரக்கடாவேறி
வெற்றிக்குடைபிடிக்க வெண்சாமரைபோடக்
கணக்கரும்நல்ல கற்பகத்தேரேறி
இயமதர்மன்கூட இசைந்துவந்தாருத்தமனார்
எட்டுத்திசையு மெங்குமேதான்முழங்க
திக்குதிசைகளெல்லாஞ் சிறப்பானபந்தலிலே
கவிவாணர்பாடக் கட்டியர்களாடிவர
நாடகசாலைப்பெண்கள் நாட்டியங்களாடிவர
பதினெட்டுவாத்தியங்கள் பண்பாகத்தான்முழங்க
வாசங்கள்தான்வீசி வான்கவரிதான்வீச
பொன்னுலகத்தாரும் போதவேசூழ்ந்துவரத்
தேவாதிகளெல்லாஞ் சிறப்புடனேதான்வரவே
இத்தப்படியே இருபேரும்வந்திருந்தார்
புட்பமாரிபொழிந்து பொன்னுலகோர்வாழ்த்திட
வானம்புவியு மற்றுலகிலுள்ளதெல்லாம்
எமதருமன்மாளிகையில் இருக்கிறார்நற்கணக்கர்
நான்குவாசல்வழிக்கு நடுவேயோர்மாளிகையில்
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகத்தானிருந்து
பட்டோலைதன்னைப் பதிவாகவாசித்தார்
திருந்தவேநன்மைசெய்தோர் சிந்தவழிவருவதற்கு
வடக்குவாசல்வழியை வரிசையாய்செய்யலுற்றார்
மாணிக்கஞ்சேர்ந்த வயிரக்கால்தானாட்டி
இடம்பெறவேபந்தல் எழிற்காவணம்போட்டு
மாடங்கள்கட்டி வயிரவிளக்கேற்றி
கூடங்கள்கட்டிக் குளிர்ந்தமலர்க்காவுடனே
நல்லதண்ணீர்ப்பந்தல்களை நன்றாகவுண்டுபண்ணி
புண்ணியஞ்செய்வதற்குப் பொருத்தமிகவுண்டாகி
அதுக்கானபேரை யவ்வழிக்குகாவல்வைத்து



இதுதான்கயிலைவழி யென்றுமேபுண்ணியற்கு
சொல்லும்படிக்குச் சுருதியுள்ளகாவலரைத்
திட்டங்கள்செய்து சிறப்புடனேவைத்தார்காண்
கீழ்வாசல்தன்னருகே கேசவனைத்தானோக்கி
ஞானநிஷ்டைசெய்தவர்கள் நல்லவழிவருவதற்கு
சிவஞானபத்தர் தெரிசிக்கவருவதற்கு
பராசத்திபத்தர்கள் பண்பாயிருப்பதற்கு
மண்டபமுஞ்சூளிகையும் வகையுடனேதான்வைத்து
மாளிகைகூடல் வகுப்பாகச்செய்யலுற்றார்
வெள்ளிக்கதவுமிட்டு வேதியரைக்காவல்வைத்து
வைகுண்டநாதருக்கு வழியடிமைசெய்தவர்கள்
வருகிறவழியென்று வைத்தாரேயதுவரை
வேறுமொருவாசல் விரைவாகவருக்கவென்று
வந்துதெற்குவாசல் வழிதோறுமுட்பரப்பி
நெருப்புப்பாறந்தெங்கும் நின்றெரியவுண்டுபண்ணி
சுண்ணாம்புஞ்சேரும் சுடுமணலுமுண்டாக்கி
போதெரியவெட்டிப் பெருங்கழுக்கள்தானாட்டி
கூரைப்பறங்காவும் குளிர்ந்தநிழலில்லாமல்
நாயும்நரியும் பெருங்கடுவாயோநாயும்
கட்டெறும்புகொட்டுந்தேள் கடியதொருபாம்புடனே
அட்டைப்புழுக்குழியும் அரணைபுழுக்குழியும்
நரகக்குழியும் நன்றாகஉண்டாக்கி
அரியதொருபாதகரை யடித்திழுத்துவரச்சொன்னார்
கல்லுங்கரடுங் கடியமணல்பரப்பி
பாதகரைத்தெண்டிக்கப் பாவிகளைக்காவல்வைத்தார்
மேற்கேயொருவாசல் விதவிதமாய்ச்செய்யும்வகை
பார்க்கப்பயங்காட்டும் படர்பூதப்பிசாசுகளும்
கருநாயுஞ்செந்நாயுங் கலந்துகட்டிநிறுத்திவைத்தார்
குரைக்குந்தலைப்பேய்கள் கூட்டமாய்நிறுத்திவைத்தார்
செக்குலக்கைகலந்திருகைச் சிறப்பாகவுண்டுபண்ணி
செப்புத்தூணாட்டியதிற் றீயெரிநிறுத்திவைத்தார்
இரும்பாலேதூண்டில்களை யெங்குமேதானாட்டி
நிகரில்லாத்தரைதனிலே நெருப்பெரியச்செம்புருக்கி
பஞ்சமாபாதகர்க்குப் பரப்பியேசெய்துவைத்தார்
கிங்கிலியரங்கே கெட்டியாய்க்காவல்வைத்தார்
இப்படியேவாசல்களெல்லாம்வகுத்தபின்பு

செப்பமுடனிருபேருஞ் சிறப்பாகத்தானிருந்தார்
இங்கிதங்கள்தான்பேசி யிருபேருந்தான்மகிழ்ந்து
வள்ளுவனுக்காள்விட்டு வரவழைத்தாரந்நேரம்
வள்ளுவனும்வந்து வலமாகவந்துநின்று
அடியேனையிங்கே யழைத்ததேதுக்கெனவே
படியேழுஞ்சென்று பறையடிக்க நீகேளு
சிவசெந்துக்களெல்லாம் சிறப்பாகத்தானறிய
காயிருக்கப்பழுதிரும் படியடியேமுரசை
அடித்துவாவென்றுசொல்லி யனுப்பினாரன்னேரம்
அப்படியேவள்ளுவனும் யானைதனைக்கொண்டுவந்து
ஆனைக்குள்வரிசைகளை யன்பாயலங்கரித்து
ஆபரணமுள்ளதெல்லாம் அடைவாகவேபூட்டி
தம்பட்டம்வைத்துத் தனிக்கால்வழியேதான்
ஆனைதனிலேறியே புறப்பட்டானப்போது
துர்க்கைதிருக்கோயில் தூரவேதான்தெரிய
துய்யகரிவிட்டிறங்கித் துர்க்கையைத்தான்பணிந்தான்
மதுவுதனைக்கொடுத்தாள் மாகாளியப்போது
அரக்குமதுவு மளவின்றித்தான்குடித்தான்
பதினாலுலகரியப் பறையறைந்துசொல்லுகிறான்
ஆண்சாதிபெண்பால் ஆதியேதான்பிறந்த
நாலுவகைச்சாதிகளும் நன்றாகத்தான்தெரிந்து
பழுதிரக்காயிருக்க வென்றுசொல்லபண்புடனே
வெய்யபெருந்தோளன் வீதியிலேவந்துநின்று
முறையிட்டுத்தான்பறையு முழங்கினானப்போது
இந்தமொழிகேட்டுடனே யெல்லாருந்தான்மகிழ்ந்து
அந்நேரஞ்சிறுபிள்ளைக ளனேகம்பேர்தான்கூடி
இரைச்சலிட்டுக்கொண்டு எதிராகநின்றதுவே
அப்போதுவள்ளுவனு மானைதனைநோக்கி
அடித்தானேபிள்ளைகள்மே லானதொருகோபத்தை
அப்போதுபிள்ளைகளுக் கதிககோபமுண்டாகி
கையில்மணலெடுத்துக் காற்றிலேதூற்றிவிட்டார்
கண்ணில்மணல்விழுந்து கசக்கியேவள்ளுவனும்
கோபம்பெரிதாகிக் குணக்கேடாசொல்லிவிட்டான்
குடித்தவெறியாற் குணந்தப்பிசொல்லிவிட்டான்
பூவுதிரப்பிஞ்சுதிரப் பொருக்கெனவேபொட்டுதிரக்
காயும்பழமும் கலந்துதிரவேபறையென்று




தினம்பிறப்பாராயிரம்பேர் தினமிறப்பாராயிரம்பேர்
கனமிகுதியேருமற் றரணிப்பாரங்குறைய
என்றதுமேகுடித்த வெறியாலிரங்காது
அடியடியென்று அடித்தான்பெருமுரசை
அப்படியேதானடித்து அவ்விடத்தைவிட்டேகி
சித்திரபுத்திரர்பாற் சென்றேயடிபணிந்தான்
அந்தக்கொடும்பறை கேட்டவிடத்திலுள்ளவர்கள்
இந்தவகையாதென்றே யெழுந்துமேதான்பிறகே
எல்லோருமொன்றா யெமலோகம்போய்ப்புகுந்தார்
நல்லதர்மராசனையும் நற்கணக்குநாதரையும்
வந்துமிகப்பணிந்து வள்ளுவனங்குவந்து
மன்னவரே நீங்கள்சொன்ன மாற்றத்தைவிட்டுவிட்டு
கருங்குழியிற்பூமுதலுங் கருத்தரித்தபின்முதலும்
வடுப்பிஞ்சுகாயுதிர வென்றுரைத்தேவள்ளுவனும்
ஏற்றதொருபறையடித்தா னெல்லோருந்தான்கேட்க
என்றுதொழுதுசொன்னா ரிருபேருந்தான்பார்த்து
அந்நேரமவர்களுக் கதிககோபமுண்டாகி
சொன்னமொழியொன்றிருக்கச் சொற்றவறியடித்தவனை
கோபம்பெரிதாகிக் கூட்டிவரச்சொன்னார்கள்
வந்துமேவள்ளுவனு மலரடியைப்போற்றிசெய்ய
வாராய்நீவள்ளுவனே வாய்மதங்களேதுரைத்தாய்
அப்போதுவள்ளுவனு மடிபணிந்தங்கேதுரைப்பான்
இப்போதுவந்தகுறை யென்னாலேவந்ததல்ல
அரக்குமதுமாகாளி யம்மைமிகவார்த்தாள்
அரக்குவெறியாமால் முழங்கினேனம்முரசை
பிள்ளைகள்தூர்ச்சனர் பிழைகேடாய்ச்சொல்லிவிட்டேன்
இந்தபிழையைப் பொறுத்தருளவேணுமையா
குடித்தவெறியாற் குணந்தப்பிசொல்லிவிட்டேன் [ல
உள்ளமொழிசொன்னதெல்லா முறையாமென்றுசொல்
மாய்கையதுசொன்ன வள்ளுவனைத்தான்பார்த்து
சாராயந்தான்குடித்தால் தவறுவந்துவிட்டதினால்
வள்ளுவனைசொல்ல வகையேதுமில்லையென்றார்

பிள்ளைகளாலே பிழைகேடுவந்ததென்றுஞ்
வள்ளுவன்தானென்செய்வான் மற்றபேரேதுசெய்வார்
வள்ளுவன்சொற்படியே மானிடவரெல்லாரும்
வாழ்வுபெறவேவாழ்ந்து மகிழ்ந்திருங்கள்புவிமீதில்
என்றேயெமனார் இன்பமாய்த்தானுரைத்தார்
பூலோகத்திலுள்ள புகழ்ந்தமனுவையெல்லாம்
அவரவரிடத்தில் எகினாப்போது
இருந்தாரிருவருந்தான் இரத்தின்மணிமண்டபத்தில்
மணிமுடியைதான்பூட்டி மெய்மையுடன்தானிருந்து
பட்டோலைகள்தன்னைப் படித்துமிகவாசிக்க
அப்போதுசெட்டிச்சி யம்மையொருசீமாட்டி
அமராவதிபெருமாள் அன்னையைபோற்காத்தளிப்பாள்
தர்மராஜன்தேவி தான்செய்தபுண்ணியங்கள்
அழியாபுத்தகத்தில் அகப்படவேயிப்போது
இயமனார்தன்னிடத்தி லியல்பாகவாசித்தார்
இந்தவிபரம் இனிமேல்விளம்புகிறேன்
இக்கதையைக்கேட்டவர்கள் சகலசம்பத்தும்பெறுவார்
நன்றிப்பெருங்கதையை நன்றோதுமப்படிப்பவர்கள்
பாடிபடித்திடவே பத்தியுடன்கேட்டவர்கள்
நாடியெழுதினவர் நல்லவிரதத்தையெடுத்தோர்
பலமாகப்பெருஞ்செல்வம்படைத்துமேவாழ்ந்திருப்பார்
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரூன்றி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழியவே

சித்திரபுத்திர நயினார் கதை

முற்றும்பெற்றது.



கடவுள் துணை.

# அமராவதி கதை.

செட்டியம்மையென்றே சீமாட்டிதன்கதையை
காரணத்தால்நான்பாடக் கணபதியேமுன்னருள்வாய்
தர்மராசாவின் தயவானதேவியென்பாள்
அமராவதியென்ற அழகான நற்பெயரால்
பூதலத்திற்செல்வம் பொருந்திமிகவுண்டாக்கி
அன்னைசுற்றத்துடனே யருள்பெறவேதான்வாழ்ந்து
முத்தொட்டில்கட்டி முடியவாழ்வுண்டாக்கித்
தருமங்கள்தானே தவராமல்செய்துவந்தாள்
பாவங்களொன்றுசற்றும் பக்கத்தில்கேட்டறியேன்
இந்தப்படியே யியல்புடனேதான்வாழ்ந்தாள்
நயினார்தனிநோன்பு நாவிலெடுத்தறியாள்
கணக்கரென்றசெய்தி கனவிலுங்கேட்டறியாள்
மூப்பாலுங்காச்சி முடியாமல்வாழுகின்றாள்
சிவஸ்தலம்விஷ்ணுதலம் தெரிசனங்கள்செய்தறியாள்
சித்திரபுத்திரர்நோன்பு சிந்தையிலேவைத்தறியாள்
இவள்செய்திதன்னை இயல்கணக்கர்தாமறிந்து
எமதர்மராஜனுட னின் மாய்தானுரைக்க
அவள்தரும்நற்கணக்கை யணுவளவுந்தப்பாமல்
கேட்டறியாமலிருந்தான் கிருபையுடனேயிருந்து
அவள்செய்தபுண்ணியங்க ளடைவாகச்சொல்லுகிறான்
பட்டணமெல்லாம் படைதட்டியாராய்ந்து
அன்னகொடிகட்டி யமுதுபடைத்திடுவாள்
அதிதிபரதேசியற்கும் ஆருமற்றார்தங்களுக்கும்
ஆராய்ந்துதேடி யமுதுமிகக்கொடுப்பாள்
அத்தாலங்கேட்டவற்கு அமுதமேதான்கொடுப்பாள்
மகேசுரபூசைமுதல் மனமகிழ்ந்துசெய்திடுவாள்
கோட்டைக்குத்தண்ணீர் குளிர்ச்சிமிகவுண்டாக்கிப்
பாணகம்நீர்மோர் பதிவாகச்செய்துவைத்தாள்
சித்திரைமாதத்திற் செறிப்புடனே நற்குடையும்
விசிறியுந்தான்கொடுத்து வெப்பங்கள்தணித்திடுவாள்

கன்னிகாதானங் கருதிமுடித்துவைப்பாள்
வேதியர்க்குள்ளதெல்லாம் விரும்பியேகொடுத்திடுவாள்
ஆடையில்லாபேர்களுக்கு ஆடைமிகக்கொடுத்திடுவாள்
சனிவாரமெண்ணெய் தப்பாமற்கொடுத்துவந்தாள்
நந்தவனமுண்டாக்கி நற்பூக்கள்தான்பறித்து
ஆலயங்கள்தன்னிலவை வாகச்சாத்துமென்றாள்
ஆரத்துக்குத்தாமுஞ் சுமைதாங்கிகட்டிவைத்தாள்
காதத்துக்குக்காதங் கற்கிணறுகட்டிவைத்தாள்
பிள்ளைபாற்றின்பண்டம் பெருக்கவேதான்கொடுப்பாள்
வெட்டுந்தலையைப் பொருள்கொடுத்துமீட்டிடுவாள்
வட்டியில்லாமற்கொடுத்து வாங்கிமிகவைத்திடுவாள்
வேந்தனுக்குஅஞ்சி விரும்பிவருவார்க்கு
தேருதலைசொல்லி யடைக்கலங்கள்தான்கொடுப்பாள்
கன்னங்கள்குத்திக் களவுசெய்யவருபவர்க்கு
அஞ்சாதேபோவென்று ஆதரவுசொல்லிடுவாள்
ஏழைபரதேசியற்கு இல்லிடமுங்கட்டிவைத்தாள்
இடிந்தமடமுதலாய் எடுத்துமேபுதுப்பித்துப்
பூப்பியர்கள்போட்டுப் புதுக்கனிகள்தான்கொடுப்பாள்
அறுதிபிணைத்தை யடிக்கிவைப்பாள்கண்டீரே
ஆயிரங்கோட்டையரிசி அன்றைக்கன்றுசொல்லிடுவாள்
அதற்காகக்காய்கறியு மப்படியேதான்கொடுப்பாள்
சம்பாரஞ்சொல்லுமவைகை தடையறவேதான்கொடுப்பாள்
இந்தப்படிதரும மெவ்வளவுந்தப்பாமல்
செய்துமேதானுஞ் சிறப்பாகத்தானிருக்க
விரதமுந்தோன்பும் விரும்பாதபாவியென்று
கணக்கருமங்கே கடுங்கோபமுண்டாகி
என்னதாஞ்செய்தாலு மேத்திழையாள்தன்னைவிடோம்
பூமிதனிலிருந்து பொருந்தவொட்டாமல்
அதற்கானபடிசெய்ய அழைப்பிக்கவேணுமென்று
கணக்கருக்குக்கைகூலி கட்டுவாருலகமதில்
இந்தவசனமதை யெவ்வளவுமறியாமல்
இருந்தஅமராவதியை யிங்கழைக்கவேணுமென்று
ஏவினார்தூதுவரை யின்னமொருவார்த்தைசொல்வார்
அவளுடையவாச லடையாளங்கேட்டீரோ
தென்னமரங்களுக்கு சோலைசூழ்ந்துநிற்கும்
கப்பல்படகுமுதல் கரையருகேவந்துநிற்கும்



தீவுகளிலுள்ளதுகள் சேகரமாய்வந்துநிற்கும்
பசுக்களொருகோடிநிற்கும் பைங்கொடியாள்வாசலிலே
அரதேசிபரதேசிக் கன்னம்வழங்கிடுவாள்
என்றுசொல்லிநற்கணக்கர் ஏவினார்தூதுவரை
அந்நேரந்தூதுவரை அதிககோபமுண்டாகி
இருப்புத்தடியுடனே யேற்றதோராயிரமும்
பாசக்கயிறும் பெருவலையுந்தானெடுத்து
வந்துவளைத்தார்கள் மங்கையாட்டிவாசலிலே
வாசலிலேவந்துநின்று வளமையெல்லாங்கண்டார்கள்
அதிதிபரதேசியற்கும் அன்னம்கொடுக்கிறதும்
கூனர்குருடர் குறைக்கால்முடவருக்கும்
ஆராய்ந்துபார்த்து அமுதுகொடுக்கிறதும்
தருமங்களெல்லாந் தயவுடனேசெய்கிறதும்
இத்தனையுங்கண்டு இயல்பானதூதுவர்கள்
அமராவதியாளை யழைத்துவரச்சொன்னார்கள்
இவளைநாமழைத்து போனோமேயாமாகில்
தருமங்களெல்லாந் தவிர்ந்துவிடுங்கண்டீரே
அன்னக்கொடிகளெல்லா மலைந்துவிடுங்கண்டீரே
என்றுசொல்லிதூதுவர்கள் ஏங்கிமனங்கலங்கி
கையில்தடியைக் கடக்கவேபோட்டுவிட்டு
நின்றுபெருமூச்சும் நெடுமூச்சுந்தானெறிந்தார்
அந்நேரமோடிவந்தாள் அமராவதியாளும்
கண்டாளே தூதுவரைக் கலங்கியிருக்கிறதை
அமராவதியாள் அவர்முகத்தைத்தான்பார்த்து
வாருங்கள்மக்களே மயங்கியிருப்பானேன்
இத்தனைநேரமட்டும் இளைப்பாயிருந்தீரே
அடியாள்தன்பேரில் அபராதமுண்டுகண்டீர்
என்றுசொல்லியிங்கிருந்து இனியமுதுகொள்ளுமென
அப்போதுதூதுவர்கள் அடுத்தமொழியுரைப்பார்
இந்நேரம்நாங்கள் இனியமுதுகொள்வதில்லை
என்றுசொல்லிதூதுவர்கள் இருந்துவிசாரமுற
வாருங்கள்மக்களே வருந்திமெலிவானேன்
கன்னமிடவந்தீரோ களவுசெய்யவந்தீரோ
தாயிக்குத்தாயாகித் தானிருக்கவுங்களுக்கு
உண்டிருக்கஅன்னமுதல் உருபடியுந்தான்தருவேன்
அஞ்சாமல்நீங்க ளன்னங்கள்தான்புசிக்க

வாருங்களென்று வருந்திமிகவழைக்க
இவ்விடத்திலதானமுது பொசித்தோமேயாமாகில்
எங்கள்தமிழர் எழுதுவார்பட்டோலை
ஆனதினால்நாங்க ளமுதுபொசிப்பதில்லை
இருந்தரசாளுமென்று ஏகினர் தூதுவர்கள்
வந்துவணங்கி மலரடியைத்தெண்டனிட்டுச்
சித்திரபுத்திரரே சிமானேகேளுமையா
செட்டியாவெங்களைத் திக்கழுவிற்போட்டதுவும்
செட்டிச்சியைநாங்கள் தின்றோமொருநாளும்
என்றுசொல்லியக்கணக்கர் இருகண்ணுந்தான்சிவந்து
உங்களையுன்னை உபசாரஞ்சொன்னோமோ
மற்றுமொருதூதுவரை வரவழைத்தேதுசொல்வார்
அமராவதியொருத்தி அனதர்மஞ்செய்துகொண்டு
என்னென்றுகொண்டா ளெந்தனை நினையாமல்
பூதலத்திற்செல்வம் புகழ்பெறவேதானிருந்து
தனிக்குடும்புசெய்துகொண்டு தரணியிலிருப்பவளை
இந்நேரமிங்கே யழைத்துவாவென்றுசொன்னர்
என்றுசொல்லிதூதுவரை வியல்பாகத்தானனுப்ப
அந்நேரந்தூதுவர்க்கு அதிககோபமுண்டாக
இருப்புதடியெடுத்தார் யெற்றதொருகிங்கிலியர்
வந்துவளைத்தார்கள் வாழ்வரசிவாசலிலே
நந்தவனம்வைத்து நறும்பூப்பறிக்கிறதும்
அன்னங்கொடுத்து ஆதரவுசொல்லுவதும்
சத்திரங்கள்வைத்து தயவாகநடக்கிறதும்
தருமங்களெல்லாந் தவறாமல்செய்கிறதும்
கண்டார்கள்கிங்கிலியர் கவலைமெத்தவுண்டாகி
கையிற்றடியைக் கடக்கவேவிட்டெறிந்து
தலையிலேகைவைத்து சலிப்பாயிருக்கையிலே
அந்நேரமங்குவந்தாள் அமராவதியாளும்
வாருங்கள்மக்களே வாடியிருப்பானேன்
அமுதுகொள்ளவாருமென் றழைத்தாளேயப்போது
பாணக்கம்வாங்கிப் பசியாறக்குடித்தார்கள்
இப்போதிவளை யழைத்தாமேபோனக்கால்
தருமங்களெல்லாந் தவறிவிடுமென்றுசொல்லி
ஏதுமுறையென்று ஏகினர்கிங்கிலியர்
சித்திரபுத்திரரே சிமானேகேளுமையா



எங்களையும்நீங்கள் என்னபழிசெய்தாலும்
செட்டிச்சியைக்கூட்டி வரமாட்டோமென்றுசொன்னார்
அந்நேரமக்கணக்க ரதிககோபமுண்டாகி
உங்களுக்குகைக்கூலி காட்டினளுதாரி
பாணக்கம்வாங்கிப் பதிவாய்குடித்தீர்கள்
இதற்கேயனுப்பிவைத்தே னென்றாரேயுத்தமனர்
அதையுங்கணக்கெழுதிக் கொண்டாரேயுத்தமனர்
சினந்துமிகவுரைத்துச் சீறியேயப்போது
மற்றுமொருதூதுவரை வரவழைத்தாரந்நேரம்
பெற்றதாயைக்கொன்ற பெரும்பாவிமொட்டையனைக்
கொண்டகணவனைக் கொன்றகொலைபிராமணியை
இவர்கள்தனையழைத்து யேவினர்நற்கணக்கர்
அரைநாழிகைப்பொழுதி லழைத்தோடிவாருமென்றார்
ஆயுதங்கள்தானெடுத்து அடைத்தாரிருவருமாய்
வந்துதலைப்பட்டார்கள் வாழ்வரசிவாசலிலே
மனையிலொருபுறத்தே மறைவாயிருந்தார்கள்
தானதருமங்கள் தயவாய்நடக்கிறதை
இத்தனையுங்கண்டு எடுத்துரைத்தான்மொட்டையனும்
இவளெத்தனைதரும மினிதாகச்செய்தாலும்
நயினருரைத்தபடி நான்விடுவதில்லையென்றான்
என்றுசொல்லிமொட்டையனு மிருகண்ணும்தான்சிற
அந்நேரமேதானும் அமராவதியாளும்
தீர்த்தமாடித் தெருவீதிவருகையிலே
பூனையாய்வந்து குறுக்கிட்டான்மொட்டையனும்
அப்போதுசெட்டிச்சி யனேகங்கவலையுற்று
துக்கமுண்டாகித் துடித்துதேவதைகண்ணும்
மயக்கம்பிறந்தது மதிமறந்து அந்நேரம்
ஏதோகொடுமை யினிக்கேட்கவேணுமென்று
பூனைகுறுக்கிடவும் போந்தகூறல்லவென்று
தருமங்கள்செய்வதிலே தப்பிதமுண்டாச்சோ
என்றுசொல்லியம்மை யேற்றதொருபாத்திரத்தில்
அமுதுகறிகளை யப்போதுதானெடுத்து
செயகண்டியடித்துத் தெருவெல்லாம்தான்திரிந்து
ஆராய்ந்துதேடி யமுதுகொடுத்திடவே
திட்டாட்டமாகச் செய்தாளேயந்நேரம்
ஒன்றுந்தவறாமல் உள்ளபடியேநடத்தி

வந்தாளாண்மனையில் வாழ்வரசிதானுமப்போ
இருக்கும்பதியில் யியல்பாகத்தானிருந்து
பேத்திமார்பூட்டிமார் பிரியமுடனேயிருந்து
பாலோதிம்நெய்யோடும் பதிவாயமுதருந்தி
சாந்தபுனுகு சவ்வாதுந்தானணிந்து
புஷ்பாதிகளெல்லாம் போதவேதான்சூடிச்
சந்தோஷமாகவே தானிருக்கும்வேளையிலே
கொல்லவந்தகூற்றுவனும் கோலப்பிராமணியும்
அவ்வேளைதான்பார்த்து அவள்நடையில்வந்தார்கள்
வாசற்படியில் வந்துநின்றுளந்நேரம்
கண்டமராவதியாளும் கர்மமோவென்றுசொல்லி
இருபேரும்நீங்கள் இனியமுதுகொள்ளுமென்றார்
சத்திரத்தில்வாருமென்று தான்விரும்பிச்சொன்னாளே
அப்போதுகூற்றுவனும் ஆனப்பிராமணியும்
இந்நேரம்நாங்கள் அமுதுகொள்வதில்லையெனப்
பலகாரம்நான்தருவேன் பதிலாகக்கொள்ளுமென்றார்
பலகாரம்நாங்கள் பொசிப்பதில்லையென்றார்கள்
எந்தத்திலிச்சையென்று எந்திழையாள்தான்கேட்கப்
பாலின்மேலாசையென்றாள் பிராமணியுமப்போது
பாலும்பழமும் பரிவாகக்கொடுத்துவந்தாள்
காய்ச்சினபால்நாங்கள் கன்னு க்கொள்வதில்லை
கண்காணப்பால்தான் கறந்துதரவேணுமென்றார்
இதுவுமொருசோதனையோ வென்றுமனதிலெண்ணி
ஆற்றைக்கறந்து அடைவாகத்தருவேனென்றார்
அனைக்கயிறுங்கடைக்காலும் அன்பாகத்தானெடுத்து
காராவினண்டையிலே காரிகையாள்தான்வரவே
கொல்லவந்தகூற்றுவனும் துடுக்குடனேவோடிவந்து
கொம்புதனிலேறிக் கொற்றவனுந்தானிருக்க
அதனைவென்றுதானும் அமராவதிவரவே
அப்போதுபசுவுக் கதிகோபமுண்டாக்க
காடிகழுநீர கலந்துவைப்பதில்லையென்று
வைக்கல்பிடுங்கி வாரியேவைக்கையிலே
குத்தியெடுக்கக் கூறியகொம்பதனால்
இருந்தாள்அமரா வதியுமிகக்கலங்கிக்
கதறக்கொடுத்தாளே காரிகையாளந்நேரம்
ஏங்கியழுதாள் எமலோகந்தானறிய



தருமங்கள்செய்ததிலே தனக்கேடுவந்ததுண்டோ
பொல்லாதகாலமாய்ப் பூனைக்குறுக்கிடவும்
துர்க்குறிகள்காட்டினதுஞ் சோதனையுமுண்டாச்சு
ஏதுகுறைகளுண்டோ என்னமோவென்றுசொல்லி
எண்ணுதுமென்னை வேங்கையுயிர்பிரிந்தாள்
கொல்லவந்தகூற்றுவனும் கோலப்பிராமணியும்
பாசக்கயிறும் பறுவலையுந்தானெடுத்து
கட்டினாரப்போது கன்மண்டைதான்பிதுங்க
இரும்புத்தடியால் இரக்கமற்றுதானடித்துப்
பாப்பாத்திகளியவள் பாசக்கயிர்பிடித்து
அடித்தாளேகூற்றுவனும் அமராவதியாளைக்
காமவல்லியென்றுமொரு காத்துவந்துவீசிடவே
ஆகாரமின்றெனியு மதிகோபத்தோடுவந்து
இருப்புத்தடிமுறித்து இரக்கமற்றுத்தான்விழவே
பாசக்கயிறும் பருவலையுந்தான்தெறிக்க
அப்போதுகூற்றுவனு மானபிராமணியுந்
திடுக்கிட்டுநின்று தடுமாறியந்நேரம்
இத்தனைக்குந்தருமங்கள் இனிதாகச்செய்தாளே
இவளைநாம்விட்டுவிட்டால் இயர்கணக்கரேதுசொல்வார்
கோபித்துக்கண்சிறிக் கொலைகடலிற்போட்டிடுவார்
எப்படியுந்தானிவளைக் கொண்டுபோவோமென்று
இருபேருமாகவே நினைந்துமேதானுணர்ந்து
வலைக்கயிறுதானெடுத்து வரியவேதான்பூட்டிக்
கட்டியிழுத்தார்கள் காரிகையையந்நேரம்
கண்கள்தெறித்துவிழக் கட்டியிழுத்தார்கள்
கொண்டுவந்துவிட்டார்கள் கொற்றவர்முன்பாகச்
சித்திரபுத்திரருஞ் சீறியேயதுசொல்வார்
தருமத்தைத்தானே தயவாய்நினைக்காயே
என்றுசொல்லிநற்கணக்கர் இருகண்ணுந்தான்சிவக்க
காட்டிக்கொடுத்தாரே கடுந்தூதர்கிட்டவுந்தான்
பின்கட்டாய்க்கட்டிப் பிடரியிலேகுத்தியென்று
செப்புத்தூணோடே சேரவேகட்டுமென்றார்
உச்சிதனிலாணி யோங்கியடியுமென்றார்
அமராவதிக்கு அதிகோபமுண்டாகி
தண்ணீர்தவிக்குதென்றாள் தாமக்குழலாளும்
சித்திரபுத்திரனார் சீமானார்தான்கேட்டு

செய்மையுருக்கித் தெளியவைத்துக்கொடுங்களென்றார்
அந்தப்படி தூதுவர்க ளமராவதியாட்கு
பாணக்கமென்று பதிவாகத்தான்குடித்தாள்
இதையுமறிந்தாரே யியலான நற்கணக்கர்
மழுவையுங்காய்ச்சி வைக்கவேசொன்னார்காண்
சந்தனசேருகத் தான்குளிர்ச்சியானதுவே
அப்போதொருகாற்று அவனிதனில்வந்தடித்து
கயறுதெரித்துக் கடுந்தூரந்தான்விழவே
கணக்கருமப்போது கடுங்கோபமுண்டாகி
ஐந்நூறுகாத மகலமுள்ளகாட்டூடே
கல்லுங்கறடுங் கார்முள்ளுந்தான்படவே
கட்டியிழுங்களென்றார் கண்விழிகள்தான்பிதுங்க
இந்தப்படிகாடெல்லாம் இழுக்கலுற்றார் தூதுவர்கள்
அந்நேரங்காட்டி லதிசயங்களுண்டாச்சு
பொல்லாதகாடெல்லாம் பூங்காவனமாச்சு
புட்பங்கள்தான்சொரிய பூஞ்சோலையுண்டாச்சு
சாந்துபுனுகு சவ்வாதுமணந்தான்வீச
தாமரைத்தடாகங்கள் தானுமேயுண்டாகி
இந்திரலோகம்போ லிருந்தாளப்பெண்கொடியும்
வாசம்பொருந்தியே மனமகிழ்ந்துதானிருந்தாள்
தருமங்களானதெல்லாந் தற்காத்துநின்றனவே
வந்தக்காற்றுக்கூடிக் கயிறுந்தெரித்ததுவே
ஓடிவந்துதூதர் வுரைத்தார்கணக்கருடன்
பொல்லாதகாடெல்லாம் பூங்காவனமாச்சு
ஆனையைக்கட்டுங் கயிறுமறுந்ததென்றார்
இத்தனையுங்கேட்டு இயற்கணக்கரந்நேரம்
செப்புத்தூணோடே சேர்ந்துஇருக்குமென்றார்
கொல்லரைக்கூட்டிவந்து குறடுகள்தான்காய்ச்சி
காய்ச்சிப்பிடுங்கவுமே கம்மாளர்வந்துநிற்க
அமராவதியு மபயமிடத்தொடுத்தாள்
கண்கள்தெரித்துவிழக் கன்னத்திற்போடுமென்றான்
தண்ணீர்தாகத்துக்கென்றாள் தாமக்குழலாளும்
ஈயத்தைக்காய்ச்சி யிதம்பெறவேதான்கொடுத்தார்
பன்னீர்சலமாகப் பாங்குடனேதான்குடித்தாள்
அதையும்அறிந்தார்காண் ஆனதொருநற்கணக்கர்
இருப்புலக்கையாலே யடியென்றுருத்தமனார்



அந்நேரஞ்செட்டிச்சி யானைபோல்வீறிடவே
வீறிட்டசத்தம் விமலனார்தாமறிந்து
சிருட்டித்தாரந்நேரஞ் செட்டிச்சிநோகாமல்
மின்னலுமழையு மிகவேதானுண்டாகி
காற்றும்புயலுங் கனமாகிவந்திடவே
செப்புத்தூணெல்லாஞ் சேரத்தளிர்த்ததுவே
கொல்லர்முகமுங் குளிர்ச்சிகளானதுவே
தாமக்குழலாளுந் தற்சொரூபமாயிருந்தாள்
இன்னமொருவுபாய மெடுத்தாரேயுத்தமனார்
அரையளவுகுழிகள் ஆழமாவெட்டியதில்
செட்டிச்சியம்மைதனைச் சீராகத்தானிறுத்தி
கைகள்தனைப்பின்னுங் கட்டாகத்தானிறுக்கி
உச்சிமயிரை யொருமிக்கத்தான்வகிர்ந்து
மூன்றுதிசையாத்தில் மூன்றுவகையால்முகந்து
ஆனைதனைக்கொண்டுடற யடித்துவிடுமென்றுரைத்தார்
இந்தமொழிகேட்டுடனே யெங்கிளைபைங்கொடியும்
அப்போதுதூதுவர்கள் அதுசெய்யவந்தவுடன்
தருமங்கள்செய்ததெல்லாம் தழைத்துமிகவோடிவந்து
காற்றும்புயலுங் கடுகெனவேதானடித்து
எல்லாரையுந்தாக்கி யெறிந்ததேபூமியிலே
அதையுமறிந்தார்கள் ஆனதொருநற்கணக்கர்
அட்டைகுளத்திலெழுந்தவேதன்னுமென்றார்
தாமரைத்தடாகமாய்த் தானுமேயுண்டாச்சு
அட்டைகுளத்திலெழுந்திநிற்கும்பாவிகளும்
செட்டிச்சியாலே சிவலோகஞ்சேர்ந்தார்கள்
வாசம்பொருந்தி மணந்ததேயக்குளமும்
செக்கிலேபோட்டுத் திருகுமென்றாரரிவையை
வாணியரைக்கூட்டிவந்து வடங்களுந்தான்முறுக்க
அந்தச்சமையத்தில் அங்கொருவரில்லாமல்
தாயில்லாபிள்ளை நின்று தவிக்கிறதைக்கண்டாளே
பிள்ளைகளையெடுத்து புழுதியெல்லாந்துடைத்து
கண்ணீர்துடைத்துக் கடுகவனுப்பினளே
ஆதரவுசொல்லி யனுப்பினாள்பிள்ளைதனை
உடனேவடமுறுக்கி யோடிவந்தார்வாணியருஞ்
செட்டிச்சியம்மைதனைச் செக்கிலேதான்போட்டு
ஆட்டவேணுமென்று அங்குவந்தாரந்நேரம்





செட்டிச்சியுமப்போ சிவனை நினைந்தழுதாள்
அப்போதொருகாற்று அவனிதனிலுண்டாகி
செக்குந்தகர்த்தவுடன் செக்குலக்கைதான்முறிந்து
ஓடியேனாலவர்க ளொருவருமேகாணமல்
அந்நேரம்வாணியர்கள் அதுசெய்திகண்டவுடன்
வந்துமேசொல்லுகிறார் வாய்த்தகணக்கருடன்
ஆகாசகாற்று அதிககோபமாகவந்து
செக்குத்தகர்ந்து செக்குலக்கைதான்முறிந்து
வோடினார்னாலவர்க ளொருவருமேதான்காணேம்
அமராவதியாளு மன்னம்போலவேயிருந்தாள்
கணக்கரிதைகேட்டவுடன் கண்களிரண்டுஞ்சிவந்து
அமராவதியாளை யழிநரகில்தள்ளுமென்றார்
நரகத்தைக்கண்டாளே நல்லதொருமாதும்
நரகத்திலேகிடந்த பாவியர்களெல்லோரும்
செட்டிச்சிபார்த்தவுடன் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
நரகக்குழிகளெல்லாம் நல்லகுழியாயினதே
அதையுமறிந்தாரே ஆனதொருயிக்கணக்கர்
எண்ணெயும்பிண்ணாக்கும் எடுக்கவென்றாரவள் தலையில்
விற்றுவரச்சொல்லி விடைகொடுத்தாரந்நேரம்
அந்நேரந்தானவர்கள் அவள் தலையிற்றானெடுத்து
வழுதெருவும் மியல்பாககூறிடவே
கொள்ளுவாருமில்லைக் கூப்பிடுவார்தானுமில்லை
பட்டணத்திலுள்ள பலபேர்களெல்லோரும்
புண்ணியரைச்சற்று புகழ்ந்தறியாப்பாவியிட
யெண்ணெயும்புண்ணாக்கு மினிவாங்கக்காலமென்று
செட்டிச்சியைக்கண்டவுடன் தெருக்கதவைத்தானடை, [தா.
தெருவுகளெல்லாம் சேரவேதான்சுமந்து
கழுத்துத்தெரிக்க கண்மண்டைதான்பிதுங்க
அமராவதியாளும் அனியாயமென்றழுதாள்
அய்யோகோதெய்வமே அரும்பாவம்செய்தோமே
இந்தவிதிகளெல்லாம் எனக்கேன்வரவேணும்
விதியைநினைந்தந்தணர் வீதியில்வந்தவுடன்
அதிலொருபிராமணியும் அந்நேரமோடிவந்து
எண்ணெயும்பிண்ணாக்கும் இரக்குமென்றாளப்போது
அந்தட்சணமே யிரக்கினளப்போது
தண்ணீர்தவிக்குதென்றாள் தாமக்குழலாளும்

நீர்மோர்ப்பெருக்கி நிறையவேகொண்டுவந்தார்
கொண்டுவந்தமோரை குடித்தாள்வயிறுமட்ட
தாகந்தெளிந்து தளைதீர்ந்தாள்செட்டிச்சி
பிராமணியுமப்போ பெருத்தமொழியுரைத்தாள்
அமராவதியாள் அருகிருந்துகேட்கலுற்றாள்
அன்னமேதேனே யமராவதியாளே
நீயெத்தனை தருமம் நிலையாகச்செய்தாலும்
சித்திரபுத்திரரைச் சிந்தையில்வையாமல்
புண்ணியமென்று புத்திதனில்வையாமல்
இயமதருமர்வாசலிலே யிருந்துகணக்கெழுதப்
பசுவின்வயிற்றில் பாலகனாய்வந்தவரை
அவரை நினையாமல் அனியாயம்போனதென்ன
தருமங்களெல்லாம் தவிடுபொடியாக்கிடுவார்.
அண்டபுவனமெல்லா மறிந்துகணக்கெழுதப்
புண்ணியனார்வந்து பிறந்ததறியாளோ.
இத்தனைபாடுபட்டும் எள்ளளவும்புத்தியில்லை
அவரை நினையாமல் அவதிப்பட்டாயே
அவர்நோன்பிருக்க அறிவிக்கவேணுமென்று
உன்னாலேதானு முலகெங்குந்தானறிய
கூட்டிவைத்தேயுன்னைக் கோறணிகள்செய்தினார்
என்றேபிராமணியும் எடுத்துரைத்தாளந்நேரம்
அமராவதியாட்கும் அறிவுமிகவுண்டாகி
சித்திரபுத்திரரே சிவனார்பெருங்கணக்கா
பாவங்கள்புண்ணியங்கள் பகுத்தெழுதவந்தீரோ
காணாதகாட்சியெல்லாங் கட்டிவைத்தார்சீமானும்
அவரை நினையாம லல்லலெல்லாம்பட்டேனே
அறியாமல்நானும் அவதியுற்றேனென்றுசொல்லி
மண்ணில்விழுந்து மலரடியைத்தெண்டனிட்டு
அறிவெனக்குவந்ததையா ஆனதொருபாலகரே
செய்பிழைபொறுப்பீரென்று சொல்லியேதெண்டனிட்
கணக்கருமப்போது கருணைமிகவுண்டாகி [டாள்
சித்தந்திரும்பித் திருவாய்மலர்ந்தருளி
மெத்தமனமகிழ்ந்து வேகமெல்லாந்தால்தணிந்து
என்னை நினைந்ததினால் என்னோடுடன்பிறப்பும்
இவளுக்குநற்பலனு மினிகொடுப்போமென்றுசொல்லி



ஸ்நானங்கள்பண்ணிவரத் தாமேயனுப்பினர்கண்
ஸ்நானங்கள்செய்து தவக்குறையுந்தான்முடித்து
சிவனை நினைந்து திருநீறுந்தானணிந்து
சித்திரபுத்திரரே சீமானேயென்றுசொல்லி
கணக்கரிடத்திலே காரிகையாள்வந்துநின்றாள்
அந்நேரமுங்கணக்கர் ஆனையைவரவழைத்து
திருமஞ்சனங்கொண்டுவந்து சிறக்கவேதான்சொரிந்து
பட்டுமுதலுள்ளதெல்லாம் பண்பாகத்தான்கொடுத்தார்
ஆபரணமெல்லா மழகாகத்தான்கொடுத்தார்
எல்லாப்பதமு மினிமையாய்த்தான்கொடுத்தார்
அந்நேரமேதானும் அமராவதியாளும்
தருமத்தையெல்லாம்நான் தவறாமல்செய்திடவும்
என்னையெழுத்துவந்து இடறுகள்செய்வானேன்
வகைவிபரமாக வசனிக்கவேணுமென்றாள்
அப்போதுநற்கணக்கர் அறிவித்தாருத்தமிக்கு
உன்னாலேயென்பே ருலகமெல்லாந்தானறிய
செய்துவைத்தேனுத்தமியே செய்தபிழைபொறுப்பாய்
எந்நோன்பிருந்தவர்கள் இகபரங்கள்தானடைவார்
இந்தவிரதம் எடுத்திராப்பாவியர்க்கு
நீபட்டதெண்டனைகள் நிலையாகத்தானடக்கும்
அப்படிக்குவாராமல் உன்னையழைத்துவந்தோம்
உன்னாலேமோட்ச மடையவென்றேயுன்னைநான்
கூட்டிவந்ததென்றவுடன் கொம்பனையாள்கேட்டிடுவாள்
அறிவித்தால்நானு மப்படியேநடப்பேனென
சொல்லுகிறேன்கேளாய் சுகமானவென்பிறப்பே
சித்திரைமாதம் பதினெட்டாம்தேதியிலே
சித்திரைக்குச்சித்திரையில் சீரார்பவுரணையில்
பூதலத்திலுள்ள புகழ்ந்தமனுச்செந்துவெல்லாம்
ஆண்பெண்ணுடனே யடைவாகநோன்பிருந்து
ஆறுகுளத்திலே யன்பாகத்தான்முழுகி
திருநீறணிந்து சிவனைமிகவணங்கி
சூரியநமஸ்காரந் தொழுதுமிகவணங்கி
சாந்தாற்றறைமெழுகிச் சந்தனத்தால்கோலமிட்டு
வாழைக்கரும்பு வான்கமுகுவாழையுடன்
பழக்குலைகளாலே பந்தக்கால்தானிருத்தி
மஞ்சள்குலையும் மாங்குலையுந்தான்தூக்கி

பலகைதனைப்போட்டுப் பாவாடைமேல்விரித்து
வேழமுகத்து விநாயகனைமுன்புவைத்து
பூரணகும்பம்வைத்துப் பொன்னின்விளக்கேற்றி
நிறைநாழிவைத்து நிறைமரக்கால்தானும்வைத்து
அடைக்காயும்வெள்ளிலையும் அன்புடனேதான்படைத்
கடலைதுவரைமுதல் காராமணிப்பயறும் [து
பயறுவகையுள்ளதெல்லாம் பாங்குடனேதான்படைத்து
பலகாரவகைகள் பாங்காகச்செய்துவைத்து
பருப்பரிசிபானக்கம் பாங்குடனே தானும்வைத்து
பொன்னினெழுத்தாணியுடன் புத்தகமும்கூடவைத்து
உப்புமுதற்கற்பூர முள்ளதெல்லாந்தான்படைத்து
என்னுபருத்தி யேற்றதொருமுத்துகளும்
இத்தனையும்நன்றா யியல்பாகவைத்தபின்பு
புதுப்பானைதன்னிலே பொங்கலிட்டுஇறக்கி
இருக்கன்னமுதந் சேகரமாய்வைத்திறக்கி
புத்துருக்குநெய்யும் பொரிக்கறியும்பாற்குழம்பும்
கறிவகைகளுள்ளதையுங் கட்டாகத்தான்படைத்து
தயிருமறைத்துவைத்துச் சக்கரைவர்க்கமுடன்
நேமநிட்டையாக நைவேத்தியஞ்செய்து
அரகராவென்று அடிபணிந்துதெண்டனிட்டு
தூபம்கைகாட்டித் தோத்திரங்கள்செய்துநன்றாய்
சூடன்பணிமாறிச் குழக்குலவையிட்டு
வாத்தியங்களெல்லாம் வகைவகையாய்த்தான்முழங்க
ஆண்டவரேயென்று அடிபணிந்துதெண்டனிட்டு
ஆசாரியர்தன்னை யன்புடனேகூட்டிவந்து
கட்டாகநன்றாய்க் கதைகள்படிக்கவைத்து
இன்பமாய்த்தானிருந்து இக்கதையைத்தான்கேட்க
கேட்டுமுடிந்தபின்பு கிருபைவரத்தெண்டனிட்டு
இப்படியேநோன்பு இயல்பாயிருந்தவர்க்கு
இந்தக்கதையை யெழுதிப்படித்தோர்க்கும்
எல்லாப்பதமும் கொடுப்போமேந்திழையே
புத்திரசம்பத்தும் புண்ணியமுண்டாகும்
மங்கிலியம்வாழ்ந்து மக்கள்தழைத்திருப்பார்
இந்தப்படிநோன்பு எல்லோருந்தானிருக்க
பூலோகமெல்லாம் புகழ்ந்துபறைசாற்றிடென்று
இந்தப்படி கணக்க மியல்பாயுரைத்திடவே



நயினுரைத்தபடி நன்றாய்கருத்தில்வைத்து
தப்பாமல்நோன்பிருந்து தவம்பெறுவோமுத்தமரே
சித்திரபுத்திரரே சீமானே நீர்கேளீர்
உயிரோடேசொர்க்கம் வரவழைத்துக்கொண்டாக்கால்
இப்போதேயென்னை யிங்கேவரவழைத்தால்
என்கர்மமெல்லாந் தவிர்ந்துவிடுமென்றுசொல்ல
சித்திரபுத்திரற்குச் சிந்தைமிகவுண்டாகி
பூலோகத்திற்போய் பொருந்தவேதான்வந்து
தருமங்களெல்லாம் தப்பாமற்செய்யவுமே
போகவிடைகொடுப்போம் பொற்கொடியேகேளென்றான்
நூறுவயதிருப்பாய் நாளொன்றுசென்றபின்பு
உன்னையும்தானு முடனழைத்துக்கொள்ளுகிறேன்
ஆனதினால்நீயு மாக்கையழியுமுன்னே
பூந்தேரிலேறி போய்வாருமென்றுசொல்ல
அப்படியேதேரேறி அமராவதிவருமுன்
அப்பால்நடக்கு மதிசயத்தைக்கேளுமினி
கூரியகொம்பதினால் கொன்றபசுத்தானும்
இறையுமருந்தாமல் இனத்தோடுங்கூடாமல்
கண்ணீரொழுகி கதறுதேநற்பசுவும்
அமராவதியாளென் அன்னையிறந்தாளென்று
ஊராருறவுள்ளா ருற்றார்கள்தான்கூடி
கூப்பிட்டழுது கோவிந்தாவென்றிடவே
ஆண்டிபரதேசி அனியாயமென்பதுவே
அமராவதிகட்டை யன்பாகத்தானெடுத்து
செய்யுஞ்சடங்குகளைச் சீக்கிரமாய்த்தான்முடித்து
மஞ்சளையும்பூசி மலர்களுந்தான்சூட்டி
பட்டமுடுத்திப் பாவாடைமேற்போட்டு
மாலைகழுத்திலிட்டு மருக்கொழுந்துதானணிந்தார்
பூந்தேருங்கட்டிப் புட்பமலங்கரித்து
வாத்தியங்களெல்லாம் வரிசையாய்த்தான்முழங்கி
குலவைதனைமுழங்கி கோவிந்தாவென்றுசொல்லி
அமராவதிகட்டை யானதொருபூந்தேரில்
வைத்துமேதானெடுத்து வானமெல்லாந்தான்முழங்கி
மயானக்கரையில் வகையாகப்படுத்திவிட்டு
சந்தனக்கட்டை சதிராகத்தானடுக்கி
கருமங்கள்செய்தார்கள் காரிகைக்குமப்போது

கொள்ளிகள்வைத்து குடமுமுடைத்தார்கள்
இந்தப்படியா யிருக்குமந்தத்தருவாயில்
வாய்க்கரிசிபோட்டார்கள் வந்தவர்களெல்லோரும்
அமராவதியாளை அனுப்பினாரந்நேரம்
மயான துறைக்கு வந்தாளேதேரோடும்
கட்டையிலேயிட்ட கனத்தவுடல்புகுந்தவுடன்
செட்டிச்சியார் தனக்குச் சிவன்பிறந்ததுவே
நித்திரைதெளிந்ததுபோல் நினைவுமிகவுண்டாகி
சிவசிவாவென்று சிவனைமிகத்தொழுதாள்
திசைநோக்கித்தானும் தெண்டனிட்டாளுத்தமியும்
நன்மையுந்துன்மையும் நடுவெழுதவந்தவரே
காணாதகாட்சியெல்லாம் காட்டிவைத்தீர்சீமானே
படாதபாடெல்லாம் படுத்திவைத்தீர்சீமானே
இப்படிநினைந்து எங்கினளுத்தமியும்
அடுக்கினகட்டையெல்லாம் ஆல்போல்தளர்ந்திடவே
அமராவதியாள் அகத்திலேவந்தவுடன்
உற்றுறவுடையார் ஊராரைகூட்டிவந்து
போசனம்பண்ணுவித்துப் போகவிடைகொடுத்தாள்
தருமங்களெல்லாந் தப்பாமல்செய்திடுவாள்
நயினார்நோன்பு நன்றாகவிருக்கவென்று
நயினார்தம்மிடத்தில் நன்றாயறிவித்தாள்
தர்மராசாவுமப்போ தானுமிகப்பயந்து
ஸ்ரீபுருஷன்தானுஞ் சிறக்கவேநோன்பிருந்தார்
சித்திரைமாதம் பதினெட்டாந்தேதியிலே
சித்திரைக்குசித்திரையிற் சிறப்பவுரணையில்
பறையோசைகேட்டுப் பதம்பெற்றேமென்றுசொல்லி
பூலோகத்திலுள்ள புகழ்ந்தமானுடரெல்லாம்
நயினார்திருநோன்பு நன்றாகத்தானிருங்கள்
என்றுசொல்லிவள்ளுவனும் எடுத்துப்பறைசாற்றிட
பலகைகளைப்போட்டு பாவாடைமேல்விரித்து
நிறைநாழிவைத்து நிறைபறக்கால்தானும்வைத்து
தேங்காய்பழமுஞ் சிறக்கவேதானும்வைத்து
சர்க்கரையெள்ளுருண்டை சகலபதார்த்தமுடன்
பருப்பரிசிபானகம் பாக்குடனே தான்படைத்துக்
கறிவகைகளுடனெல்லாங் கட்டாகத்தான்படைத்துப்
பொங்கலுமிட்டுப் போதமிகப்படைத்துந்



திருக்கண்ணமுதஞ் சேகரமாய்த்தானும்வைத்துப்
புத்துருக்குநெய்யும் போதவேதான்படைத்துத்
தூபதீபங்காட்டித் தோத்திரங்கள்தான்செய்ய
தெண்டனிட்டுத்தான்பணிந்து திருநீறுந்தானணிந்து
ஏங்கிப்பரதவித்து இருக்குந்தருவாயில்
[illegible]த்தமனார்தாமு முடனேயறிந்தார்காண்
இதற்கென்னசெய்வோமென்று ஏற்றபடிநினைத்தார்
பார்வதியாளிடத்திற் பண்பாகச்சொல்லவென்று
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகத்தான்பார்த்து
எந்தன்பிறப்புவளர்ப் பெல்லோருந்தாமறிய
என்னோன்புநல்விரதம் எல்லோருந்தாமிருக்க
வேணுமென்றுநினைந்து மேன்மையுள்ளசெட்டிச்சி
அமராவதியாளை யன்புடையமாதரசை
வரவழைத்துநானும் வகைப்படிசொல்லிவிட்டேன்
சொன்னபடியவளும் தோத்திரங்கள்செய்துமிகப்
பூலோகத்துள்ள புகழ்ந்துமானுடர்க்குரைத்தாள்
விரதமிருந்து விஸ்தாரஞ்செய்துவைத்தாள்
எந்தன்பிறப்பை எடுத்துரைக்கயாருமில்லை
சிவனுமப்போது சிந்தைமிகவுண்டாகிப்
பார்வதியம்மாளைப் பக்கத்திற்றானழைத்து
புத்திரர்நற்பிறப்பை போர்வைமிகநீயும்
பூலோகந்தானறியப் போய்சொல்லுமென்றுரைத்தார்
பாப்பாத்திவேஷம் புகுந்தாளேபார்வதியும்
கையிற்பிரம்புங் கனத்தவொருபுத்தகமுந்
தானெடுத்துக்கொண்டு சதுராகவந்திருந்து
ஏதுக்குநீயும் இளைப்புடனேயிருக்கின்றாய்
என்னுடனே நீயும் உரைத்திடுவாயுத்தமியே
அமராவதியாள் அறிவுமிகவுண்டாகி
நயினார்திருநோன்பு நாங்களிருக்கின்றோம்
அவருடையபிறப்பை யறிவிப்பாரில்லாமல்
தயங்குகிறோமென்றாள் தாமக்குழலாளும்
அப்போதுபிராமணியும் அவிழ்த்தாளேபுத்தகத்தைக்
கேளுங்களிக்கதையைக் கிருபையுடன்சொல்லுகிறேன்
நாட்டுக்கணக்கர் நயனார்பெருங்கணக்கர்
பூலோகத்துள்ள புகழ்ந்தமானுடருக்கும்
நன்மையுந்துன்மையும் நடுவெழுதவேணுமென்று

எமதர்மர்வாசலிலே யிருந்துகணக்கெழுதும்
பிறப்பும்வளர்ப்பும் போரானநல்வளரும்
தவத்தாலேவந்தகதை தானேயுரைத்திடுவாள்
தவத்தருமைகண்டு சந்ததியாய்வந்ததுவும்
பசுவின்வயிற்றிற் பாலன்பிறந்ததுவுஞ்
சம்புதலத்திற் றுமரையாயிருந்ததுவும்
எல்லாக்கதையும் எடுத்துரைத்தாள்பிராமணியும்
புத்தகருந்தானும் பொன்னினெழுத்தாணியுடன்
கேட்டார்களெல்லோரும் கிருபையுடனேயிருந்து
தெண்டனிட்டுதான்பணிந்து திருநீறுவாங்கிவிட்டார்
சாந்துசவ்வாது சந்தனமுந்தான்கொடுத்தார்
அடைக்காயும்வெள்ளிலையும் அன்புடனேதான்கொடுப்
மாலைகழுத்திலிட்டார் மண்டலமெல்லாமறிய [பார்
ஆபரணபூஷணமு மன்பாகத்தான்கொடுத்தார்
இப்படியேவரிசைபெற்று பேதைஞன்பார்வதியும்
புத்திரனிடத்திற்றுப் போனதொருசேதியெல்லாஞ்
சிவனுருங்கேட்கச் சிந்தைகளிகூர்ந்து
செப்பினன்பார்வதியும் சேதியொன் றந்தப்பாமல்
பூலோகந்தோன்றி போனதெல்லாஞ்சொன்னவுடன்
புத்திருமப்படியே புகழ்ந்துமிகத்தொழுது
இயமனிடம்வருவதற்கு யேற்றவிடைவாங்கி
புத்திருமவந்து புகழ்ந்துமேதானிருந்தார்
இந்தக்கதையை யின்பமாய்க்கேட்டவுடன்
அமராவதியாட்கு ஆறுமிகவுண்டாகிச்
செல்வங்களெல்லாம் சேரவேயுண்டாகி
நானுக்குநானதிகம் நன்றாய்நடைத்ததுகாண்
கேட்டபேரெல்லோரும் கிளைகளுடன்வாழ்ந்திருப்பார்
நினைத்தபடிமுடித்து நித்தியவாழ்ந்தார்கள்
அமராவதியாட்கு ஆண்டுநிறைந்ததுவே
நோன்புகள்செய்தாட்கு நாறுண்டுசென்றவுடன்
சித்திரபுத்திரருஞ் சிந்தைகளிலேதெரிந்து
நோன்புமறவாமல் நாறுண்டுந்தானிருந்தாள்
அவளையுமிங்கே யழைக்கவேவேணுமென்று
கூட்டோடேசொர்க்கத்திற் கூட்டிவரவேணுமென்று
பூந்தேரனுப்பினர் புண்ணியரன்புடனே
அந்நேரந்தானும் அமராவதியாளும்



நூறுவயதளவு நோன்புவிடாதிருந்தாள்
சிவலோகம்போகிறேன் செகத்துள்ளபுண்ணியரே
நோன்புவிரதத்தை நுணுக்கமாய்த்தானறிந்து
ஆண்டாண்டுகள்தோறு மன்பாகத்தானிருந்து
கிருபைபெறவேயிருந்து கேளுங்களிக்கதையைப்
பயபக்தியாயிருந்து பலன்பெறுங்கள்புண்ணியரே
என்றுமிகச்சொல்லி யேற்றதொருவுத்தமியும்
அந்தியகாலம் அடுக்கவேவந்திடவே
தானதருமங்கள் தயவாகத்தான்கொடுத்தாள்
பிராமணபோசனங்கள் பிரியமாய்நடத்திவைத்தாள்
சிவபூசைகுருபூசை செய்துமேதான்முடித்துக்
கூட்டோடேசொர்க்கத்தில் கூடுகிறேனெனவுரைத்தாள்
இந்தப்படிசொல்லி யிருக்குந்தருவாயில்
அந்நேரம்வந்துகாண அழகானபூந்தேரும்
அமராவதியும் அவள்தர்மாசாவும்
இருபேருமொன்றாய் எறினார்தேர்மீதில்
சிவகணங்கள்வந்து தேர்கொண்டுபோனார்கள்
பூமாரியாகப் பொழிந்தார்களந்நேரம்
பரமசிவனும் பார்வதியுமிதுகண்டு
சொர்க்கத்துவாசலையுந் திறக்கவேசொன்னார்காண்
சித்திரபுத்திரரைச் சென்றுமேதெண்டனிட்டு
சிவனேடிமையாளைச் சேரவேதெண்டனிட்டு
சிவனிடத்தில் செப்பினளுத்தமியாள்
தருமங்கள்செய்யவின்னந் தரணிதனிற்பிறக்க
புத்திருமப்படியே பொருந்திப்பிறப்பதற்குப்
பிரமாவைப்பார்த்துப் பிறப்பிக்கச்சொல்லினார்காண்
அந்நேரம்பிர்மாவும் அகமகிழ்ந்துகொண்டாடி
தலைமகளாகப் பிறப்பித்தாரந்நேரம்
தருமாசாவைத் தலைமகனுப்பிறப்பித்தார்
ஒருவர்க்கொருவர் ஒப்புறவாய்வாழ்ந்திருந்தார்
அந்தப்பிறவியிலும் அப்படியேதானதர்மம்
புண்ணியங்களெல்லாம் புகழ்ந்துநடத்தினர்காண்
அன்னக்கொடிகட்டி யடைவாகத்தான்வாழ்ந்து
தவறாமல்நோன்பு தானிருந்ததுபார்த்து
எல்லோருமந்நோன்பைத் தவறாதுநடத்தினார்கள்
ஆனபடிவாழ்ந்தே யாண்டுநூறானபின்பு

சித்திரபுத்திரருந் தேரையனுப்பினர்காண் ௳
கூட்டிவைத்துவிட்டார்கள் குற்றமில்லையிருவரையும்
இன்னமுந்தான்பிறக்க வேணுமோயேந்திழையே
என்றுசித்திரபுத்திரர் இதமாகத்தான்கேட்க
இறப்பதுவும்பிறப்பதுவும் இனியெனக்குஆகாது
கலியுகங்கள்வந்து கலந்ததேபுண்ணியரே
நட்சேத்திரபதவி நலமாகவருளுமெனச்
சிவனுரைத்திலவர் செய்திகள்தானுரைத்து
அந்நேரம்பிரமா அப்படியேசெப்புகைக்க
நட்சேத்திரப்பதத்தில் நான்குடனேவாழ்ந்திருந்தார்
இந்தக்கதையை யெடுத்துரைக்கக்கேட்டவர்கள்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி
மூங்கில்போலன்னைசுற்றம் முசியாமல்வாழியவே
பூலோகமெல்லாம் பொருந்தாமல்வாழியவே
எல்லோரும்நன்று யினிதாகவாழியவே
சித்திரபுத்திரனார் சீமானும்வாழியவே
பொன்னிமுத்தாளியுடன் புத்தகரும்வாழியவே
நெல்வேலிநாதர் நெடுங்காவல்வாழியவே
காந்திமதியம்மாளும் கனைபதியும்வாழியவே

அமராவதிகதை முற்றிற்று.